வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P . 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu வார மலர்

Email : eelanaduweekly@gmail.com | மலர் : 05 | 10.03.2024 ஞாயிற்றுக்கிழமை | இதழ் : 63 | பக்கங்கள் : 16







07
மக்களவை மகா யுத்தம்; தாழியை உடைக்கும் தலைவர்கள்!



08
6ஆம் திருத்தச் சட்டம் 13ஆம் திருத்த சட்டம் கூறும் செய்தி என்ன?



09
காவல்துறை அதிகாரம் கிடையாது பதின்மூன்று மைனஸ் ஆகிறது!




10
கோட்டாவின் புத்தகம்

# ரணிலை ஆதரிப்பதில் மொட்டுக்குள் சிக்கல்!

## அடுத்த சந்திப்பில் இறுதி முடிவு



கொழும்பு, மார்ச் 10

**ஜனாதிபதி தேர்தலில் ரணில் விக்கிரம சிங்கவுக்கு ஆதரவு வழங்குவது தொடர்பில் கொள்கை ரீதியிலான பிரச்னை உள்ளது என்று பொதுஜன பெரமுன கட்சியின் தலைவர் மகிந்த ராஜபக்ஷவும், ஸ்தாபகரான பஸில் ராஜபக்ஷவும் தெரிவித்துள்ளனர்.**

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும், மஹிந்த ராஜபக்ஷ மற்றும் பஸில் ராஜபக்ஷவுக்கும் இடையிலான சந்திப்பு கடந்த வியாழக்கிழமை இரவு நடைபெற்றது.

ஜனாதிபதி தேர்தலை மையப்படுத்தியதாகவே இச்சந்திப்பு நடைபெற்றது எனவும், ஜனாதிபதி பணியாட்தொகுதி பிரதானி சாகல ரத்நாயக்கவும் இச்சந்திப்பில் பங்கேற்றுள்ளார்.

"அதிகாரப்பகிர்வு மற்றும் அரச சொத்துகளை தனியார் மயப் படுத்தல் போன்ற செயற்பாடுகளால்

15




வடக்கின் பெரும் போர்

## யாழ். மத்திய கல்லூரியை வீழ்த்தியது சென்.ஜோன்ஸ்

யாழ்ப்பாணம், மார்ச் 10

117ஆவது முறையாக நடைபெற்று முடிந்திருக்கும் வடக்கின் பெரும் போர் கிரிக்கெட் போட்டியில் யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரி 10 விக்கெட்டுக்களால் அபார வெற்றியினைப் பதிவு செய்தது.

கடந்த இரண்டு நாட்களாக யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் சொந்த மைதானத்தில் நடைபெற்று இந்த கிரிக்கெட் பெரும் போட்டியின் இரண்டாம் நாள் ஆட்டநிறைவில் யாழ். மத்தி (157) மற்றும் சென். ஜோன்ஸ் கல்லூரி (228) ஆகியவற்றின் முதல் இன்னிங்ஸ் துடுப்பாட்டங்களைத் தொடர்ந்து,

15

## படைகள் வசமுள்ள 67 ஏக்கர் இன்று மக்களிடம் கையளிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 10

வலிகாமம் வடக்கு பகுதியில் இராணுவத்தினர் வசமுள்ள மேலும் 67 ஏக்கர் காணி இன்று ஞாயிற்றுக் கிழமை உரிமையாளர்களிடம் கையளிக்கப்படவுள்ளது.

சுமார் 33 வருடகாலமாக ராணுவத்தின் உயர்பாது காப்பு வலயமாக காணப்பட்ட குறித்த காணி இவ்வாறு விடுவிக்கப்படவுள்ளது.

இதற்கமைய காங்கேசன்துறை தெற்குபகுதியில்

15

## கொழும்பில் மீண்டும் பொலிஸ் பதிவுகள்!

### வெள்ளவத்தை, பம்பலப்பிட்டியில் விண்ணப்ப படிவங்கள் விநியோகம்

கொழும்பு, மார்ச் 10

தலைநகர் கொழும்பில் ஈழத்தமிழர்கள் மற்றும் மலையகத் தமிழர்கள் பெரும்பான்மையாக வாழும் வெள்ளவத்தை, பம்பலப்பிட்டி மற்றும் கொள்ளுப் பிட்டி ஆகிய பிரதேசங்களில் பொலிஸார் விண்ணப் பப் படிவங்களை நேற்று முன் தினம் வெள்ளிக் கிழமை வழங்கியுள்ளனர்.

வீடுகளில் வாழும் குடும்ப உறுப்பினர்கள் மற்றும் வாடகை குடியிருப்பாளர்களின் விபரங்களைப் பதிவு செய்யும் நோக்கில் குறித்த

15

## கோட்டாபய இன்னமும் பாடம் கற்காத அறிவிலி

### மனோ கணேசன் காட்டம்

கொழும்பு, மார்ச் 10

'சிங்கள பௌத்தர் பலமடைவது சிறுபான்மையினருக்கு தீங்கு விளைவிக்கும் என்பதனாலேயே தனக்கு எதிரான உள்நாட்டு வெளிநாட்டு சக்திகள் ஒன்று திரண்டு அரகலவை நடத்தினார்கள்' என கோட்டாபய தனது புத்தகத்தில் கூறியிருப்பதானது, வரலாற்று குற்றங்களில் இருந்து இன்னமும் கூட பாடம் படிக்காத ஒரு அறிவிலி என கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் கூறியுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச

15

## பிரதம செயலராக எல்.இளங்கோவன்



யாழ்ப்பாணம், மார்ச் 10

வடக்கு மாகாண பிரதம செயலாளராக தற்போதைய ஜனாதிபதி செயலகத்தின் மேலதிக செயலாளர் எல்.இளங்கோவன் எதிர்வரும் 15ஆம் திகதி நியமிக்கப்படவுள்ளார்.

வடக்கு மாகாணத்தில் ஆளுநரின் செயலாளராகவும், கல்வி அமைச்சின் செயலாளராகவும் அவர் பணியாற்றியிருந்தார்.

15

## சஜித் - ரணில் தரப்பை சங்கமிக்க வைக்க இந்தியா - அமெ. முயற்சி!

### கூறுகிறார் விமல் வீரவன்ஸ

கொழும்பு, மார்ச் 10

ரணில் விக்கிரமசிங்கவையும், சஜித் பிரேமதாசவையும் இணைப்பதற்கு இந்தியாவும், அமெரிக்காவும் முயற்சித்துவருகின்றன - என்று தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ச தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை

15

# வெடுக்குநாறி ஆலயத்தில் பொலிஸார் நடந்துகொண்ட விதம் அடாவடித்தனம்

## அமைச்சர் டக்ளஸ் குற்றச்சாட்டு

கிளிநொச்சி, மார்ச் 10

வெடுக்குநாறிமலை ஆதி சிவன் கோவிலில் சிவராத்திரி வழிபாட்டில் ஈடுபட்டிருந்தவர்கள் மீது பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள் அனைத்தும் அடாவடித்தனம் என சுட்டிக்காட்டிய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இவ்வாறான செயற்பாடுகள் நாட்டில் இன நல்லிணக்கதை சீர்குலைக்கும் வகையில் அமைகின்றது எனவும் தெரிவித்துள்ளார்.

பளைப் பகுதியில் எரிபொருள் நிலைய திறப்புவிழா நிகழ்வு நேற்று காலை நடைபெற்றது. இந்நிகழ்வில் கலந்துகொண்ட அமைச்சரிடம் ஊடகவியலாளர்கள் குறித்த விடயம் தொடர்பில் கேட்டபோதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்- சிவராத்திரிதினம் என்பது இந்துக்களின் முக்கிய சமயம் சார் நிகழ்வாகும். இதனை முன்னிட்டு குறித்த ஆலயத்தில் வழிபாடுகளை மேற்கொள்ள அடியவர்கள் சென்ற போது பொலிசார் தடுத்து நிறுத்தி அடாவடியில் ஈடுபடுத்தியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

குறிப்பாக வெடுக்குநாறிமலை ஆதி சிவன் கோவிலில் நீதிமன்ற அனுமதியுடன் சிவராத்திரி வழிபாட்டில் ஈடுபட்டுக் கொண்டிருந்த சிவ பக்தர்களையும், அவர்களின் வழிபாட்டையும் அவமானப்படுத்தும் வகையில்

15

## இப்படியும் நடக்கிறது

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பற்றி பலதடவைகள் இந்தப் பத்தியில் எழுதியிருக்கின்றோம்.

ஒரு விடயத்தை அவர் எப்படியெல்லாம் கையாள்வார் என்பதை அவருக்கு நெருக்கமானவர்கள் பலதடவைகள் கூறியதை இந்த ஊர்க்குருவி நன்கு அறிவார்.

அவர் பிரதமராக இருந்த போது, அதாவது கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்த போது மகிந்தவை பிரதமர் பதவியில் இருந்து நீக்கிவிட்டு, ரணிலை பிரதமராக நியமித்திருந்தபோது - அப்போது மத்திய வங்கி ஆளுநராக இருந்த கலாநிதி நந்தலால் வீரசிங்கவின் பதவியை நிரந்தரமாக்குவதா அல்லது அவருக்கு பதிலாக புதியவரை நியமிப்பதா என்ற சர்ச்சை ஏற்பட்டது. அவரை பதவியில் தொடர்ந்து இருக்க அனுமதித்தால் அவர் ஓய்வுபெறும்வரை அவரை பதவியில் இருக்க அனுமதிக்கவேண்டியிருக்கும். ஆனால், அவர் அந்தப் பதவியில் தொடர்வது ரணிலுக்கு விருப்பமிருக்கவில்லை.

அவுஸ்திரேலியாவுக்கு புலம் பெயர்ந்து வாழ்ந்துவந்த அவரை வலுக்கட்டாயமாக அழைத்து வந்து அந்தப் பதவியில் அமர்த்தியிருந்த கோட்டாபய, அவரை நீக்குவதற்கு விரும்பாததால் அவரது பதவி அப்போது நிரந்தரமாக்கப்பட்டது.

அதனால் வேறு வழியின்றி அவரை அந்தப் பதவியில் தொடர அப்போதைய பிரதமரான ரணில் அனுமதிக்க வேண்டியதாயிற்று.

ஆனால், இன்று மத்திய வங்கியின் ஊழியர்களுக்கு வரலாற்றில் இல்லாதவாறு சம்பள அதிகரிப்பை அனுமதித்துவிட்டு, இப்போது அதன் ஆளுநருக்கு நாடு முழுவதும் எதிர்ப்பு அலை ஏற்படுவதற்கு ரணிலே சந்தர்ப்பத்தை ஏற்படுத்தியிருக்கிறார் என்று அண்மையில் அவரை நன்கு அறிந்த ஒருவர் தெரிவித்ததுதான் அந்தச் செய்தியை படித்தபோது ஞாபகம் வந்தது.

அண்மையில் சிறிலங்கா குடியரசு முன்னணியின் தலைவர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தலைமையிலான அக்கட்சிக் குழுவினர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ஐக்கிய தேசியக் கட்சி தலைமையகத்தில் சந்தித்திருந்தமை பற்றிய செய்திகளை இந்தப் பத்தியில் சில நாட்களுக்கு முன்னர் தெரிவித்திருந்தோம்.

அந்தச் சந்திப்பின்போதும், விரைவில் அனைத்துக் கட்சிக் கூட்டம் ஒன்றைக் தான் கூட்டவிருப்பதாகவும், அந்தக் கூட்டத்தில் சர்வதேச நாணய நிதியத்தின் உதவியோடு தற்போது நாட்டில் முன்னெடுக்கப்படும் வேலைத் திட்டத்தை தொடர்வதா அல்லது, அதனைக் கைவிடுவதா என்பது குறித்து ஆராய்வதற்கு இருப்பதாக தெரிவித்திருந்தார்.

ஆனால், தற்போது இலங்கைக்கு வந்து, கடன் மறுசீரமைப்பு குறித்து ஆராய்ந்துவரும் சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகளுடன் எதிரணி அரசியல் கட்சிகளின் தலைவர்களை சந்திக்க வைப்பதற்கு ஏற்பாடுகளைச் செய்திருக்கிறார் ஜனாதிபதி.

எதிர்வரும் பதினோராம் திகதி இந்த சந்திப்பு நடக்கவிருக்கின்றது. சர்வதேச நாணய நிதிய பிரதிநிதிகளுடன் எதிர்க் கட்சியினரைச் சந்திக்க வைத்து அவர்களின் சந்தேகங்களை போக்குவது ஜனாதிபதியின் நோக்கமாக இருக்கலாம்.

ஆனால் அதற்காக அவர் தெரிவுசெய்திருக்கும் தலைவர்கள் பட்டியல்தான் இப்போது ரணிலின் உள்நோக்கம் என்ன என்பதை வெளிப்படுத்தியிருக்கின்றது.

அந்தச் சந்திப்பில் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாசாவும், ஜேவிபியின் தலைவர் அநுரகுமார திசநாயக்காவும் அழைக்கப்பட்டிருக்கின்றனர். பொருத்தமானவர்கள்தான். ஆனால்,அவர்களோடு தமிழ் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் என்று கூறி அவர் அழைப்பு விடுத்திருப்பது தமிழரசு கட்சியின் புதிய தலைவராக தெரிவு செய்யப்பட்டபோதிலும் தலைமைப் பதவியை பொறுப்பேற்க முடியாமல் சர்ச்சையில் இருக்கும் சிவஞானம் சிறீதரன் அவர்களையே.

இதுகாலவரை தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் என்றால் அது இரா. சம்பந்தன் அவர்கள் மாத்திரமே. இன்று கூட்டமைப்பிலிருந்து தமிழ் அரசு கட்சி வெளியேறிவிட்டாலும், அதன் பங்காளிகளாக இருந்தவர்கள் கூட இன்றுவரை சம்பந்தன் மீது மதிப்பும் மரியாதையையும் வைத்தே இருக்கின்றனர்.

அப்படியிருக்கையில் சம்பந்தனுக்கு அழைப்பு விடுக்காமல் சிறீதரனுக்கு அழைப்பு விடுத்திருப்பதன் நோக்கத்தை நாம் இலகுவாகப் புரிந்துகொள்ளலாம். ஆனால் அவரின் நோக்கத்தை புரிந்துகொண்டதால், அந்த அழைப்பை நிராகரித்திருக்கிறார் சிறீதரன்.

சம்பந்தன் தனது வயோதிபம் காரணமாக இதுபோன்ற கூட்டங்களில் கலந்துகொள்ள முடியாதவராக இருந்தாலும் அழைப்பை அனுப்பும்போது அவருக்கே அனுப்பியிருக்க வேண்டும்.

இதுவரை தமிழ் கட்சிகளுடனான சந்திப்புக்கு ஜனாதிபதி அழைப்பு விடுத்த சந்தர்ப்பங்களில் எல்லாம் சம்பந்தன் கலந்துகொள்ளாமல் விட்டதில்லை.

இந்தக் கூட்டத்திற்கும் சம்பந்தனுக்கே அழைப்பு விடுக்கப்பட்டிருக்கவேண்டும்.


அவர் தன்னால் வரமுடியாத நிலை இருந்தால் அவர் தனது சார்பில் யாரையேனும் அனுப்பியிருக்க முடியும். அதைவிடுத்து, சிறீதரனையும் சம்பந்தனையும் மோதவிடுவதற்கு அவர் எடுத்த முயற்சியை சிறீதரன் சாதுரியமாக முறியடித்திருக்கிறார் என்றே தெரிகின்றது.

**- ஊர்க்குருவி.**

## வடக்கின் பெரும் போர் இறுதி நாள் பதிவுகள்

































'வடக்கின் பெரும் போர்' என்று அழைக்கப்படும் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி, யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரி அணிகளின் 117ஆவது பெருந்துடுப்பாட்ட போட்டியின் இறுதி நாள் மற்றும் பரிசளிப்பு நிகழ்வின் காட்சிகள். (படங்கள் - ஐ. சிவசாந்தன்)

# அதிக வெப்பம் காரணமாக கண் நோய் ஏற்பட வாய்ப்பு

## அவதானமாக செயல்படுமாறு அறிவுறுத்தல்

கொழும்பு, மார்ச் 10

**அதிக வெப்பம் காரணமாக கண் நோய்கள் ஏற்படும் சாத்தியங்கள் காணப்படுவதாக கண் மருத்துவ நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.**

சூரிய ஒளி நேரடியாக கண்ணில் பட்டால், அதன் செல்கள் சேதமடைவதுடன், விழிப்புலன் இழக்கப்படலாமென கொழும்பு பல்கலைக்கழக மருத்துவ பீடத்தின் பேராசிரியர், கண் சத்திரசிகிச்சை நிபுணர் வைத்தியர் மதுவந்தி திசாநாயக்க தெரிவித்தார்.

அத்துடன், வெப்பம் காரணமாக கண் வறட்சி ஏற்படும் என்பதினால், தேவையான நீராகாரங்களை உட்கொள்வது அவசியமென அவர் சுட்டிக்காட்டினார்.

வயதானவர்கள் மற்றும் சிறுவர்களுக்கு அதிக பாதிப்புகள் ஏற்படுமெனவும் அவர் கூறினார்.

கணினி பாவனை அதிகம் உள்ள நபர்கள் மற்றும் ஏற்கனவே கண் நோய் உள்ளவர்களுக்கு பாதிப்புகள் அதிகரிக்கக் கூடுமெனவும் அவர் எச்சரிக்கை விடுத்தார்.

பல பகுதிகளில் மனித உடலால் உணரப்படும் வெப்பம் இன்று அதிகரித்து காணப்படுமென வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

வடமேற்கு, தெற்கு மற்றும் வடமத்திய மாகாணங்களிலும் மொனராகலை, இரத்தினபுரி, மன்னார், வவுனியா, முல்லைத்தீவு மற்றும் திருகோணமலை மாவட்டங்களிலும் அவ்வாறு அதிக வெப்பநிலை பதிவாகுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# கோட்டாவின் நூல் பற்றி விகாராதிபதி ஆவேசம்!

கொழும்பு, மார்ச் 10

“இலங்கைத் தீவுக்கு ஏன் இடி விழுந்தது என்ற தலைப் பில் நூல் எழுதுங்கள்... இலங்கை வங்குரோத்து அடைய காரணம் யார்? சதி அல்ல சூழ்ச்சி அல்ல. நாட்டை நாமே வீழ்ச்சி அடைய செய்தோம். பொருளாதார வீழ்ச்சிக்கு நாமே வித்திட்டோம்” என்பதை எழுதி வையுங்கள் என மிஹிந்தலை ரஜமஹா விகாரையின் விகாராதிபதி தம்மரத்ன தேரர் கோட்டாவின் நூல் வெளியீடு குறித்துக் கிண்டலாக விமர்சித்துள்ளார்.

இலங்கையை இவ்வாறான தொரு நிலைக்கு தள்ளியமை தொடர்பாக நூல் எழுதி அதனை மக்களுக்கும் உலகத்துக்கும் அறியப்படுத்துங்கள் எனவும் அவர் ஆவேசமாகச் சாடினார்.

2022 ஆம் ஆண்டு ஜனாதிபதி பதவியிலிருந்து தான் வெளியேற்றப்பட்டமை தொடர்பில் இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச “ஜனாதிபதி பதவியிலிருந்து தன்னை வெளியேற்றுவதற்கான சதி முயற்சிகள்” எனும் பெயரில் நேற்று முன்தினம் வெளியிட்டார்.

நூல் வெளியீடு தொடர்பில் பல்வேறு தரப்பினரும் தமது கருத்துக்களை வெளியிட்டு வருகின்றனர்.

உரப்புரட்சி மற்றும் திருட்டு குடும்பம் தொடர்பான நூலை எழுதுங்கள் என மக்கள் போராட்ட இயக்கத்தின் நிறைவேற்றுக்குழு உறுப்பினர் வசந்த முதலிகேவும் நூல் தொடர்பான தனது நிலைப்பாட்டை தெரிவித்துள்ளார். (அ)

# சபாநாயகருக்கு எதிரான பிரேரணை; 19 ஆம் திகதி முதல் சபையில் விவாதம்

கொழும்பு, மார்ச் 10

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவுக்கு எதிராக எதிர்க்கட்சிகள் முன்வைத்துள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான விவாதம் எதிர்வரும் 19ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள நாடாளுமன்ற வாரத்தில் இடம்பெறவுள்ளதாக பாராளுமன்ற தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த 7ஆம் திகதி பாராளுமன்றத்தின் நிகழ்ச்சி நிரலில் நம்பிக்கையில்லாப் பிரேரணை உள்ளடக்கப்பட்டிருந்தது.

நம்பிக்கையில்லாப் பிரேரணை நிகழ்ச்சி நிரலில் சேர்க்கப்பட்ட 5 நாட்களுக்குப் பிறகு விவாதிக்கப்படும். இதன்படி எதிர்வரும் 12ஆம் திகதிக்கு பின்னரான ஒரு நாளில் குறித்த பிரேரணையை விவாதம் செய்ய முடியும் என பாராளுமன்ற வட்டாரங்கள் சுட்டிக்காட்டியுள்ளன.

எவ்வாறாயினும், எதிர்வரும் 19ஆம் திகதி பாராளுமன்றம் மீண்டும் கூடவுள்ள நிலையில், குறித்த வாரத்தில் நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான விவாதம் நடத்தப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

எனினும் கட்சித் தலைமைக் கூட்டத்தில் இறுதி முடிவு எடுக்கப்படும்.

இணையவழி அமைப்புகளின் பாதுகாப்பு தொடர்பான சட்டமூலம் நிறைவேற்றப்பட்ட விதம் அரசியலமைப்புக்கு முரணானது என சுட்டிக்காட்டிய எதிர்க்கட்சி, சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவுக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணையை சமர்ப்பித்தது.

ஐக்கிய மக்கள் சக்தி உள்ளிட்ட 44 எதிர்க்கட்சி உறுப்பினர்களின் கையொப்பத்துடன் நம்பிக்கையில்லாப் பிரேரணை அண்மையில் பாராளுமன்றத்தின் பதில் பொதுச் செயலாளரிடம் கையளிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# 2 தேரர்கள் மீது தாக்குதல்

கொழும்பு, மார்ச் 10

புத்தளம் பிரதேசத்தில் உள்ள விகாரை ஒன்றின் இரு தேரர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக புத்தளம் தலைமை பொலிஸாருக்கு முறைப்பாடு கிடைத்துள்ளது.

காயமடைந்த தேரர்கள் இருவரும் புத்தளம் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விகாரையானது ஒரு வருடத்திற்கு முன்னர் நிர்மாணிக்கப்பட்டதாகவும் இந்த விகாரை நிர்மாணிக்கப்பட்ட நாளில் இருந்து சில நபர்களால் இடையூறு ஏற்பட்டு வந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த தேரர்கள் இடையூறுகள் மத்தியிலும் இந்த விகாரையில் தங்கியிருந்துள்ள நிலையில் விகாரையின் பங்களிப்பாளர்களுக்கு இடையில் தகராறு ஏற்பட்டுள்ளது.

இந்த தகராறு காரணமாக குறித்த தேரர்கள் அம்பாந்தோட்டை பிரதேசத்திற்கு சென்று மீண்டும் விகாரைக்கு திரும்பிய நிலையில் தேரர்கள் தங்கியிருந்த கட்டடத்தின் கதவு உடைக்கப்பட்டு அவர்களது உடைமைகள் திருடப்பட்டுள்ளன.

இதனையடுத்து குறித்த தேரர்கள் இது தொடர்பில் புத்தளம் தலைமை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு அளித்து மீண்டும் விகாரையை நோக்கி சென்றுள்ளனர்.

இதன்போது இந்த விகாரைக்குள் நுழைந்த சந்தேக நபர்கள் சிலர் குறித்த தேரர்களை பலமாக தாக்கி அவர்களது காவி உடையை கழற்றிவிட்டு சென்றுள்ளனர். (அ)

# மூவருடன் சென்ற படகு மாயம்!

கொழும்பு, மார்ச் 10

மீன்பிடிப்பதற்காக கற்பிட்டி கடலில் இருந்து புறப்பட்ட படகொன்று மீண்டும் கரை திரும்பவில்லை என படகின் உரிமையாளர் கற்பிட்டி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு அளித்துள்ளார்.

ஈச்சங்காடு பிரதேசத்தை சேர்ந்த 21, 37 மற்றும் 38 வயதுடைய மூவர் இந்த படகில் மீன்பிடிப்பதற்காக சென்றிருந்ததாக அவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் கடற்படையினருக்கு தகவல் தெரிவித்துள்ள நிலையில் தேடுதல் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (அ)

# விபத்தில் 3 இளைஞர்கள் பலி!

கொழும்பு, மார்ச் 10

ரம்பேவ பிரதேசத்தில் நேற்றுக் காலை இடம்பெற்ற விபத்தில் 16, 19 மற்றும் 21 வயதுடைய மூன்று இளைஞர்கள் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

மூவரும் பிஹிம்பிய கொஸ்லேவ பிரதேசத்தை சேர்ந்தவர்கள் என தெரியவந்துள்ளது.

விபத்தில் சிக்கிய 2 சிறுமிகளும் அனுராதபுரம் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

நேற்று காலை ரம்பேவயில் இருந்து அநுராதபுரம் நோக்கி பயணித்த கப் வண்டி ஒன்று வீதியில் பயணித்த இந்த 5 பேர் மீது மோதியதில் இவ்விபத்து இடம்பெற்றுள்ளது.

இந்த குழுவினர் ரம்பேவ பகுதியில் இடம்பெற்ற இசை நிகழ்ச்சியை பார்த்துவிட்டு வீடு திரும்பும் போது விபத்துக்குள்ளாகியுள்ளனர்.

விபத்திற்கு காரணமான கப் அங்கிருந்து சென்றுள்ளது.

கப் வண்டியின் சாரதியை கைது செய்வதற்கான மேலதிக விசாரணைகளை மிஹிந்தலை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# தென் மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் கைது!

கொழும்பு, மார்ச் 10

தங்க முலாம் பூசப்பட்ட வெள்ளி வாளை எடுத்துச் சென்ற தென் மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கொழும்பைச் சேர்ந்த ஒருவர், திஸ்ஸமஹாராமவைச் சேர்ந்த ஒருவரிடம் தங்க முலாம் பூசப்பட்ட வாளைக் கொடுக்குமாறு கூறி தன்னிடம் வழங்கியதாகவும், இருவரும் ஒருவரையொருவர் அடையாளம் காணவில்லை எனவும் சந்தேக நபர் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார் .

சந்தேக நபர் திக்வெல்ல பிரதேசத்தைச் சேர்ந்தவர் என்பதுடன் மேலதிக விசாரணைகளுக்காக அவர் லுணுகம்வெஹர பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். (அ)

# வாடகை வாகனங்களுக்கு அதிக நிதி!

கொழும்பு, மார்ச் 10

அரச நிறுவனங்களால் வாடகைக்கு அமர்த்தப்படும் வாகனங்களுக்காக ஆண்டுதோறும் 2.5 பில்லியன் செலுத்தப்படுவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

பொது நிறுவனங்களால் கையகப்படுத்தப்பட்ட வாகனங்கள் தொடர்பில் சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் கோகிலா குணவர்தன எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே நிதி அமைச்சு இதனைத் தெரிவித்துள்ளது.

இதன்போது 4,427 வாகனங்களை பொது நிறுவனங்கள் வாடகை அடிப்படையில் சேவையில் ஈடுபடுத்தியுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

அவற்றுக்காகவே வருடாந்த வாடகையாக 2,562 மில்லியன் ரூபாய் செலுத்தப்படுகிறது என்று நிதியமைச்சு தெரிவித்துள்ளது.

இதேவேளை பொது நிறுவனங்களால் 2024 மார்ச் 1ஆம் திகதி நிலவரப்படி சுமார் 69,121 வாகனங்கள் பயன்படுத்தப்படுவதாக நிதியமைச்சு தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# பல்கலை மாணவியின் பிறந்த நாளில் 27 பேர் போதைப்பொருளுடன் கைது!

கொழும்பு, மார்ச் 10

சர்வதேச மகளிர் தினமான நேற்றுமுன்தினம் இரவு பல்கலைக்கழக மாணவி ஒருவரின் பிறந்த நாளை முன்னிட்டு பேஸ்புக் ஊடாக அழைப்பு விடுக்கப்பட்ட விருந்தில், பல்கலைக்கழக மாணவிகள் ஐவர் உட்பட இருபத்தேழு பேரை போதைப் பொருள் பாவித்துக் கொண்டிருந்த குற்றச்சாட்டில் கஹதுடுவ பொலிஸார் கைது செய்துள்ளனர்.

தனியார் பல்கலைக்கழகத்தில் கல்வி கற்கும் ஐந்து மாணவிகள் மற்றும் 12 ஆண் மாணவர்கள் உட்பட இருபத்தேழு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களில் மூவர் பாலியல் தொழிலாளிகள் ஆவர்.

காலி பிரதேசத்தைச் சேர்ந்த நண்பர்கள் நால்வர் வாடகைக்கு எடுத்த காரில் விருந்துக்கு போதைப்பொருள் கொண்டு வந்ததும் தெரியவந்துள்ளது.

தியத்தலாவ பிரதேசத்தில் உள்ள தனியார் பல்கலைக் கழகம் ஒன்றில் கல்வி கற்கும் மாணவி, ஹோமாகம உடுவான பகுதியில் உள்ள அடுக்குமாடி குடியிருப்பில் மாதம் 45,000 ரூபா வாடகை செலுத்தி தங்கியிருக்கிறார். அந்த குடியிருப்பிலேயே அவரது இருபத்தி இரண்டாவது பிறந்தநாளை முன்னிட்டு இந்த விருந்து இடம்பெற்றது.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களிடமிருந்து 20 மில்லிகிராம் ஹஷிஸ் போதைப் பொருள், வேகன் ஆர் ரக கார், மூன்று போதைப்பொருள் டேப்லெட் , மூன்று கையடக்கத் தொலைபேசிகள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன. (அ)

# ரணிலின் தொங்கு பாலத்திலிருந்து ராஜபக்ஷர்களே கரை சேர்ந்தனர்!

## சஜித் பிரேமதாச குற்றச்சாட்டு

கொழும்பு, மார்ச் 10

**தொங்கு பாலத்திலிருந்து நாட்டு மக்களை கரை சேர்த்ததாக ஜனாதிபதி கூறினாலும், உண்மையில் நாட்டை அழித்த ராஜபக்ஷர்களை மாத்திரமே ஜனாதிபதி தொங்கு பாலத்திலிருந்து கரை சேர்த்துள்ளார் என எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.**



ஐக்கிய மக்கள் சக்தியினால் நடைமுறைப்படுத்தப்படும் 'மக்கள் அரண்' வேலைத்திட்டத்தின் மற்றுமொரு கட்டம், யாப்பஹுவ தேர்தல் தொகுதியின் தலதாகம சந்தியில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தலைமையில் நேற்று சனிக்கிழமை நடைபெற்றது.

இதில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

முழு நாடும் இயல்பு நிலைக்குத் திரும்பிவிட்டதாக அறிவிக்கப்பட்டாலும், நாட்டின் மின்சாரக் கட்டணம் 500 - 600 சதவீதம் வரை அதிகரித்தது. நீர்க் கட்டணம் அதிகரித்து, வாழ்க்கைச் சுமை அதிகரித்து, வேலையிழப்பு அதிகரித்து, தொழிற்சாலைகள் மூடப்பட்டு, இளைஞர்கள் வீதிக்கு இறங்கும் நிலை இன்று ஏற்பட்டுள்ளது.

கொவிட் காலத்தைப் போல நாட்டில் ஒரு புதிய இயல்பு நிலை ஏற்பட்டுள்ளது. நாட்டு மக்களுக்கு சுமைகள் அதிகரித்து வரும் நிலைமையே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பார்வையில் புதிய இயல்பு நிலையாக உள்ளது.

இன்று சில தரப்பினர் கோப்பு மூட்டைகளை காட்டி திருடர்களை பிடிக்க அதிகாரம் கோருகின்றன. ஆனால் ஐக்கிய மக்கள் சக்தியும் ஐக்கிய மக்கள் கூட்டணியும், தனது ஐக்கிய சட்டத்தரணிகள் குழு, மக்களுக்கான புத்திஜீவிகள் பேரவை மூலம் உயர் நீதிமன்றத்துக்கு சென்று எதிர்க்கட்சியில் இருந்தவாறே ராஜபக்ஷர்கள் மக்களின் அடிப்படை உரிமைகளை மீறியுள்ளனர் என்ற தீர்ப்பை பெற்றுக்கொண்டது. திருடர்களை பிடிப்போம் என கோப்புகளை காட்டி அரசியல் நாடகங்களை நடத்தாது ஐக்கிய மக்கள் சக்தி செயல் ரீதியாக நடவடிக்கை எடுத்தது.

நாட்டு மக்கள் பாரிய அசௌகரியங்களுக்கு உள்ளாகும்போது ஜனாதிபதி தலைமையிலான நாட்டை அழித்த மொட்டு பாராளுமன்ற உறுப்பினர்கள் ராஜபக்ஷர்களுடன் இணைந்து தமது விருப்பப்படி நடந்து வருகின்றனர்.

பாராளுமன்றத்தில் 113 பேர் சுகாதாரத்துறையில் நடந்த மோசடிகளுக்கு ஆதரவாக கைகளை உயர்த்துகின்றனர். ஐக்கிய மக்கள் சக்தி அமைக்கும் அரசாங்கத்தில் இந்நாட்டிலுள்ள தேசிய வளங்கள், மக்களின் வளங்கள், சொத்துக்கள் மற்றும் பணத்தை அபகரித்த குழுக்களுக்கு எந்த மன்னிப்பும் கிடையாது.


வறுமையின் காரணமாக நாட்டு மக்கள் நுண்கடன் வலையில் சிக்கியுள்ள நிலையில், வறுமையை ஒழிக்கும் நோக்கில் ஆரம்பிக்கப்பட்ட இந்த வேலைத்திட்டம் வரம்பற்ற அழுத்தங்களை பிரயோகித்தது.

தமது தொழில் இலக்கை முதன்மைப்படுத்தி வர்த்தகர்களால் இது பெரும் கடன் பொறியாக மாற்றப்பட்டுள்ளது. இந்த கடன் சுமையில் தவிக்கும் மக்களுக்கு நிச்சயம் தீர்வு கிடைக்கும். இந்த நுண்கடன் திட்டங்களுக்கு வலுவான கட்டுப்பாடுகள் விதிக்கப்படும்.

நுண், சிறு மற்றும் நடுத்தர தொழில் முனைவோரின் வைப்புச் சொத்துக்கள் மற்றும் வளங்களை பராட்டே சட்டத்தின் மூலம் ஏலம் விடுவதற்கான மோசடி நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர் - என்றார்.

(அ)

# நெல்லியடிப் பகுதிக்கு நேற்று இந்திய துணை தூதுவர் விஜயம்



யாழ்ப்பாணம், மார்ச் 10

இலங்கைக்கான இந்திய துணை தூதரகத்தின் யாழ். துணை தூதாக அதிகரிகள் நேற்று காலை 11:45 மணியளவில் விஜ யம் ஒன்றினை மேற்கொண்டனர்



நெல்லியடியில் இடம் பெறும் தகவல் தொழில்நுட்ப பயிற்சி நிலையத்தை பார்வை யிடவே இந்திய துணைத் தூதர் தலைமையிலான அதிகாரிகள் சென்றதுடன் பயிற்சி நெறிகளில் கலந்துகொண்டவர்களையும் பார்வையிட்டுச் சென்றனர்.

பிரபல வர்த்தகர் தம்பிக்க பெரேராவின் தகவல் தொழில்நுட்ப கல்லூரியுடன் இணைந்து யாழ். மாவட்டத்தில் நடத்தப்படுகின்ற தகவல் தொழில்நுட்ப பயிற்சி கூடங்களை பார்வையிடுவதன் தொடர்ச்சியாகவே இந்த விஜயம் இடம்பெற்றுள்ளது.

(அ-2)

# சிறுமி கழுத்தறுக்கப்பட்டு கொலை!

கொழும்பு, மார்ச் 10

எல்பிட்டிய பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட நாணயக்கார மாவத்தை பகுதியில் உள்ள தேயிலை தோட்டமொன்றில் இருந்து 17 வயது சிறுமி ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இவ்வாறு உயிரிழந்தவர் தல்கஹவத்த , கரந்தெனிய பிரதேசத்தை சேர்ந்த 17 வயதுடைய ஹன்சிகா நதிஷானி என்ற சிறுமியாவார்.

இவர் கழுத்தறுக்கப்பட்டு கொலை செய்யப்பட்டிருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது.

நேற்று முன் தினம் முச்சக்கரவண்டியில் சென்ற சிலர் குறித்த சிறுமியை கரந்தெனிய, தல்கஹாவத்த பிரதேசத்தில் வைத்து பலாத்காரமாக அழைத்துச் சென்றதாக தெரிய வந்துள்ளது.

இந்த சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் இதுவரை கைது செய்யப்படாத நிலையில் இது தொடர்பில் எல்பிட்டிய பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(அ)

# மீட்கப்பட்ட இலங்கையரை அழைத்து வர நடவடிக்கை

கொழும்பு, மார்ச் 10

செங்கடலில் ஹூதி கிளர்ச்சியாளர்களின் தாக்குதலுக்கு இலக்கான கப்பலில் இருந்து மீட்கப்பட்ட இலங்கையர்கள் இருவரையும் விரைவில் நாட்டிற்கு அழைத்து வர நடவடிக்கை எடுக்கப்படுமென வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

எத்தியோப்பியாவிற்கான இலங்கை தூதுவரால் இருவரையும் நாட்டிற்கு திருப்பி அனுப்புவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக வெளிவிவகார அமைச்சு கூறியுள்ளது.

குறித்த இருவரும் தற்போது ஜிபுட்டியில் தங்கியுள்ளனர்.

சீனாவிலிருந்து ஜெட்டா நோக்கி பயணித்துக்கொண்டிருந்த வணிகக் கப்பல் மீது ட்ரோன் ஏவுகணைத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

இந்த தாக்குதலால் கப்பலின் கட்டுப்பாட்டு அறையை அண்டிய பகுதியிலும் தீ விபத்து ஏற்பட்டது.

அந்த சந்தர்ப்பத்தில் யேமனிலுள்ள ஏடன் துறைமுகத்திலிருந்து 50 கடல் மைல் தொலைவில் கப்பல் பயணித்துக்கொண்டிருந்தது.

23 பேரைக் கொண்ட பணியாளர்கள் கப்பலில் இருந்துள்ளதுடன், அவர்களுள் நால்வர் கடுமையான தீக்காயங்களுக்குள்ளானதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

குறித்த கப்பலில் மூன்று பாதுகாப்பு அதிகாரிகள் இருந்துள்ளதுடன், அவர்களில் இருவர் இலங்கையர்களாவர். நேபாள பிரஜை ஒருவரும் அதில் அடங்குவதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

வியட்நாம் பிரஜைகள் நால்வர், பிலிப்பைன்ஸ் பிரஜைகள் 15 பேர், இந்திய பிரஜை ஒருவரும் குறித்த கப்பலில் இருந்துள்ளனர்.

கப்பலில் இருந்த பணியாளர்கள், இந்திய கடற்படைக்கு சொந்தமான கொல்கத்தா போர்க் கப்பல் மூலம் மீட்கப்பட்டுள்ளனர்.

கிளர்ச்சியாளர்களின் தாக்குதலில் மூவர் கொல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

(அ)

# மதுபோதையில் குளிக்கச் சென்று சேற்று குழியில் விழுந்த இருவர் பலி

மட்டக்களப்பு, மார்ச் 10

மட்டக்களப்பில் ஆற்றில் குளிக்க சென்ற இருவர் மதுபோதையில் அருகிலிருந்த சேற்றுக் குழியில் மூழ்கி உயிரிழந்துள்ளதாக சந்திவெளி பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

குறித்த சம்பவம் நேற்று முன் தினம் இடம்பெற்றுள்ளது.

மட்டக்களப்பு சித்தாண்டி பிர தேசத்தைச் சேர்ந்த ஒரு குழந்தையின் தந்தையான 33 வயதுடைய கூலித் தொழிலாளி ஒருவரும், உழவு இயந்திர சாரதியான 24 வயதுடைய ஒரு குழந்தையின் தந்தையான இளம் குடும்பஸ்தர் ஒருவருமே இந்த சம்பவத்தில் உயிரிழந்துள்ளனர்.

இவ்வாறு உயிரிழந்த குடும்பஸ்தர்கள் இருவரும் சிவராத்திரி பூசைக்கு கோவிலுக்குச் செல்வதாக வீட்டாரிடம் தெரிவித்துவிட்டு, நண்பரகளுடன் மட்டக்களப்பு சந்தனமடு ஆற்றில் குளித்துவிட்டு கோவிலுக்குச் சென்றுள்ளனர்.

அங்கு பகலுணவு செய்வதற்கு தாமதம் ஏற்பட்டதனால், மதுபானம் அருந்திய குறித்த குடும்பஸ்தர்கள் இருவரும் மீண்டும் ஆற்றில் குளிக்கச் சென்ற வேளை சேற்றுக் குழியில் மூழ்கி இறந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்நிலையில், சேற்றில் மூழ்கிய இருவரையும் தேடும் பணியில் ஈடுபட்ட பொது மக்கள், அவர்களை சடலமாக மீட்டுள்ளனர்.

இருவரினதும் சடலங்கள் சந்திவெளி வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டதுடன் சம்பவம் தொடர்பில் திடீர் மரண விசாரணை அதிகாரி எம்.எஸ்.எம். நஸிர் விசாரணைகளை மேற்கொண்டார்.

# மதுபோதையில் தந்தையால் துன்புறுத்தல் 2 சிறுமிகள் பொலிஸாரிடம் முறைப்பாடு!

கொழும்பு, மார்ச் 10

திம்புல பத்தனை பகுதியில் தந்தையொருவரின் துன்புறுத்தல் காரணமாக இரண்டு சிறுமிகள் ஹட்டன் நீதவான் நீதிமன்றினால் நன்னடத்தை மேற்பார்வையின் கீழ் அவர்களது பாட்டியிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

நாளாந்தம் மதுபோதையில் தங்களையும் பாட்டியையும் தங்களது தந்தை துன்புறுத்துவதாக 14 மற்றும் 16 வயதுடைய இரண்டு சிறுமிகள் திம்புல பத்தனை பொலிஸாரிடம் முறைப்பாடளித்துள்ளனர்.

குறித்த சிறுமிகளின் தாய் கொழும்பில் பணியாற்றி வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் ஹற்றன் நீதவான் நீதிமன்றில் சமர்ப்பணங்களை முன்வைத்திருந்தமைக்கு அமைய, நன்னடத்தை மேற்பார்வையின் கீழ் குறித்த சிறுமிகள் மீண்டும் பாட்டியிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු
10.03.2024 ஞாயிற்றுக்கிழமை
பிலவ வருடம், மாசி 27

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# தமிழ் சிவில் சமூக குழுக்களின் தலையீடுகள்

விடுதலைப் புலிகளுக்கு பின்னரான கடந்த பதின்நான்கு வருடங்களில், தமிழ் சிவில் சமூக குழுக்கள் அவ்வப்போது தலைநீட்டியிருக்கின்றன. அரசியல் தலைமைகள் என்போர் நெருக்கடிகளை சந்திக்கும் சந்தர்ப்பங்களில்தான், சிவில் சமூக தலைவர்கள் என்போர் முக்கியத்தும் பெறுகின்றனர். தமிழ் சிவில் சமூகம் என்பதன் மூலம், கட்சிசாராத சமூக முக்கியஸ்தர்கள், கருத்துருவாக்கிகள், பேராசிரியர்கள் மற்றும் மதத் தலைவர்கள் என்போர் அடங்குகின்றனர். இதில் மதத் தலைவர்கள் முக்கியமானவர்களாக கருதப்படுகின்றனர். அவர்கள் அனைவராலும் மதிக்கப்படுவதால் அவர்கள் ஒரு விடயத்தை எடுத்துக் கூறும் போது, அரசியல் கட்சிகளின் தலைவர்கள் அதனை செவிமடுப்பார்கள் என்னும் நம்பிக்கை காணப்படுகின்றது. ஆனால் அது ஒரு கற்பனையான நம்பிக்கை மட்டும்தான்.

தமிழ் தேசியக் கூட்டமைப்பை ஓர் அரசியல் கட்சியாக பதிவு செய்ய வேண்டும் என்னும் கோரிக்கை ஊடக தளங்களில் அதிகம் பேசப்பட்டது. இதில் கருத்துருவாக்கிகள் சிலர் முன்னணி வகித்திருந்தனர். ஆனால் அதனை நடைமுறையில் வெற்றிகொள்ள முடியவில்லை. தமிழ் கட்சிகளை ஒரணிப்படுத்த வேண்டும் என்னும் கோரிக்கை பல்வேறு தரப்புக்களாலும் முன்வைக்கப்பட்டிருந்தது. இது தொடர்பில் பலதரப்பட்ட கலந்துரையாடல்கள் இடம்பெற்றன. மன்னார் ஆயர் இராயப்பு ஜோசப், அன்றைய சூழலில் மிகவும் செல்வாக்கு மிக்கவராக நோக்கப்பட்ட கிறிஸ்தவ மதத்தலைவர். அவரை ஒரு கிறிஸ்தவராக எவருமே நோக்கவில்லை. அந்தளவிற்கு அவர் ஒரு தனி மனித நிறுவனம் போன்று செயல்பட்டார் ஆனால், அவ்வாறான ஒருவரால் கூட தமிழ் கட்சிகளின் தலைவர்களின் தீர்மானங்கள் மீது செல்வாக்குச் செலுத்த முடியவில்லை. ஆயர் இராயப்பு ஜோசப்பின் கோரிக்கைகளை சம்பந்தன் ஏற்றுக்கொள்ளவில்லை.

தமிழ் சிவில் சமூகம் தங்களை ஒரு பிரதான குரலாக முன்னிறுத்த முயற்சித்தது - அதேபோன்று, தமிழ் மக்கள் பேரவை அரசியல் கட்சிகளின் தலைவர்களையும் உள்ளடக்கி தங்களை ஒரு மக்கள் இயக்கமாக அடையாளப்படுத்த முயற்சித்தது. ஆனால் இவர்களால் அறிக்கைகளுக்கு அப்பால் பயணிக்க முடியவில்லை. பதின்நான்கு வருடகால சிவில் சமூக முயற்சிகள் அனைத்துமே இறுதியில் புஸ்வாணமாகியது. இவர்களது கோரிக்கைகள் எதனையுமே அரசியல் கட்சிகளின் தலைவர்கள் பொருட்படுத்தவில்லை.

இங்கு பொருட்படுத்தல் என்றால் என்ன? ஒரு கட்சி அல்லது அக்கட்சியின் தலைவர்கள் என்போர் ஒரு தீர்மானத்தை மேற்கொள்ளும் போது, அது பொருத்தமானதல்ல என்று சிவில் சமூகங்கள் கூறும் போது, அதனை குறித்த கட்சிகள் ஏற்றுக்கொண்டு தங்களின் நிலைப்பாட்டை மாற்றிக்கொள்ள வேண்டும். அவ்வாறு மாற்றிக் கொண்டால் மட்டும் தான், குறித்த சிவில் சமூக அமைப்பின் கரிசனையை, அவர்கள் பொருட்படுத்துகின்றார்கள் என்பது பொருளாகும். கடந்த பதின்நான்கு வருடங்களில் சிவில் சமூக குழுக்கள் கூறிய எவற்றையுமே, அரசியல் கட்சிகளின் தலைவர்கள் என்போர் ஏற்றுக்கொள்ளவில்லை. இதற்கு என்ன காரணம்? பதில் இலகுவானது - அதாவது, சிவில் சமூக அமைப்புக்களின் கோரிக்கைகளை கண்டு அரசியல் கட்சிகள் அச்சம் கொள்ளவில்லை - இவர்களால் எங்களை என்ன செய்ய முடியும் என்னும் மனோபாவத்தோடுதான் விடயங்களை கையாளுகின்றனர்.

இதற்கு என்ன காரணம்? - சிவில் சமூக அமைப்புக்கள் என்று தங்களை அடையாளப்படுத்திக் கொள்பவர்கள், வெறுமனே தங்களை, அரசியல் கட்சிகளோடு சுருக்கிக் கொண்டதும் ஒரு பிரதான காரணமாகும். மக்களின் சிந்தனையில் செல்வாக்குச் செலுத்தக் கூடிய சிவில் சமூக அமைப்புக்கள் எவையும் இல்லை. தங்களின் தேர்தல் அரசியலுக்கு நெருக்கடிகள் ஏற்படும் என்று எண்ணும் போது மட்டும்தான், அரசியல் கட்சிகள் அச்சம் கொள்ளும். இல்லாவிட்டால், சிவில் சமூக அழுத்தங்கள் என்பவை, பத்தோடு பதினொன்றாகவே கழிந்து செல்லும். இந்த சவாலை எதிர்கொள்ளும் வகையில் சிவில் அமைப்புக்கள் மக்களை நோக்கிச் செல்ல வேண்டும். ஊடகங்களின் பலமான ஆதரவை பெறவேண்டும். சிவில் சமூகமும் ஊடகங்களும் ஒன்றிணைந்து செயல்பட்டால், சில மாற்றங்களை சாத்தியப்படுத்த முடியும்.

# யாழில் பழுதடைந்த உணவு வகை வைத்திருந்த உணவகங்களுக்கு சீல்!

*யாழ்ப்பாணம், மார்ச் 10*

சண்டிலிப்பாய் பகுதியில் சுகாதார சீர்கேட்டுடன் இயங்கி வந்த உணவகம் ஒன்றுக்கு, சீல் வைக்குமாறு உத்தரவிட்ட நீதிமன்றம், 73 ஆயிரம் ரூபாய் தண்டப் பணம் செலுத்துமாறும் உத்தரவிட்டுள்ளது.

சண்டிலிப்பாய் பகுதியில் பொது சுகாதார பரிசோதகரான செ. பிரின்சன் தலைமையில் உணவகங்களில் திடீரென சோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது குறித்த பிரதேசத்தில் இயங்கிவந்த உணவகமொன்றில் 180 கிலோ பழுதடைந்த ரொட்டிகள், 05 கிலோ இடியப்பம் மற்றும் 08 கிலோ பிட்டு என்பவற்றை பொலித்தீன் பைகளில் கட்டி குளிர்சாதன பெட்டிகளில் களஞ்சியப்படுத்தி வைத்திருந்தமை கண்டறியப்பட்டது.

குறித்த உணவகத்திற்கு எதிராக மல்லாகம் நீதவான் நீதிமன்றில் வழக்கு தொடரப்பட்ட நிலையில், உணவக உரிமையாளருக்கு 73 ஆயிரம் ரூபாய் தண்டம் விதித்த மன்று, உணவகத்தை சீல் வைக்குமாறு உத்தரவிட்டது.

அதேவேளை, பழுதடைந்த இறைச்சி மற்றும் இறால் ஆகியவற்றை களஞ்சியப்படுத்தி வைத்திருந்த உணவக உரிமையாளருக்கு 20 ஆயிரம் ரூபாய் தண்டமும், பழுதடைந்த இறைச்சி ரொட்டியை விற்பனைக்கு வைத்திருந்தமை மற்றும் உணவகத்தை சுத்தமின்றி பேணிய மற்றுமொரு உணவக உரிமையாளருக்கு 33 ஆயிரம் ரூபாய் தண்டப் பணமும் விதிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, மல்லாகம் நீதவான் நீதிமன்று நியாயாதிக்கத்திற்கு உட்பட்ட 06 பொது சுகாதார பரிசோதகர் பிரிவுகளில் கடந்த வாரம் முன்னெடுக்கப்பட்ட உணவு கையாளும் நிலைய உரிமையாளர்களுக்கு எதிராக தொடரப்பட்ட வழக்குகளில் சுமார் 03 இலட்சம் ரூபாய் தண்டம் அறவிடப்பட்டுள்ள நிலையில், சில உணவகங்களை சீல் வைத்து மூடுமாறும் உத்தரவிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# கேதீச்சரம் சென்ற வாகனம் தீக்கிரை

*மன்னார், மார்ச் 10*

திருக்கேதீஸ்வரம் ஆலய வழிபாட்டுக்கு சென்ற மோட்டார் சைக்கிள் தீக்கிரையாகியுள்ளது.

மன்னார் மாவட்டத்தின் அடம்பன் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட நாயத்து வெளி பகுதியில் குறித்த சம்பவம் நேற்றுமுன் தினம் பிற்பகல் இடம்பெற்றுள்ளது.



சம்பவத்தில் மோட்டார் சைக்கிள் முற்றாக தீக்கிரையாகியுள்ளது. ஆயினும் எவருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை என பொலிசார் தெரிவிக்கின்றனர்.

சம்பவம் தொடர்பில் அடம்பன் பொலிசார் விசாரணை முன்னெடுத்து வருகின்றனர். (அ)

# கோட்டாவின் குற்றச்சாட்டு நகைப்புக்குரியது

## கூறுகின்றார் சம்பிக்க ரணவக்க

*கொழும்பு, மார்ச் 10*

தன்னை ஆட்சிக்கட்டிலில் இருந்து சர்வதேச சக்திகள் அகற்றியதாக கோட்டாபய ராஜபக்ச தெரிவித்த குற்றச்சாட்டு நகைப்புக்குரியது என பாராளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

நுகேகொடை நாவல பகுதியில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்ட பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.


இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்-

கோட்டாபய ராஜபக்சவை அதிபர் பதவியிலிருந்து வெளியேற்ற தேசிய மற்றும் சர்வதேச சூழ்ச்சிகள் எதுவும் முன்னெடுக்கப்படவில்லை .அவரது முட்டாள்தனமாக நிர்வாகத்தால் பாரிய விளைவுகள் ஏற்பட்டன. முன்னாள் அதிபர் கோட்டாபய, பொருளாதார படுகொலையாளி என்று உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. ஆகவே கடந்த காலம் பற்றி புத்தகம் எழுதுவது பயனற்றது.



ராஜபக்ஷர்களின் வியாக்கியானத்தை நாட்டு மக்கள் கவனத்தில்கொள்வதில்லை என்றார். தேசிய மற்றும் சர்வதேசத்தின் சதியினால் தான் அதிபர் பதவியில் இருந்து வெளியேற்றப்பட்டதாக கோட்டாபய ராஜபக்ஷ குறிப்பிடுவது நகைப்புக்குரியது-என்றார். (அ)

# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



# வாழவைக்கும் வார்த்தைகள்

‘வாழ்க வளமுடன்’ என ஒருவருக்கொருவர் வாழ்த்தும்போது நமது வாழ்வில் பலவீனம் நீங்குவதோடு, வளர்ச்சிக்கான கதவும் திறக்கப்படுகிறது என்கிறார் வேதாத்திரி மகரிஷி. நாம் பேசும் வார்த்தைகளுக்கு வலிமையும், எழுச்சியும் இருக்கிறது.

நமது வாழ்க்கையில் நாம் அனுபவிக்கும் நன்மைகளுக்கும், தீமைகளுக்கும் நாம் பயன்படுத்தும் வார்த்தைகளே காரணமாக இருக்கின்றன. நமது வாழ்க்கையில் முன்னேற்றங்களும், பண வரவுகளும் அனேக நேரங்களில் தடைப்படுவதற்கு, நமது வாயிலிருந்து வெளிவரும் வார்த்தைகளே முக்கிய காரணமாக அமைந்து விடுகின்றன.

மனிதரின் வாயிலிருந்து வெளிவரும் மிக சாதாரணமான வார்த்தைகள் சிலரை உச்சவளத்திற்கும், சிலரை நோயாளியாகவும், இன்னும் பலரையும் வறுமையின் எல்லைக்கும் கொண்டு போய் விடுகின்றது. எனவே, நாம் வார்த்தையை முறையாக பயன்படுத்தி வாழ்வில் வெற்றி பெறவேண்டும்.

நாம் பேசும் ஒவ்வொரு வார்த்தையையும் வானில் உள்ள தேவதைகள் கேட்டு ‘அப்படியே ஆகட்டும்’ என்று வாழ்த்துகிறார்கள். இந்நிலையில் நாம் பேசும் அமங்கல வார்த்தைகளும் பலித்தால் நம் நிலைமை என்னவாகும்? எனவே, நாம் எதிர்மறையான வார்த்தைகளைத் தவிர்க்க வேண்டும். ஒருவர் எதை அடக்க முடியாவிட்டாலும், தமது நாவையாவது அடக்கிக் காத்திட வேண்டும். இல்லையேல் அவர் சொன்ன சொல்லே அவரை துன்பத்தில் தள்ளி விடும்.

இறைவன் நமக்கு மூடியில்லாத இருசெவிகளைக் கொடுத்துள்ளான். இதன் மூலம் அதிகம் கேட்க வேண்டும். ஒரே ஒரு வாயைக்கொடுத்து, அதற்கு உண்ணும் பணி, பேசும் பணி இரண்டையும் கொடுத்திருக்கிறான். ஒரு மூடியையும் கொடுத்து, பலமான பற்களிடையே மென்மையான நாக்கினை படைத்துள்ளான். காரணம் நாம் அளவாகவும், அடக்கமுடனும் பொருளறிந்தும் பேச வேண்டும் என்பதுதான். வார்த்தைகளால் ஏற்பட்ட காயத்தை வார்த்தைகளால்தான் மாற்ற முடியும்.

‘நான் தவறாகப் புரிந்துகொண்டேன். நான் பேசிய வார்த்தைகளை திரும்ப பெறுகிறேன். என்னை மன்னித்து



விடு’ என்று ஒருவர் நம்மிடம் கூறும்போது நம் மனது இலகுவாகின்றது. பேசிய வார்த்தைகள் இரண்டு விதம். ஒன்று உள்ளத்தை உடைத்துவிட்டது. இன்னொன்று உடைந்த உள்ளத்தை ஒட்டி விட்டது. இதுதான் வார்த்தைகளின் மகத்துவம். நம்பிக்கை தரும் வார்த்தைகள் ஒருவரது ஆழ்மனதில் ஊன்றி, நேர்மறை பலன்தர அதிக வாய்ப்புகள் உண்டு. மனதைத் தளர வைக்கும் வார்த்தைகளை கேட்பவருக்கு பதற்றம் அதிகரிக்கிறது.

அதனால், அவரது உடல் நலமும், மனநலமும் பாதிப்புக்கு உள்ளாகிறன. நம்மை நாமே அவ்வப்போது ஆய்வு செய்து கொள்ள வேண்டும். நாம் எத்தனை பேரை சபித்திருக்கிறோம்? எத்தனை பேரை வாழ்த்தியிருக்கிறோம்? அவர்களின் வாழ்வு தற்போது எப்படி உள்ளது என்பதை ஆராய்ந்து பார்த்தால் நம் வார்த்தைகளின் வலிமை நமக்கு புரியும். நமக்கு நாமே பேசிக்கொள்ளும் வார்த்தைகளிலும் மிக கவனமாக இருக்கவேண்டும்.

நமக்குள்ளே நாம் எப்போதும் உணர்வாலும், வாயாலும் பேசிக்கொண்டே இருக்கின்றோம். சலிப்புடன் வேதனையில் நமது மனநிலையை வார்த்தைகளாகச் சொல்லிப் புலம்புவது வழக்கமாக மாறிவிடக் கூடாது.

ஒரு கட்டத்தில், இப்படிப் புலம்புவதில் சுகம் காணத் தொடங்கி, எதிர்மறை வார்த்தைகளையே எப்போதும் சொல்லிக் கொண்டே இருப்போம். அந்த எதிர்மறைச் சொற்களுக்கு இருக்கிற வலிமையை நாம் அறிவதே இல்லை. எதிர்மறையாய் நாம் உச்சரித்த வார்த்தைகளை ஆழ்மனமானது நமக்கு இதுதான் வேண்டும் என தவறாக புரிந்துகொண்டு இருக்கும் பிரச்னைகளை அதிகப்படுத்தி கொடுத்துவிடும்.

எனவே, என்ன பிரச்னை இருந்தாலும், அதனைக் கொஞ்சம் தள்ளி வைத்துவிட்டு, ‘நான் நன்றாக இருக்கிறேன்’ என்று சொல்லிப் பார்க்க வேண்டும். இதனால் நல்ல பலன் ஏற்படும். ‘பண வரவு எனது தேவையை பூர்த்தி செய்கிறது’, ‘நான் எல்லோரிடமும் நல்லுறவை பேணுகிறேன்’ போன்ற நேர்மறையான வார்த்தைகளை சொல்லிப் பழகவேண்டும்.

பண்பில்லாத வார்த்தைகளை இனியாவது தவிர்க்க வேண்டும். மந்திரத்தை சாதாரண வார்த்தைகளைப் போல உச்சரித்தால் அந்த மந்திரத்துக்கு உரிய பலன் நமக்குக் கிடைக்காது. சாதாரண சொற்களை மந்திரத்துக்கு இணையாக சரியாக உச்சரித்தால், மந்திரம் தருகிற பலனை, அந்தச் சாதாரண சொற்களே நமக்குத் தந்துவிடும். நல்ல சொற்களைப் பேசுவதும் கேட்பதும் மிக உன்னதமான சுகத்தை நமக்குத் தரும்.

எப்போதும் அமங்கலமான சொற்களைச் சொல்லக்கூடாது என்று முன்னோர் வலியுறுத்தியிருக்கிறார்கள். அந்த அமங்கலச் சொற்களைச் சொல்லும்போது, அந்த இடத்தின் நல்ல அதிர்வுகள் காணாமல் போய்விடும். திருமண சடங்களில் மணமகளுக்கு திருமாங்கல்யம் கட்டும்போது கொட்டப்படும் கெட்டிமேளம் பொருள் மிக்கது. அப்போது சொல்லப்படும் எந்த அமங்கல வார்த்தையையும் யாருடைய செவிக்கும் செல்ல விடாமல் தடுக்கும் சிறந்த உபாயமே இது.

உற்சாகம் ஊட்டும் வார்த்தைகளைப் பேசுவதற்கு வாய்ப்புகள் நிறைய இருக்கின்றன. இருந்தும், நாம் தொடர்ந்து கடுஞ்சொற்களை பயன்படுத்துவது நமக்கும் நல்லது இல்லை, பிறருக்கும் நல்லது இல்லை. ‘உன்னால் முடியும்’ என்னும் ஆசிரியரின் ஊக்கமூட்டும் வார்த்தைதான் மாணவனை மலையையும் சாதிக்க வைக்கின்றது. மருந்தை விட, மருத்துவரின் நம்பிக்கையான வார்த்தைகள்தான் நோயாளியை விரைவில் முழுமையாக குணப்படுத்துகின்றது.

இப்படி வாழ்வின் எல்லா நிலைகளிலும் வார்த்தைகள் மனித சமூகத்தை வாழவைத்துக் கொண்டிருக்கிறது. நாம் பேசும் வார்த்தைகளே நம்மை வாழவைக்கின்றன. நல்லதையே பேசுவோம் நலமாக வாழ்வோம். •

# இந்தவார ராசிபலன் 10.03.2024 - 16.03.2024

ஞாயிற்றுக்கிழமை
சோபகிருது வருடம் - மாசி 27
நல்ல நேரம்: 9.23 - 10.53
ராகு காலம் : 04.53 - 06.23 திதி : அமாவாசை

## மேஷம்
[ அசுவினி, பரணி, கார்த்திகை 1 பாதம் ]

இந்த வாரம் வாழ்க்கையில் எல்லாவித முன்னேற்றங்கள் மற்றும் கௌரவத்தையும் அடைவர். சிலருக்கு தங்கள் மனதிற்குப் பிடித்த படி அனைத்து வசதிகளுடன் கூடிய அழகிய இல்லம் அமையும். நீங்கள் எடுக்கும் அனைத்து முயற்சிகளிலும் எப்பாடுபட்டாவது வெற்றி அடைவீர்கள். சிலருக்கு வீண் அலைச்சல்கள் ஏற்படும். பணிபுரிபவர்களுக்கு மேலதிகாரிகளின் ஆதரவால் உயர் பதவிகள் கிடைக்கும். அரசுப் பணியில் உள்ளவர்களுக்கு புதிய பதவிகள் தேடிவரும். அந்தஸ்தும் உயரும். விவசாயிகளுக்கு எதிர்பார்த்த ஆதாயம் கிட்டும்.

## ரிஷபம்
[ கார்த்திகை 2,3,4, ரோகிணி, மிருகசீரிஷம் 1,2 ]

இந்த வாரம் நீண்ட நாட்களுக்குப் பிறகு உங்கள் இல்லத்திற்கு விஜயம் செய்யும் விருந்தினரோடு பொழுதைக் கழிப்பது மகிழ்ச்சி தரும். தாயின் அன்பும், அரவணைப்பும் கவலைகளை மறக்கச் செய்யும். புதிய தொழில் விரிவாக்க முயற்சிகளால், பொருளாதார நிலை உயரும். தொலைதூரப் பயணங்களின் மூலம் நன்மை ஏற்படும். சிலருக்கு வெற்றிகரமான தொழில் முன்னேற்றங்கள் ஏற்படும். எதிரிகளின் பணமும் வந்து சேரும்.

## மிதுனம்
[ மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ]

இந்த வாரம் பெற்றோர்களால் நன்மை ஏற்படும். குடும்ப வாழ்க்கையில் மகிழ்ச்சி நிலவும். சிலருக்கு குழந்தைப் பிறப்புக்கான வாய்ப்பு உருவாகும். உல்லாசப் பயணங்களால் சந்தோஷம் நிலவும். சிலருக்கு வெற்றிகரமான தொழில் முன்னேற்றங்கள் ஏற்படும். மேடைப் பேச்சாளர்கள் உங்கள் பேச்சின் மூலம் வருமானம் ஈட்டுவர். அரசாங்கத் துறைகள் மூலம் எதிர்பார்த்த அனுகூலங்கள் யாவும் வந்து சேரும். பிரிந்த உறவுகள் சேரும். வாழ்க்கையில் முன்னேற்றங்கள் மற்றும் கௌரவத்தையும் அடைவீர்கள். தொலைதூரப்

## கடகம்
[ புனர்பூசம் 4, பூசம், ஆயில்யம் ]

இந்த வாரம் நீங்கள் எதிர்பார்த்த இடங்களில் இருந்து பணவரவு தாராளமாக இருக்கும். விருந்தினர் வருகையால் மனம் மகிழ்ச்சி ஏற்படும். அவர்களுடன் சினிமா போன்ற கேளிக்கைகளில் ஈடுபட்டு இன்பம் அடைவீர்கள். வாக்குவன்மை ஓங்கும். வாகன வசதியும், நற்கல்வியும் கிடைக்கும். புதிய நண்பர்களால் நன்மை ஏற்படும். விரைவு (பாஸ்ட் புட்) உணவுகளைத் தவிர்ப்பது நல்லது. சிலருக்கு புதிய தொழில் முயற்சிகளில் ஈடுபடும் போது கவனம் தேவை. பக்தி சொற்பொழிவுகள் கேட்பதன் மூலம் ஞானம் பெருகும்.

## சிம்மம்
[ மகம், பூரம், உத்திரம் 1 ]

இந்த வாரம் பக்தி மார்க்கத்தில் ஈடுபாடு அதிகரிக்கும். தொலைதூர செய்திகள் வர இல்லத்தில் மகிழ்ச்சி பெருகும். அழகிய ஆடை ஆபரணங்கள் வாங்குவீர்கள். நல்லவர்களுடன் ஏற்படும் பழக்கத்தால் நல்லதே நடக்கும். வியாபாரிகளுக்கு புதிய பொருட்களின் வரவால், பணவரத்து அதிகரிக்கும். நல்லோர் சேர்க்கையால் மாணவர்களுக்கு கல்வியில் தேர்ச்சி உண்டு. உங்கள் உடலில் சுறுசுறுப்பு குறைந்து, சோம்பல் அதிகரிக்கும். மற்றவர்கள் உயர்வைக் கண்டு பொறாமை கொள்ளாதிருப்பது நல்லது.

## கன்னி
[ உத்திரம் 2,3,4, அஸ்தம், சித்திரை 1,2 ]

இந்த வாரம் சுப காரியங்களுக்கு வீடே விழாக் கோலம் பூணும். திடீரென ஏற்படும். பயணங்களால் ஆதாயமும், மகிழ்ச்சியும் ஏற்படும். இசை ஆர்வத்தால் சங்கீத சபா களுக்குச் சென்று இசை கேட்டு மகிழ்வார்கள். தொழில் வாய்ப்புகள் பிரகாசமாக இருக்கும். மாணவர்களுக்கு கல்வியில் தேர்ச்சி உண்டு. உத்தியோகம் மற்றும் தொழிலில் அபிவிருத்தி ஏற்படும். நீங்கள் எதிர்பாராத விதத்தில் புதிய இடத்திற்கு பணி மாற்றங்கள் ஏற்படலாம். சிலருக்கு பிரிவும், பகையும் ஏற்படலாம். வியாபாரிகளுக்கு அதிக இலாபம் கிடைக்கும்.

## துலாம்
[ சித்திரை 3,4, சுவாதி, விசாகம் 1,2,3 ]

இந்த வாரம் இனிய பயணங்களால் மகிழ்ச்சி அதிகரிக்கும். மனைவி, மக்களின் உடல் நலக் குறைவால் மருத்துவச் செலவுகள் ஏற்படலாம். குடும்பத்திற்காக உங்கள் சந்தோஷங்களை தியாகம் செய்வீர்கள். குடும்பத்தினரிடையே வீண் மனஸ்தாபங்கள் தவிர்த்தால் வீட்டில் அமைதி நிலவும். பல புண்ணியத் தலங்களுக்கு பயணம் செய்யும் வாய்ப்பு கிட்டும். புத்திர பாக்கியம், சுபகாரிய நிகழ்ச்சிகள் ஆகியவற்றால் இல்லத்தில் மகிழ்ச்சி பொங்கும். தொழிலில் நல்ல வளர்ச்சி ஏற்படும். திடீர் பயணங்கள் மூலம் ஆதாயங்கள் ஏற்படும்.

## விருச்சிகம்
[ விசாகம் 4, அனுஷம், கேட்டை ]

இந்த வாரம் பெண்கள் மூலம் மன மகிழ்ச்சி ஏற்படும். வீட்டில் சுப காரியங்கள் நடக்கும் போது நெருங்கிய உறவுகளின் ஒத்துழைப்பால் நிகழ்ச்சி சிறப்பாக அமையும். நல்ல எண்ணங்களை வளர்த்துக் கொண்டால் மன அமைதி கிடைக்கும். பொருளாதார நிலையைப் பொறுத்தவரை சிரமமான காலம். புதிய தொழில் தொடங்க எடுக்கப்படும் முயற்சிகளில் வெற்றி ஏற்பட்டுத் தொழிலில் நல்ல வளர்ச்சி ஏற்படும். உயர் பதவிகள் கிடைக்கும்.

## தனுசு
[ மூலம், பூராடம், உத்திராடம் 1 ]

போட்டித் தேர்வுகளில் எதிர்பார்த்த வெற்றி கிட்டும். எல்லா வசதிகளும் இன்பமும் ஏற்படும். உறவுகளை அனுசரித்து சென்றால் அவர்களின் உதவிகள் கேட்காமலே கிடைக்கும். சிலருக்கு உழைப்பு அதிகமாகி களைப்பும், சோர்வும் ஏற்படும். பணிபுரியும் பெண்களுக்கு சாதகமான நிலை உருவாகி பதவி உயர்வுகளை எதிர்பார்க்கலாம். கல்வியில் குழந்தைகளின் தேர்ச்சி, பெற்றவர்களை பெருமை கொள்ளச் செய்யும். அரசியலில் சிலருக்கு மாவட்ட பொறுப்புகள் தேடி வரும். எளிதில் பணி உயர்வு கிடைக்கும்.

## மகரம்
[ உத்திராடம் 2,3,4, திருவோணம், அவிட்டம் 1,2 ]

இந்த வாரம் உங்களுக்கு அனைத்து சுக சௌகரியங்கள் அதிகரிக்கும். சுபசெய்திகள் கேட்டு மனம் மகிழும். வெளிநாட்டுப் பயணம் மற்றும் வாணிபத்தால் தன லாபம் அதிகரிக்கும். வீட்டில் அமைதியும், நிம்மதியும் நிலவும். பக்தி மார்க்கத்தில் ஈடுபாடு அதிகரிக்கும். அரசு ஊழியர்களுக்குக் கட்டளைகளை இடும்படியான அதிகாரம் மிக்க உயர் பதவிகள் கிடைக்கும். கல்வியைப் பொறுத்தவரை பிள்ளைகளிடம் நல்ல உயர்வான முன்னேற்றங்களை எதிர்பார்க்கலாம். கூட்டாளிகளின் நியாயமற்ற செயல்பாடுகள் எரிச்சலைத் தரும்.

## கும்பம்
[ அவிட்டம் 3,4, சதயம், பூரட்டாதி 1,2,3 ]

இந்த வாரம் பல வழிகளில் வருமானம் கூடுதலாக வரும். பூமி அல்லது வாகனம் வாங்கும் யோகம் ஏற்படும். மனைவியுடன் கருத்து வேறுபாடு ஏற்படாது இருக்க அனுசரித்துச் செல்வது நல்லது. மனதில் தெய்வ பக்தி மேலிடும். மனதில் நினைத்ததை நினைத்தபடியே சாதிக்கும் திறன் அதிகரிக்கும். நல் ஆரோக்கியம் ஏற்படும். அழகான, எழில் நிறைந்த வீடு கிடைக்கும். தாயின் ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. சிலருக்கு குடும்ப வாழ்க்கையில் குழப்பம் வரலாம். தலைவலி போன்ற சிறு சிறு உபாதைகள் ஏற்படலாம்.

## மீனம்
[ பூரட்டாதி 4, உத்திரட்டாதி, ரேவதி ]

இந்த வாரம் இனிய தகவல்கள் இல்லம் தேடி வரும். சுற்றமும், நட்பும் சூழ சுபகாரியப் பேச்சுக்கள் நடைபெறும். நல்ல புத்திர பாக்கியம் ஏற்படும். எதிர்பார்த்த இனங்களில் இருந்து தனவரவு ஏற்படும். குடும்ப உறவுகளின் முழுமையான ஒத்துழைப்பு மூலம் குடும்ப முன்னேற்றம் சாத்தியப்படும். மனங்கவர்ந்த அன்புமிக்க பெண்கள் மூலம் ஆனந்தம் பெருகும். எச்சரிக்கையுடன் செயல்பட்டு எதிரிகளை முறியடிப்பீர்கள். நெருங்கிய நண்பர்களின் உதவியால் கூட்டாளிகளிடையே ஏற்பட இருந்த குழப்பங்கள் சரியாகும்.

# மக்களவை மகா யுத்தம்; தாழியை உடைக்கும் தலைவர்கள்!





வெ.சந்திரமோகன்

மக்களவைத் தேர்தல் நெருங்கிவிட்ட நிலையில், எதிர்மறையான பல நிகழ்வுகளை எளிதில் கடந்து, எதிர்க்கட்சியினரின் விமர்சனங்களையும் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்தியபடி முன்னேறுகிறது பாஜக. முன்பைவிட நல்ல நிலைமைக்கு நகர்ந்துவிட்டாலும் சரியான திட்டமிடல் இல்லாமல் தடுமாறுகிறது இண்டியா கூட்டணி.

**வார்த்தை வம்பு:**

பாட்னாவில் நடந்த இண்டியா கூட்டணிக் கூட்டத்தில், “மோடிக்குக் குடும்பம் இல்லாததால்தான் வாரிசு அரசியல் குறித்துப் பேசுகிறார்” என்பதாக லாலு பிரசாத் யாதவ் பேசியது பாஜகவினருக்குப் புதிய ஆயுதமாகியிருக்கிறது. 2014இல் மோடியை ஒரு டீக்கடைக்காரர் என்று குறிக்கும் வகையில் காங்கிரஸின் மணிசங்கர் அய்யர் பேசியதால், ‘சாய் பே சர்ச்சா’ என்ற பெயரில் டீக்கடைகளில் பிரச்சாரம் செய்யத் தொடங்கினார் மோடி.

2019 மக்களவைத் தேர்தலுக்கு முன்னர், ரஃபேல் போர் விமான ஒப்பந்த விவகாரத்தை முன்வைத்து ‘சௌகிதார் சோர் ஹை’ (காவல்காரர் ஒரு திருடன்) என மோடியைக் குறிப்பிட்டு ராகுல் காந்தி சொன்னதை வைத்து, பாஜகவினர் டிவிட்டர் கணக்குகளில் தங்கள் பெயருடன் சௌகிதார் என்ற சொல்லைப் பின்னொட்டாகச் சேர்த்துக்கொண்டனர். இரண்டு முறையும் வெற்றி கிட்டியது.

இப்போது, மோடியின் குடும்பத்தினர் என்று தங்களை அழைத்துக்கொள்ளத் தொடங்கியிருக்கின்றனர். “மோடியின் ‘அசல் குடும்பத்தினர்’ இந்தியாவைக் கொள்ளையடிக்கிறார்கள்” என்றெல்லாம் காங்கிரஸ் பதிலடி கொடுத்தாலும் அது ஊடகங்களில் பிரதானமாக இடம்பெறுவதில்லை.

போதாக்குறைக்கு, திமுக குறித்த பிரதமரின் பேச்சுக்குப் பதிலடி என ராமர், இந்தியா குறித்து திமுக எம்.பி. ஆ.ராசா பேசியது பாஜகவுக்கு இன்னொரு ஆயுதமாகியிருக்கிறது. இந்தியாவின் முன்னணி நாளிதழ்களின் முகப்புப் பக்கத்தில் இது குறித்த செய்திகள் வெளியாகின்றன.

“ஆ.ராசாவின் கருத்தை நாங்கள் ஏற்கவில்லை” என்று காங்கிரஸார் பதறத் தொடங்கியிருக்கின்றனர். “சீனாவில் இளைஞர்கள் செல்போன் தயாரிப்பில் ஈடுபடுகிறார்கள். இந்திய இளைஞர்கள் செல்போனில் ரீல்ஸ் பார்க்கிறார்கள். செல்போன் பார்த்து, ‘ஜெய் சிறிராம்’ சொல்லி இளைஞர்கள் பசியில் சாகட்டும் என மோடி விரும்புகிறார்” என்று ராகுல் பேசியதையும் பலமாகப் பிடித்துக்கொண்டு, “காங்கிரஸ் இந்து விரோதக் கட்சி” என்று களமாடுகிறார்கள் பாஜகவினர்.

**பதறாத பாஜக:**

தேர்தல் பத்திரம் விஷயத்தில் பாஜக அரசுக்கு உச்ச நீதிமன்றம் வைத்த குட்டால் நிம்மதியடைந்திருந்த எதிர்க்கட்சிகள், தேர்தல் பத்திரம் தொடர்பான விவரங்களை ஜூன் மாதம் (மக்களவைத் தேர்தலுக்குப் பின்பு) வழங்க அவகாசம் கேட்டிருக்கும் பாரத் ஸ்டேட் வங்கியால் (எஸ்பிஐ) ஏமாற்றமடைந்திருக்கின்றன.

எஸ்பிஐ, பொதுத் துறை வங்கி என்பதால் அதன் பரிவர்த்தனைகளை மத்திய அரசால் எளிதில் தெரிந்துகொள்ள முடியும் என ஏற்கெனவே விமர்சிக்கப்பட்ட நிலையில், “மத்திய அரசு தரும் அழுத்தத்தால்தான் எஸ்பிஐ இப்போது தயங்குகிறது” என மல்லிகார்ஜுன கார்கே உள்ளிட்ட தலைவர்கள் விமர்சிக்கிறார்கள். இது தார்மிக அளவில் பாஜகவுக்கு நெருக்கடியை ஏற்படுத்தியிருக்கிறது. எனினும், அக்கட்சி வழக்கம்போல ‘தேர்தல் பணி’களில் தீவிரம் காட்டிவருகிறது.

*பாஜகவுக்குத் தாவும் தலைவர்கள்:*

2004 மக்களவைத் தேர்தலில் காங்கிரஸ் சார்பில் வாராணசியில் (தற்போது மோடியின் தொகுதி) வென்ற மூத்த தலைவர் ராஜேஷ் மிஸ்ரா, சமீபத்தில் பாஜகவில் சேர்ந்துவிட்டார் விஷயம் அது மட்டுமல்ல. “காங்கிரஸுக்கு வாராணசியில் ஒரு வாக்குச்சாவடி முகவர்கூட இல்லாமல் செய்துவிடுவேன்” என்று மிரட்டல் விடுத்திருக்கிறார் மிஸ்ரா.

சமாஜ்வாதியுடனான காங்கிரஸின் கூட்டணி அக்கட்சிக்கு அழிவைத் தரும் என்று சாபம் வேறு விட்டிருக்கிறார். இத்தனைக்கும், பிப்ரவரி 16இல் ராகுல் காந்தியின் நீதி யாத்திரை உத்தரப் பிரதேசத்துக்குள் நுழைந்தபோது ராகுல் காந்தியுடன் அவரும் இருந்தார். மாநிலக் காங்கிரஸ் தலைவர் பதவி தரப்படாததால் அதிருப்தியில் இருந்த அவரைக் கச்சிதமாகக் காய்நகர்த்தித் தூக்கிவிட்டது பாஜக.

மத்தியப் பிரதேசத்தில், கமல் நாத்தின் கலகம் ஒருவழியாக முடித்து வைக்கப்பட்டுவிட்டாலும் காங்கிரஸுக்குக் கசப்புகள் தொடரவே செய்கின்றன. ஒரு காலத்தில் மத்தியப் பிரதேச காங்கிரஸில் இருந்த கேபி சிங் யாதவ், பின்னர் பாஜகவில் சேர்ந்து குணா தொகுதி எம்.பி-ஆகிவிட்டார். காங்கிரஸில் இருந்தபோதே ஜோதிராதித்ய சிந்தியாவுடன் முட்டிக்கொண்ட கேபி சிங்குக்கு இந்த முறை - சிந்தியா தலையீட்டால் - சீட் கிடைக்கவில்லை.

உடனே, எதிர்க்கட்சித் தலைவர் உமங் சிங்கார், “காங்கிரஸின் கதவுகள் திறந்தே இருக்கின்றன. வாருங்கள்” என்று அழைப்பு விடுக்க, அதை கேபி சிங் உறுதியாக மறுதலித்துவிட்டார். ராகுல் காந்தி தனது நீதி யாத்திரையின் ஒரு பகுதியாக மத்தியப் பிரதேசத்தின் ஹாஜ்பூர் நகரில் பயணம் மேற்கொண்டிருந்த தருணத்திலும், மகாகாலேஸ்வரர் கோயிலுக்குச் சென்று வெளியில் வந்தபோதும் அவரை நோக்கி, ‘மோடி மோடி’ என்று பாஜகவினர் முழக்கமிட்டிருக்கிறார்கள்.

இமாச்சலப் பிரதேச காங்கிரஸ் எம்.எல்.ஏ-க்கள் ஆறு பேர் மாநிலங்களவைத் தேர்தலில் பாஜகவுக்கு ஆதரவாக வாக்களித்ததைத் தொடர்ந்து, அம்மாநில காங்கிரஸ் கலகலத்துக் கிடக்கிறது. முதலமைச்சர் சுக்விந்தர் சிங் சுகுவின் ஆட்சி நீடிக்குமா என்று கேள்வி எழும் அளவுக்கு அங்கு பல்வேறு குழப்பங்கள் நிகழ்கின்றன.

பாஜகவுக்குத்தான் இங்கு வெற்றி வாய்ப்பு அதிகம் என்கிற அளவுக்கு இமாச்சலப் பிரதேசக் காங்கிரஸ் தலைவர் பிரதீபா சிங்கே பேசியிருப்பது குறிப்பிடத்தக்கது. குஜராத்தில் காங்கிரஸ் மாநிலங்களவை உறுப்பினர் நரன் ரத்வா ஏற்கெனவே பாஜகவில் சேர்ந்துவிட்டார்.

முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் அர்ஜுன் மோத்வாடியா, குஜராத் காங்கிரஸ் செயல் தலைவர் அம்பரீஷ் தேர் ஆகியோரும் பாஜகவில் ஐக்கியமாகிவிட்டார்கள். “ராமர் கோயிலுக்குச் செல்ல கட்சித் தலைமை அனுமதிக்கவில்லை” என்று பின்னவர்கள் இருவரும் புகார் பத்திரம் வாசித்திருக்கிறார்கள்.

**பாஜகவின் திட்டங்கள்:**

பாஜகவின் முதலாம் வேட்பாளர் பட்டியலில் இடம்பெற்றிருக்கும் 195 பேரில், பெண்கள், பட்டியல் சமூகத்தினர், பழங்குடியினர், ஓபிசி பிரிவினர், இளைஞர்களுக்கு முக்கியத்துவம் தரப்பட்டிருக்கிறது. பாஜகவின் மத்திய தேர்தல் குழுவின் தலைவராக இருக்கும் பிரதமர் மோடி, வேட்பாளர் தேர்வில் நேரடியாக ஈடுபட்டிருக்கிறார்.

உத்தரப் பிரதேச அமைச்சரவையில் இரண்டு பாஜக எம்எல்ஏ-க்களுக்கும், சுஹேல்தேவ் பாரதிய சமாஜ் கட்சி (எஸ்பிஎஸ்பி), ராஷ்ட்ரிய லோக் தளம் (ஆர்எல்டி) கட்சி ஆகியவற்றிலிருந்து தலா ஒருவருக்கும் இடமளித்திருக்கிறார் யோகி ஆதித்யநாத். எஸ்பிஎஸ்பி கட்சிக்கு ராஜ்பர் சமூகத்தின் கணிசமான ஆதரவு உண்டு.

கிழக்கு உத்தரப் பிரதேசத்தின் 28 மக்களவைத் தொகுதிகளில் வெற்றியைத் தீர்மானிக்கும் சமூகம் அது. மற்ற மூவர் சார்ந்தும் அரசியல் ஆதாயங்கள் உண்டு. ஆதித்யநாத் இரண்டாவது முறை முதலமைச்சரான பின்னர் அமைச்சரவை விரிவாக்கம் இப்போதுதான் முதல்முறையாக நடக்கிறது என்பது இங்கு கவனத்துக்குரியது.

**பழைய நண்பர்கள்:**

ஒரு காலத்தில் தேசிய ஜனநாயகக் கூட்டணியில் இடம்பெற்றிருந்தாலும், பின்னர் தனி ஆவர்த்தனம் செய்துவரும் பிஜு ஜனதா தளம் மீண்டும் பாஜகவுடன் கைகோக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. பிரதமர் அலுவலகத்தின் தலைமைச் செயலாளர் பி.கே.மிஸ்ரா ஒடிஷாவுக்குச் சென்றதும், நவீன் பட்நாயக்கின் நம்பிக்கையைப் பெற்ற வி.கே.பாண்டியன் (முன்னாள் ஐஏஎஸ்) டெல்லிக்குச் சென்றதும் கூட்டணிக்கான ஏற்பாட்டுக்காகத்தான் எனச் சொல்லப்படுகிறது.

மக்களவைத் தேர்தலுடன் ஒடிஷா சட்டமன்றத் தேர்தலும் நடத்தப்படவிருக்கும் நிலையில், மக்களவைத் தேர்தலில் பாஜகவுக்கும், சட்ட மன்றத் தேர்தலில் பிஜு ஜனதா தளத்துக்கும் அதிக இடங் களைப் பகிர்ந்துகொள்ளலாம் எனப் பேச்சு நடப்பதாகத் தெரிகிறது. இத்தனைக்கு இடையிலும் பிஜு ஜனதா தள எம்எல்ஏ அரவிந்த் தாலி, பாஜகவில் இணைந்திருப்பது தனிக் கதை!

எதிர்க்கட்சியினர் மட்டுமல்ல் நீதிபதிகள்கூட பாஜகவில் சேரும் விநோதங்கள் நிகழ்கின்றன. கொல்கத்தா உயர் நீதிமன்ற நீதிபதியாக இருந்த அபிஜீத் கங்கோபாத்யாய, தனது பதவியை உதறிவிட்டு பாஜகவில் சேர முடிவெடுத்துவிட்டார். அநேகமாக இவருக்கு கிழக்கு மேதினிபூரில் உள்ள தாம்லுக் தொகுதி வழங்கப்படலாம் எனத் தெரிகிறது. திரிணமூல் காங்கிரஸிலிருந்து வெளியேறிய மூத்த தலைவர் தபஸ் ராய் விரைவில் பாஜகவில் இணைவார் எனக் கூறப்படுகிறது.

ஒருபுறம் இப்படிப் பலரும் பாஜகவுக்குப் படையெடுத்துக்கொண்டிருப்பது, விமர்சன அடிப்படையில் இண்டியா கூட்டணிக் கட்சிகளுக்கு தார்மிக பலம் சேர்க்கக்கூடியதுதான். அதை முடிந்த அளவுக்குப் பயன்படுத்த எதிர்க்கட்சிகளும் முயலவே செய்கின்றன. ஆனால், கிடைத்த சந்தர்ப்பங்களை நழுவவே விடாத பாஜகவின் பலத்தைச் சுலபமாக எடைபோடும் தலைவர்கள் சிலர் உதிர்க்கும் வார்த்தைகள், பாஜகவின் பகடைக் காய்களாக மாறுவதுதான் இன்றைய யதார்த்தம். ●

# ஆறாம் - 6ஆம் திருத்தச்சட்டம் பதின்மூன்றாம் - 13ஆம் திருத்த சட்டம் கூறும் செய்தி என்ன?

**ச. வி. கிருபாகரன்**
பிரான்ஸ்

அமெரிக்கிவின் சுய உதவி எழுத்தாளர் ஆலிவர் நெப்போலியன் ஹில் ஒரு முறை கூறியிருந்தார் - "கூடுதலான மனிதர்களின் பொதுவான பலவீனம் - மற்றவர்களின் எதிர்மறையான செல்வாக்கிற்கு தங்கள் மனதை திறந்து வைக்கும் பழக்கம். ஆகையால், தோல்விக்கான சாத்தியக்கூறுகளில் அல்ல, வெற்றிக்கான சாத்தியக்கூறுகளில் கவனம் செலுத்துங்கள்". நெப்போலியன் ஹில்லால் அன்று கூறப்பட்ட இவ் விடயத்தை இன்றைய ஈழத் தமிழர் விவகாரங்களில் பல கோணங்களில் உற்று நோக்க முடியும்.

இக்கட்டுரையின் முக்கியமான நோக்கம் - ஈழத் தமிழர் ஏழுபது வருடங்களிற்கு மேலாக, சத்வீக போராட்டம், ஆயுத போராட்டத்தின் உச்ச கட்டம் வரை சென்றும், மீண்டும் பழைய நிலையில் அல்ல, எதிர்மாறாக இன்று, காணாமல் போனோர் உறவுகள் ஒரு பக்கம், மற்றைய பக்கத்தில் காணி விடுவிப்பு, இளைஞர் யுவதிகளின் போதை பொருள் பவனையால் இன்று வடக்கு கிழக்கு மிக மோசமான - கலை கலாச்சாரம் பொருளாதாரம் அரசியல் உட்பட ஆதாள பதளத்தில் நின்று தவிக்கிறார்கள்.

ஆனால் இன்றும் வாங்கு வங்கியை நம்பி அரசியல்வாதிகள், ஒற்றையாட்சிக்கு வெளியில் சமஷ்டி, தமிழ் ஈழம் என்ற யாதார்த்தத்திற்கு மிஞ்சிய கற்பனை கதைகளை மக்ளுக்கு கூறி, ஏமாற்றி வருகிறார்கள்.

சிறிலங்காவின் அரசியல் யாப்பில் கொண்டுவரப்பட்ட இரு திருத்த சட்டங்களான - 6வதும், 13வதும் வடக்கு கிழக்கு வாழ் தமிழர்களின் அரசியல் உரிமையை இலங்கைதீவில் நிர்ணயிப்பதற்காக காணப்படுகிறது. இதில் 6வது திருத்த சட்டம் தமிழர் அரசியல் உரிமை போராட்டத்தின் உச்ச கட்டமான தனி நாடு, அதாவது ஒற்றை யாட்சிக்கு வெளியில் என்ற பேச்சுக்கு இடம் இல்லாது செய்துள்ளது. அடுத்து கணப்படும் 13வது திருத்த சட்டம், இந்தியா - இலங்கை ஒப்பந்தத்தின் கீழ், வடக்கு கிழக்கு வாழ் மக்களிற்கு மட்டுமல்லாது, ஒத்து மொத்த இலங்கை வாழ் மக்களிற்கான 'மாகாண சபை மூல மான அரசியல் தீர்வை முன்வைக்கிறது. சுருக்கமாக கூறுவதனால் - ஒன்று கெடுக்கிறது மற்றையது ஏதோ ஒன்றை கொடுக்க முயற்சிக்கிறது.

### 6ஆம், 13ஆம் திருத்தங்கள்

இலங்கையின் அரசியலமைப்பின் ஆறாவது திருத்தம் சட்டம், 1983 ஆகஸ்ட் 8ம் திகதி நிறைவேற்றப்பட்டது. இலங்கையில் பிரிவினையை ஆதரிப்பது, ஒரு தனி நாட்டை நிறுவுவது முறற்சிப்பது எண்ணுவது திட்டமிடுவது, இது இலங்கை அரசின் "பிராந்திய ஒருமைப்பாடு, ஒற்றுமை மற்றும் இறையாண்மைக்கு" அச்சுறுத்தலாகக் கருதப்படுகிறதுடன் இவை யாவும் ஓர் கிரிமினல் குற்றமாகும் என கூறப்பட்டுள்ளது.

அத்துடன் இலங்கை நாடாளுமன்ற உறுப்பினர்கள் மட்டுமல்லாது வேறு உத்தியோகபூர்வ பதவிகளை வகிப்பவர்கள், இலங்கை எல்லைக்குள் தனிநாடு அமைக்க ஆதரவளிக்கக் கூடாது என்பதுடன், இது தொடர்பாக சத்தியப்பிரமாணம் செய்யக் கூடாது என்றும் கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் அரசியலமைப்பின் பதின்மூன்றாவது 13வது திருத்தம் சட்டம் என்பது, இலங்கையில் மாகாண சபைகளை 1987 ஆண்டு நவம்பர் மாதம் 14ம் திகதி நிறைவேற்றப்பட்ட அரசியலமைப்பின் திருத்தமாகும். இத்திருத்தம் சட்ட மூலம், சிங்களம் தமிழ் உத்தியோகபூர்வ மொழிகளாக ஏற்று கொண்டதுடன், ஆங்கிலம் பாவனை மொழியாக ஏற்று கொள்ளப்பட்டுள்ளது.

இலங்கைதீவில் 1977ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில் தமிழீழம், அதாவது சிறிலங்காவிலிருந்து பிரிந்து செல்லக்கூடிய வட்டுக்கோட்டைத் தீர்மானம் மக்களிடம் முன்வைக்கப்பட்டு, அன்றைய தமிழ் அரசியல் தலைமைகளால் ஆணை கோரப்பட்டது. வடக்கு கிழக்கில் உள்ள தமிழர்கள் பெரும்பான்மையாக தீர்மானத்திற்கு ஆதரவாக வாக்களித்து ஓர் உறுதியான ஆணையை வழங்கினர்.

1977 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் மக்கள் வழங்கிய ஆணையை, 6வது திருத்த சட்டம் கொண்டுவரப்பட்ட வேளையிலோ, அதற்கு பின்னர் கூட இதற்கு எதிராக எந்த வடக்கு கிழக்கு வாழ் பாரளுமன்ற உறுப்பினரும், தமது பதவியை இராஜினாமா செய்து தேர்தலில் போட்டியிடவோ அல்லது ஆறாவது திருத்தத்தை இரத்து செய்ய பொது வாக்கெடுப்பு நடத்த வேண்டுமென்றோ அல்லது இதை எதிர்த்து யாரும் நீதி மன்றம் இன்றுவரை சென்றதாக எந்த பதிவும் கிடையாது.

ஆனால் அண்மையில் வெளிநாடுகளில் உருவாகி மக்களிடை யே பிரபலியம் பெற்று இயங்கிவரும் ஓர் அமைப்பு, ஐ.நா. மனித உரிமை குழுவிற்கு (UN Human Rights Committee) புகார் செய்துள்ளார்கள் என்பது உண்மை. இதற்காக அவர்கள் பெரும் தொகையான பணத்தை செலவழித்து வழங்கறிஞர்களை அமர்த்தி வழக்கு தொடுத்தார்கள் என்பது மிகைப்படுத்தப்பட்ட தகவல்.

### ஐ.நா. மனித உரிமை குழு

ஐ.நா. மனித உரிமை குழு பற்றி மிக சுருக்கமாக கூறுவதனால், ஐ.நா. அங்கத்துவ நாடுகளின் பிரஜைகள், தமது நாட்டில் நீதி பெறகூடிய நிறுவனத்திடம், தமக்கான நீதி வழங்கப்படாவிடில், ஒரு குறிப்பிட்ட காலத்தின் பின்னர், இக் குழுவிற்கு புகார் செய்ய முடியும். இது பற்றி எனது முன்னைய கட்டுரைகளில் பல தடவைகள் வலியுறுத்தி உள்ளேன்.

இதற்கு ஊதரணமாக, படுகொலை செய்யப்பட்ட மாமனிதர்களான குமார் பொன்னம்பலம், ஜோசேப் பரராஜசிங்கம் போன்றோர்களின் விவகாரங்கள் பற்றி, இக் குழுவிற்கு அனுப்புமாறு இவர்களின் பிள்ளைகளான கஜேந்திர குமார் பொன்னம்பல், டேவிட் பரராஜ சிங்கம் ஆகியோரிற்கு, இது பற்றி தெரியப்படுத்தியிருந்த பொழுதிலும் அவர்கள் இவற்றை செய்ய முன்வவரவில்லை என்பது இங்கு குறிப்பிடதக்கது. இவர்கள் மட்டுமல்லாது யாரும் நீதி தேடி இக் குழுவிற்கு தமது மனுக்களை அனுப்பலாம்.

மாகாண சபையின் பிரகாரம், வடக்கு கிழக்கு வாழ் மக்களிற்கு ஓர் விசேட சலுகையாக இந்தியாவின் செல்வாக்கினால், இரு மாகாணசபைகளும் இணைந்த மாகாண சபை ஆரம்பத்தில் கொடுக்கப்பட்டிருந்தது. ஆனால் தெற்கில் வாழும் அரசியல்வாதிகள், விசேடமாக ஜே.வி.யின் செயற்பாட்டினால், நீதி மன்றத்தில் இரு மாகாண சபையும் பிரிக்கப்பட்ட பொழுது, தமிழ் அரசியல்வாதிகள், வழங்கறிஞர்கள் கை கட்டி வேடிக்கை பார்த்தார்கள் என்பது தான் உண்மையான யாதார்த்தம்.

இவ் இரு சட்டதிருத்தங்களை நாம் ஆராயும் பொழுது - வடக்கு கிழக்கில் பாரிய பகுதிளை தமது கட்டுபாட்டில் அவ்வேளையில் கொண்டிருந்த் தமிழீழ விடுதலை புலிகள், பிரேமதாசவுடனானா




பேச்சுவார்த்தை காலத்தில் 6வது திருத்த சட்டத்தை நீக்க வேண்டுமென வேண்டியிருந்தார்கள். ஆனால் இவர்கள் 13வது திருத்த சட்டத்தை ஆரம்பத்திலிருந்து எதிர்த்த பொழுதிலும், பிரேமதாசவுடனான பேச்சு வார்த்தையின் காலப் பகுதியில், தமிழீழ விடுதலை புலிகளின் மக்கள் அரசியல் கட்சி ஒன்றை பதிவு செய்து, மாகாணசபை தேர்தலில் பங்கு கொள்ள தயாராகியிருந்தார் என்பது சரித்திரம்.

### விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி – PFLT, 1989 இல் விடுதலைப் புலிகளின் அரசியல் பிரிவாக நிறுவப்பட்டது. 1989 ஆகஸ்ட் 12 ஆம் தேதி நடைபெற்ற அனைத்துக் கட்சி மாநாட்டில் பார்வையாளராக அக்கட்சி பங்கேற்று, தேர்தல்களில் பங்கேற்கத் தயாராக இருந்தது. 1990 இல் தனது முதலாவது மாநாட்டை மட்டக்களப்பு மாவட்டத்தின் வாகரையில் பிப்ரவரி 24 முதல் மார்ச் 1 வரை நடத்தியது. இருப்பினும், மீண்டும் போர் வெடித்த காரணத்தினால் அனைத்து அரசியல் செயல்முறைகளிலிருந்தும் அக்கட்சி விலகிகொண்டது. 2011ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் இக் கட்சியின் பதிவு நீக்கப்பட்டது.

இங்கு கூறுவது என்னவெனில், எமது கொள்கை எதுவாக இருப்பதில் என்ன தவறும் இல்லை. ஆனால் அதை நாம் வாழும் காலத்தில் அடைவதற்கோ, அல்லது எமது எதிர்கால சந்ததியினர் அடைய கூடிய யாதார்த்தின் அடிப்படையில் எமது அரசியல் ராஜதந்திர அணுகுமுறை இருக்க வேண்டும்.

இப்பொழுத தமிழீழம் பெற்று தருவேன் என்பதும், சமஸ்டி பெறலாமென கூறுவது யாவும் கற்பனை கதைகள். சுருக்கமாக கூறுவதனால், எம்மை மற்றவர்கள் ஏவியதற்காக நாம் எதையும் செய்வதற்கு முயலுவது, மிகவும் தவறான பதையில் எங்களையும், எங்களை நம்பி வந்த மக்களையும் பிழையான வழியில இட்டு செல்வதுடன், எமது சொந்த இருப்பு கேள்வி கூறியாக்கப்படும்.

ஆகையால் இன்றைய கால கட்டத்தில் நாம் யாருடைய கதையை கேட்டு செயல்படுகிறோம், எம்மை ஏவுபவர்களிற்கு அரசியல் செயற்பாடு, அனுபவம், ராஜதந்திரம், உலக அரசியல் புரிபவர்களாக உள்ளார்களா என்பதை, நாம் செயற்படுவதற்கு முன்னர் ஆராய வேண்டும். இல்லையேல் இறுதியில் யாவும் "விளலுக்கு இறைத்த நீராக"முடிவதுடன, மக்கள் பாதிப்பிற்கு ஆளாக்கப்படுவார்கள். இந்த நிலையில், எமது அரசியல் எதிரிகளும், உலகம் எம்மை பார்த்து ஏளனம் செய்யும் நிலைக்கு, நாம் ஒரு பொழுது இடம் கொடுக்கப்படாது.

### இந்தியாவின் ஆதரவு இல்லாது..

சுயநிர்ணய உரிமை என்பது இரண்டு பகுதியாக உள்ளது என்பதை அரசியல் புரிந்தவர்களுக்கு நன்றாக விளங்கும்.

ஒன்று, உள்வாரியான சுயநிர்ணய உரிமை, இதில் உள்வாரிய சுயநிர்ணய உரிமை என்பது - 13வது திருத்த சட்டத்தின் கீழ் ஏற்று கொள்ளப்பட்ட மாகாண சபைகளை கூறலாம். அடுத்து இரண்டாவது, வெளிவாரியான சுயநிர்ணய உரிமை என்பது, தமிழர் விடுதலைக் கூட்டணி தேர்தல் விஞ்ஞபத்திற்கு அமைய, வடக்கு கிழக்கு வாழ் மக்கள் பெரும்பான்மையாக வாக்களித்த 1977ம் தேர்தல் என்பதில் எந்தவித் சந்தேகமும் கிடையாது.

இதில் தமிழீழ விடுதலை புலிகளினால் வேண்டுகோளாக முன்வைக்கப்பட்ட இடைகால அரசு என்பதும், ஓர் உள்வாரீயான சுயநிர்ணய உரிமை என்றே கூறலாம். ஆனால் அரசு தரபின் வாதம், இவ் விடயத்தில் இரண்டாக காணப்பட்டது. பேச்சுவார்த்தை வேளையில் இவ் இடைகால தீர்வு பற்றிய விடயத்தை தாம் பரிசிலிக்கலாமென முதலில் கூறினார்கள். பேச்சுவார்த்தை முறிவடைந்த பின்னர், இவ் இடைகால தீர்வின் வரைவு, இறுதியில் ஓர் வெளிவாரியான சுயநிர்ணய உரிமை அடைவதற்கான வழிகளை வகுக்கும் என்று கூறினார்கள். எது எப்படியாக இருப்பினும், இடைகால தீர்வின் வரையறை உள்வாரியான சுயநிர்ணய தீர்வின் அடிப்படையிலேயே சமர்பிக்கப்பட்டது. இது அதை வரைந்த தமிழ் வல்லுநர்களின் திறமை என்று கூறலாம்.

தமிழீழ விடுதலை புலிகளின் நீண்ட கால ஆதரவாளனாக தமிழ் நாட்டில் திகழும், திரு. கே. எஸ். இராதகிருஸ்ணன், மிக அண்மையில் கூறிய விடயத்தை, இங்கு சிலருக்கு ஞாபகப்படுத்த விரும்புகிறேன். அவர் கூறியதாவது, "1987ம் ஆண்டு மாகாணசபைகள் உருவான பொழுது, "வடக்கு கிழக்கு இணைந்து, தமிழரை முதலாமைச்சராக கொண்ட ஓர் தீர்வை முன்வைக்கிறார்கள், அதை முதலில் எடுத்து கொள்ளுங்கள், மிகுதி பின்னர் பார்ப்போமென, தான் பாலா அண்ணவிடம், அதாவது தேசத்தின் குரல் அன்ரன் பாலசிங்கத்திடம் கூறிய பொழுது, தாம் இருவரும் இவ்விடயத்தில் முரண்பட்டதாக கூறியுள்ளார்". நாம் சிந்திக்க வேண்டிய விடயம் என்னவெனில், ஈழத்தமிழராகிய நாம், தற்பொழுது என்ன பலத்துடன், எப்படியான ஐக்கியத்துடன், எவ்வளவு நிலப்பரப்புடன் நிற்கிறோம் என்பதை நாம் கவனத்தில் கொள்ள வேணடும்.

தமிழீழத்தை அமைப்பதற்கான ஆயுத போராட்டம் ஓரளவு வெற்றி கண்டது என்பதை யாரும் மறுக்க முடியாது. ஆனால் சில கட்டங்களில் அரசியல் ராஜதந்திர முறைகளில் எமது சில அணுகுமுறையின் தவறுகளும், அயல் நாடான இந்தியாவின் அரைவணைப்போ ஆதரவு இல்லாமல் இருந்தவை, பாரிய காரணிகளாக காணப்பட்டவை. நாம் இன்றும் அதே கோட்டில் பயணிப்போமானால், மீண்டும் நாம் பாரிய பின்னடைவுகளை அடைவோம் என்பதில் எந்த ஐயமுமில்லை.

ஆனால் ஒன்று, எதிர்காலத்தில் இந்தியாவின் ஆதரவு இல்லாது தமிழீழ மக்களுக்கு எந்த அரசியல் உரிமையும் கிடைக்கும் என்பது, நாம் காணும் பகற்கனவாகவே இருக்கும். ஆகையால், இருக்கும் இடத்தை விட்டு இல்லாத இடத்தில் காலத்தை வீண் விரயம் செய்யாதீர்கள்.

# காணி அதிகாரம் குத்தகையில் காவல்துறை அதிகாரம் கிடையாது பதின்மூன்று மைனஸ் ஆகிறது!

**பனங்காட்டான்**

தமிழ் பிரதிநிதிகள் சிலருடன் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நடத்திய சந்திப்பொன்று பற்றி இரு தரப்பும் இதுவரை அதிகாரபூர்வமாக எந்தத் தகவலையும் வெளியிடவில்லை. ஆனால், இங்கு இடம்பெற்ற கருத்துப் பரிமாற்றங்கள் பற்றி சில குறிப்பிடத்தக்க விபரங்கள் வெளியாகியுள்ளன.

இலங்கை இந்திய ஒப்பந்தத்தினால் உருவான 13ஆம் திருத்தத்தின் அடிப்படை யிலான மாகாண சபைகளுக்கு அதிகாரங் களை வழங்கி நடைமுறைப் படுத்துவது பற்றி இச்சந்திப்பில் பேசப்பட்டுள்ளது.

ஜனாதிபதி பதவியை ஏற்ற காலத்தில், மாகாண சபைகளை முழுமையான அதிகாரங்களுடன் நடைமுறைப்படுத்துவேன் என்று கூறிய ரணில், பின்னர் படிப்படியாக அந்த நிலைப்பாட்டிலிருந்து தம்மை இறக்கி வந்துள்ளார். தமிழ்த் தேசிய கொள்கைசார் நாடாளுமன்ற உறுப்பினர்களுடனான சந்திப்பையும் மெதுமெதுவாக குறைத்து வந்தார்.

ஆனால், கடந்த வாரம் நடத்திய சந்திப்பில் இவ்விடயங்களை இறுக்கமாக அவர் சுட்டியுள்ளதாக ஊடகங்கள் வாயிலாக அறிய முடிகின்றது. காணி அதிகாரம், காவற்துறை அதிகாரம் என்பவை தொடர்பாக தமது நிலைப்பாடு என்ன என்பதை முன்னரிலும் பார்க்க சற்று மாறி நேரடியாகவே தெரிவித்துள்ளார் எனலாம்.

கடந்த சில மாதங்களாகக் கூறி வந்த காவற்துறை அதிகாரங்கள் மாகாண சபைகளுக்கு வழங்கப்படா மாட்டாதென்பதை இச்சந்திப்பில் அவர் அழுத்திக் கூறியுள்ளார். “மாகாண சபைகளுக்கு காவற்துறை அதிகாரம் கிடையாது” என்ற அவரது கூற்றின் மொழியூடான அர்த்தத்தைப் புரிந்து கொள்வதற்கு விளக்கம் தேவையில்லை.

13ஆம் திருத்தத்தில் இருக்கின்ற ஏதாவதொன்றை இல்லாமற் செய்வதென்றால் அதற்கு சட்டப்படி சில நடவடிக்கைகள் தேவை. நாடாளுமன்றத்தினூடாக நீக்குவதானால் மூன்றிலிரண்டு ஆதரவு தேவை. ஆனால், இந்த நடைமுறைகளை ஒதுக்கிவிட்டு ஜனாதிபதி பதவி வழியான தமக்குரிய நிறைவேற்று அதிகாரத்தைப் பயன்படுத்தும் நோக்கம் அவருக்கு இருக்கலாம்.

அரசியல் அமைப்புச் சபையையே மதிக்காது தம்மஷ்டப்படி தாம் விரும்புபவைகளை செயற்படுத்தும் ரணிலின் அரசியற்போக்கு எங்கும் பிரசித்தமானது. அண்மையில் பொலிஸ் மாஅதிபராக தேசபந்துவை நியமனம் செய்தது நல்லதொரு உதாரணம். முதலில் அவரை பதில் பொலிஸ் மாஅதிபராக நியமனம் செய்தார். அந்தப் பதவிக்காலம் முடிய அவரையே பொலிஸ் மாஅதிபராக நியமித்தார்.

இதற்கு அரசியலமைப்புச் சபையின் அங்கீகாரம் தேவை. அதன் நான்கு உறுப்பினர்கள் நியமனத்துக்கு ஆதரவாக வாக்களித்தனர். இருவர் எதிர்த்து வாக்களித்தனர். இருவர் வாக்களிப்பில் கலந்து கொள்ளவில்லை. வாக்களிப்பு எண்ணிக்கை சமநிலையில் வரும்போது மட்டும் சபாநாயகரின் வாக்கு முடிவைத் தீர்மானிக்கும். ஆனால், இந்த வாக்களிப்பில் சமநிலை ஏற்படவில்லை. எனினும், சபாநாயகர் யாப்பா அபேவர்த்தன எதிர்வாக்கு இரண்டையும் வாக்களிக்காத இரண்டையும் நான்காகக் கணக்கிட்டு, வாக்களிப்பு சமநிலையில் இருந்ததாக கருதி தமது வாக்கை ஆதரவுக்கு வழங்கி பொலிஸ் மாஅதிபர் நியமனத்தை அரசியலமைப்புச் சபை அங்கீகரித்ததாக முடிவெடுத்தார்.



இந்த முடிவை ஏற்றுக்கொள்ளாத எதிர்க்கட்சியினர் இப்பொழுது சபாநாயகருக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை நாடாளுமன்றத்தில் முன்வைத்துள்ளனர். பொலிஸ் மாஅதிபர் நியமனத்தை ஜனாதிபதி விரும்புகிறார் என்பதை உணர்ந்து அதற்கேற்றவாறு சபாநாயகர் பக்கம் சரிந்ததாக எதிர்க் கட்சிகள் குற்றம் சாட்டுகின்றன.

இவ்விடத்தில் ஜெனிவா மனித உரிமை பேரவையின் இலங்கை தொடர்பான தீர்மான வாக்கெடுப்பு கவனத்துக்கு வருகிறது. இலங்கை மீதான தீர்மானத்தின்போது தோற்றுப்போன இலங்கை அரசு வாக்கெடுப்பின் எண்ணிக்கையை வேறு விதமாக கணக்குக் காட்டி தனது முதுகை தானே தடவிக் கொடுத்து சிங்கள மக்களை பல தடவை ஏமாற்றியுள்ளது.

ஜெனிவா மனித உரிமைப் பேரவையின் வாக்களிப்புத் தகுதி சுழற்சி முறையில் 47 நாடுகளுக்கே உண்டு. இலங்கை மீதான தீர்மானத்துக்கு 22 நாடுகள் ஆதரவாக வாக்களித்தன. 11 நாடுகள் எதிர்த்து வாக்களித்தன. 14 நாடுகள் வாக்களிப்பில் பங்குபற்றவில்லை. இதனால், 11 மேலதிக வாக்குகளால் நிறைவேறியதை ஜெனிவா பேரவை அறிவித்தது.

ஆனால், இலங்கை அரசு தீர்மானத்தை எதிர்த்த 11 உடன், வாக்களிப்பில் பங்குபற்றாத 14ஐயும் சேர்த்து, மொத்தம் 47 நாடுகளில் 22 மட்டுமே தீர்மானத்தை ஆதரித்தன, 25 நாடுகள் ஆதரிக்கவில்லையென்று அறிக்கை விட்டது.

இதுபோன்றுதான் பொலிஸ் மாஅதிபர் நியமனத்திலும் அரசியலமைப்புச் சபையின் வாக்களிப்பு ஜெனிவா பாணியில் கணக்கிடப்பட்டு நியமனம் வழங்கப்பட்டுள்ளது. இதனை இங்கு விபரமாகக் குறிப்பிடுவதற்குக் காரணம், இதே பாணியில்தான் மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களையும் குழப்பகரமான வாக்களிப்புகள் மூலம் தமக்கு சாதகமாக்க ரணிலும் அவரது கூட்டமும் முனையலாம் என்பதற்கான முன்னெச்சரிக்கைக்காகவே.

> 1987ஆம் ஆண்டு இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் மூலஅம்சங்கள் காணி மற்றும் காவற்துறை அதிகார பரவலாக்கல். இந்த ஒப்பந்தத்தில் ஜே.ஆர்.ஜெயவர்த்தன கைச்சாத்திடும்போது அந்த அரசில் கல்வி அமைச்சராகவிருந்து முழுமையாக நாடாளுமன்றத்தில் ஒப்புதல் வழங்கியவர் அவரது பெறாமகனான ரணில் விக்கிரமசிங்க. இப்போது, தமது ஜனாதிபதி பதவியைப் பயன்படுத்தி காவற்துறை அதிகாரத்தைப் பறித்து காணிகளை லீசில் (குத்தகை) காணிக்காரர்களுக்கே வழங்க அவர் திட்டமிடுகிறார்.

தமிழ் பிரதிநிதிகளுடன் நடத்திய சந்திப்பில் ரணில் எடுத்துக்கொண்ட இரண்டாவது விடயம் மாகாண சபைகளின் காணி அதிகார விவகாரங்கள். காவற்துறை அதிகாரங்கள் கிடையாது என்ற அவரது கூற்றினூடாக, காணி அதிகாரங்களில் மாற்றமிருக்காது - அதாவது மாகாண சபைகளுக்கு காணி அதிகாரங்கள் இருக்கும் என்ற அர்த்தம் தொனித்தது.

ஆனால், இது தொடர்பாக அவர் கூறியதாக வெளிவந்திருக்கும் தகவல்கள் வேறுவிதமானவை. தமிழர் தாயகத்தில் ராணுவம் ஆக்கிரமித்து வைத்திருக்கும் பொதுமக்களின் காணிகள் படிப்படியாக விடுவிக்கப்படும் என்று முன்னர் கூறிய ரணில், கஞ்சிக்குப் பயறு போடுவது போன்று ஆங்காங்கு சில காணிகளை விடுவித்து வந்தாராயினும் அதனை காணி விடுவிப்பு என்று ஏற்றுக்கொள்ள முடியாது.

அவ்வாறு விடுவிக்கப்பட்டதாக கூறப்படும் காணிகளில் தங்கள் குடிமனை இருந்த இடத்தை அடையாளம் காணமுடியாது காணியின் சொந்தக் காரர்கள் திக்குமுக்காடுகிறார்கள். அவர்களின் வீடுகளையும் தோட்டங்களையும் காணவில்லை. சில வீடுகளின் கதவுகள், ஓடுகள், தளபாடங்கள் களவாடப்பட்டுள்ளன. விடுவிக்கப்பட்ட பிரதேச ஆலயங்களில் விக்கிரகங்களைக் காணவில்லை. இவ்விடங்களுக்கு காணிக்காரர்கள் சென்றுவர ராணுவம் நேரக்கட்டுப்பாடு விதிக்கிறது. இவ்வாறு பல இன்னல்கள்.


எத்தனை இடைஞ்சல்கள் இருந்தாலும் தங்களின் காணிகளை மீளப்பெற விரும்பும் பொதுமக்களுக்கு இச்சந்திப்பில் ரணில் வழங்கிய செய்தி இதுதான்: “காணிச் சொந்தக்காரர்களுக்கு இப்போது அவர்களின் காணிகள் லீசிங்கில் (குத்தகையில்) வழங்கப்படும்” என்பது. இதன் அர்த்தமானது - காணிச் சொந்தக் காரர்கள் தங்களின் காணிகளை அரசிடமிருந்து குத்தகைக்குப் பெற வேண்டும். அதாவது காணிகள் மீளளிக்கப்பட மாட்டாது. எவ்வளவு காலத்துக்கு குத்தகை தொடரும் என்பதற்கும் நம்பிக்கை தரும் அறிவிப்பு இல்லை. அப்படியானால் தொடர்ந்தும் இந்தக் காணிகளை ராணுவத்தினரே மேற்பார்வை செய்யலாம் என்பது இந்தக் கூற்றினூடாக வெளிப்படுகிறது.

ஜனாதிபதி என்ற வகையில் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்த காணி, காவற்துறை அதிகாரங்களின்மை என்பவை இயங்காத மாகாண சபைகளுக்கு எதற்காக என்ற கேள்வி எழுகிறது. காணி அதிகாரங்கள் இப்பொழுது தொல்பொருள் திணைக்களத்தின் கட்டுப்பாட்டுக்குள் சென்றுவிட்டது. சொல்லப்போனால் இந்தத் திணைக்களம் தனியொரு சிங்கள பௌத்த அரசாக இயங்குகிறது. குருந்தூர் மலை, வெடுக்குநாறி மலை, மட்டக்களப்பு மயிலத்தனை தரை, தையிட்டி பௌத்த விகாரை அமைப்பு என்ற தமிழர் தாயகத்தின் சகல இடங்களிலும் தொல்பொருள் திணைக்களம் தன்னிச்சையாக இயங்குகிறது. இதற்கு உடந்தையாக காவற்துறையும் ராணுவப் படைத்தரப்பும் உள்ளன.

கடந்த வெள்ளிக்கிழமை வெடுக்குநாறிமலை ஆதிசிவன் கோவிலுக்கு மகாசிவராத்திரி வழிபாட்டுக்குச் சென்ற பூசகர்களுக்கும் அடியவர்களுக்கும் என்ன நடைபெற்றது என்பது அனைவரும் அறிந்தது. நீதிமன்ற அனுமதியையே காவற்துறை உதாசீனம் செய்யும் அரச இயந்திரம் ரணில் ஆட்சியில்.

காங்கேசன்துறை தையிட்டியில் எந்த அனுமதியும் பெறாது பௌத்த விகாரை கட்டுவதற்கு மக்கள் தொடர் எதிர்ப்பை காட்டி வருகின்றனர். இப்போது ராணுவம் புதிய கதையொன்றை அவிட்டுவிட்டுள்ளது. 1960ம் ஆண்டில் இக்காணிகளில் 406 சிங்களவர்கள் வாழ்ந்ததாகவும், இக்காணிகள் அவர்களுக்குச் சொந்தமானது எனவும் ராணுவத் தரப்பால் அவர்களுக்கு விளக்கம் கொடுக்கப்படுகிறது.

1960களில் எந்தச் சிங்களவர் இங்கே இருந்தார்கள், என்ன செய்தார்கள் என்பதை அடுத்து வரும் இன்னொரு பத்தியில் விரிவாக நோக்குவோம். ●




# கோட்டாவின் புத்தகம்



வீரகத்தி தனபாலசிங்கம்

கோட்டாபய ராஜபக்ச கடந்த வியாழக்கிழமை “என்னை ஜனாதிபதி பதவியில் இருந்து அகற்றுவதற்கான சதி” (The Conspiracy to oust me from the Presidency) என்ற தலைப்பில் நூல் ஒன்றை வெளியிட்டிருக்கிறார். ஆங்கிலத்திலும் சிங்களத்திலும் எழுதப்பட்டிருக்கும் அந்த நூலை இலங்கையின் முக்கியமான நூல் நிலையங்களில் பெற்றுக்கொள்ளமுடியும் என்று அவர் கடந்த வாரம் வெளியிட்ட ஊடக அறிக்கையில் அறியத் தந்திருக்கிறார். கொழும்பில் அரசியல்வாதிகளையும் இராஜதந்திரிகளையும் அழைத்து பெரும் ஆரவாரத்துடன் நூல் வெளியீட்டு வைபவத்தை நடத்துவதை அவர் தவிர்த்திருக்கிறார்.

உள்நாட்டு, வெளிநாட்டு ஊடகங்கள் இந்த நூலுக்கு பெரும் முக்கியத்துவம் கொடுப்பதை காணக்கூடியதாக இருக்கிறது. ஆனால், இலங்கையில் மக்கள் மத்தியில் பெரிய பரபரப்பை நூல் ஏற்படுத்தியிருப்பதாகக் கூறமுடியாது.

இலங்கையில் இதுகாலவரையில் பதவியில் இருந்த நிறைவேற்று அதிகார ஜனாதிபதிகளில் மக்கள் கிளர்ச்சியின் விளைவாக அதிகாரத்தைத் துறக்க நிர்ப்பந்திக்கப்பட்ட முதல் ஆளான கோட்டாபய நூலுக்கு வேறு தலைப்பைக் கொடுத்திருந்தால் சிலவேளை கூடுதல் கவனத்தை ஈர்த்திருக்க முடியும்.

சதி முயற்சி என்பது ராஜபக்ஷாக்கள் நெடுகவும் கூறிவருகின்ற ஒன்று என்பதால் நூல் ஒரு பழைய கதை என்று பலரும் கருதவும் இடமிருக்கிறது. சதிக் கோட்பாடுகளைப் புனைவது ராஜபக்ச சகோதரர்களுக்கு கைவந்த கலை. 2015 ஜனாதிபதி தேர்தலில் தோல்வியடைந்த மகிந்த ராஜபக்ச தன்னை தோற்கடித்தது இந்திய புலனாய்வுப் பிரிவான “றோ” தான் என்று பகிரங்கமாகவே கூறினார்.

இலங்கையில் முன்னென்றும் இல்லாத வகையில் இரு வருடங்களுக்கு முன்னர் தங்களை ஆட்சியதிகாரத்தில் இருந்து விரட்டிய ‘அறகலய’ மக்கள் கிளர்ச்சியை உள்நாட்டு, வெளிநாட்டு சக்திகளின் சதி என்று ராஜபக்சாக்கள் நெடுகவும் கூறிவருகிறார்கள். படுமோசமான பொருளாதார நெருக்கடிக்கு காரணமான ஊழல் தலைவிரித்தாடிய தங்களது தவறான ஆட்சிமுறைக்கு எதிராகவே மக்கள் தன்னியல்பாக வீதிகளில் இறங்கி கிளர்ச்சி செய்தார்கள் என்பதை ராஜபக்சாக்கள் ஒருபோதும் ஏற்றுக்கொள்வதில்லை.

கோட்டாபயவுக்கு முன்னர் ராஜபக்ஷாக்களின் அதிவிசுவாசிகளில் ஒருவராக இருந்து பிறகு அமைச்சர் பதவி பறிக்கப்பட்டதன் காரணமாக அவர்களை விட்டு வெளியேறிய தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்சவும் “ஒன்பது மறைக்கப்பட்ட கதைகள்” (Nine: The Hidden Story) என்ற நூலை கடந்த வருடம் வெளியிட்டு மக்கள் கிளர்ச்சிக்கு பின்னணியில் வெளிநாட்டுச்சதி இருந்ததாகக் குற்றஞ்சாட்டினார்.

உள்நாட்டுப் போரின் முடிவுக்கு பிறகு கோட்டாபய அரசியலில் இறங்குவதற்கான ஓர் அச்சாரமாக 2012 ஆம் ஆண்டில் பத்திரிகையாளர் சி.ஏ. சந்திரப்பிரேமா “கோட்டாவின் போர் இலங்கையில் தமிழ்ப் புலிகளின் பயங்கரவாதம் ஒழிப்பு” ( Gota's war: The crushing of Tamil Tiger terrorism in Sri Lanka) என்ற நூலை எழுதி வெளியிட்டார். அந்த நூல் மகிந்த ராஜபக்ச ஆட்சியில் பாதுகாப்பு செயலாளராக இருந்த கோட்டாபயவுக்கே போர் வெற்றிக்கான முழுப் பெருமையையும் உரித்தாக்கும் நோக்கில் எழுதப்பட்டது.

நீண்டகால மௌனத்தைக் கலைத்து கோட்டாபய தற்போது தனது நூலை வெளியிட்டிருப்பது மீண்டும் அரசியலுக்கு வருவதற்கான களத்தை அமைப்பதில் முதல் அடியெடுத்துவைப்பாக இருக்கலாம் என்ற ஊகங்களும் ஒருபுறம் கிளம்புகின்றன.

சர்வதேச சக்திகளின் அனுசரணையுடன் முன்னெடுக்கப்பட்ட ஆட்சிமாற்ற நடவடிக்கையின் விளைவாகவே அதிகாரத்தில் இருந்து தான் இறங்கவேண்டி வந்தது என்று கோட்டாபய நூலில் விபரிக்கிறார். ஆட்சிக்கவிழ்ப்பு சதி பற்றிய தனிப்பட்டதும் நேரடியானதும் அனுபவத்தின் விளக்கம் என்று நூலை அவர் வர்ணிக்கிறார். எந்த நாட்டினதும் பெயரைக் குறிப்பிடுதை அவர் தவிர்த்திருக்கிறார்.

சீனாவுக்கும் ஏனைய நாடுகளுக்கும் இடையிலான புவிசார் அரசியல் போட்டியே தனது வீழ்ச்சிக்கு பொறுப்பு என்பது அவரது நிலைப்பாடு. 2006 ஆம் ஆண்டுக்கு பிறகு சீனாவின் நிதியுதவியுடன் முன்னெடுக்கப்பட்ட உட்கட்டமைப்புத் திட்டங்கள் இலங்கையில் புவிசார் அரசியல் போட்டிப் போக்கு ஒன்றைக் கொண்டு வந்ததன் விளைவே தனது அரசியல் வீழ்ச்சி என்பது அவரது தர்க்க நியாயம்.

வெளிநாட்டுச் சதி இருக்கவில்லை என்று எவராவது கூறுவார்களேயானால் அவர்கள் உண்மையில் பத்தாம்பசலிகளாகவே இருக்கமுடியும் என்று வேறு அவர் கூறுகிறார்.



நூலின் நோக்கம் குறித்து அதை வாசிக்காமேயே சுருக்கமாக விளங்கிக் கொள்ளக்கூடியதாக கோட்டாபய கடந்த வாரம் வெளியிட்ட அறிக்கை அமைந்திருந்தது.

“விடுதலை புலிகளுக்கு எதிரான போரில் நாம் வெற்றிபெற்ற நாளில் இருந்து இலங்கையில் கடுமையான வெளிநாட்டுத் தலையீடு தொடங்கிவிட்டது. 2019 நவம்பரில் நான் ஜனாதிபதியாக தெரிவான நேரம் தொடக்கம் என்னை அதிகாரத்தில் இருந்து அகற்றும் நோக்குடன் உள்நாட்டு, வெளிநாட்டு சக்திகள் செயற்படத் தொடங்கிவிட்டன.

“நான் பதவியேற்ற உடனடியாகவே இலங்கையிலும் உலகம் முழுவதும் கொவிட் - 19 பரவத்தொடங்கிவிட்டது.

> ***அறகலய மக்கள் கிளர்ச்சி சிங்கள பௌத்தர்களின் நலன்களுக்கு எதிரானது என்ற கோட்டாபய ராஜபக்சவின் கருத்து தங்களது செல்வாக்கை கட்டியெழுப்புவதற்கு வெளிநாட்டுச்சதி சிறுபான்மைச் சமூகங்களுக்கு எதிரான அரசியலலைப் பயன்படுத்தி மீண்டும் பெரும்பான்மை இனவாத அணிதிரடடலில் மாத்திரமே ராஜபக்சாக்கள் நம்பிக்கை கொண்டிருக்கிறார்கள் என்பதை தெளிவாகக் காட்டுகிறது. அதைத் தவிர அவர்களுக்கு வேறு மார்க்கமேயில்லை***

அதைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளில் எனது இரண்டரை வருட பதவிக்காலத்தையும் செலவிடவேண்டியேற்பட்டது. தடுப்பூசி இயக்கத்தின் மூலமாக அந்த பெருந்தொற்று நோயை 2022 மார்ச் மாதமளவில் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்ததை அடுத்து பொருளாதாரம் மீட்சிபெறத் தொடங்கியதும் என்னை ஜனாதிபதி பதவியில் இருந்து அகற்றுவதற்கான நடவடிக்கைகளை சதிகாரச்சக்திகள் தொடங்கிவிட்டன.

“இன்று இலங்கையில் வெளிநாட்டுத் தலையீடும் உள்நாட்டு அரசியல் வெளிச் சக்திகளினால் சூழ்ச்சித்தனமாக கையாளப்படும் போக்கும் கசப்பான உண்மையாகிவிட்டது. இலங்கை சதந்திரமடைந்ததற்கு பின்னர் முதல் அறுபது வருடங்களில் இத்தகைய ஒரு நிலை காணப்படவில்லை. என்னைப் பதவியில் இருந்து அகற்றுவதற்கான அரசியல் முயற்சிகள், சுதந்திரம் பெற்றபிறகு தேர்தல்கள் மூலமாக அமைதியான முறையில் மாத்திரம் ஆட்சி மாற்றங்களைக் கொண்டுவந்த இலங்கையின் அரசியலில் புதிய போக்கைக் கொண்டு வந்துவிட்டன.

“அதனால் 2022 ஆம் ஆண்டின் நிகழ்வுகள் நாட்டின் எதிர்காலத்துக்கு பாரதூரமான விளைவுகளைக் கொண்டு வரும் ஆபத்து இருக்கிறது. சர்வதேச அனுசரணையுடனான ஆட்சிமாற்ற நடவடிக்கை ஒன்றின் நேரடியான, தனிப்பட்ட அனுபவத்தை விளக்கும் இந்த நூல் இலங்கையர்களுக்கு மாத்திரமல்ல, வெளிநாட்டவர்களுக்கும் அக்கறைக்கு உரியதாக இருக்கும்.”

**அறகலய பற்றிய வியாக்கியானம்**

கோட்டாபயவின் நூலில் மிகவும் முக்கியமான பகுதிகள் என்று ஊடகங்கள் தெரிந்தெடுத்து கடந்த இரு தினங்களாக வெளியிட்டவற்றை அடிப்படையாகக் கொண்டதாகவே இந்த கட்டுரை அமைகிறது. “அறகலய” மக்கள் கிளர்ச்சி குறித்து அவர் எழுதிய பகுதிகளை பல ஊடகங்கள் மேற்கோள் காட்டி கருத்துக்களைத் தெரிவித்திருக்கின்றன.

அறகலயவுடன் தொடர்புடைய சகல போராட்டங்களையும் குறிப்பாக கொழும்பில் நடைபெற்ற போராட்டங்களை தொடர்ந்தும் தான் அதிகாரத்தில் இருந்தால் சிறுபான்மைச் சமூகங்களின் நலன்களுக்கு பாதகமான முறையில் சிங்கள பௌத்தர்கள் பலமடைந்துவிடுவார்கள் என்ற பயத்தின் காரணமாக முன்னெடுக்கப்பட்டவை என்று அவர் கூறுகிறார்.

(மறு பக்கம் பார்க்க)

(10ஆம் பக்கத் தொடர்ச்சி)

அறகலய அதன் முதல் நாளில் இருந்தே சிங்களவர்களின் குறிப்பாக சிங்கள பௌத்தர்களின் நலன்களுக்கு விரோதமானதாக அமைந்திருந்ததாகவும் வெளிநாட்டு சக்திகளின் ஆதரவைக் கொண்டிருந்ததாகவும் அவர் குறிப்பிடுகிறார்.

மக்களின் அவலங்களுக்கு காரணமாக இருந்த பொருளாதார நெருக்கடிக்கு மூன்று ராஜபக்ச சகோதரர்களும் மத்திய வங்கியின் இரு ஆளுநர்கள் உட்பட அவர்களின் அரசாங்கத்தில் முக்கிய பதவிகளை வகித்த சில உயரதிகாரிகளுமே பொறுப்பு என்று 2023 நவம்பர் 14 உயர்நீதிமன்றம் தீர்ப்புக் கூறியபோதி லும், அந்த நெருக்கடிக்கு தனது அரசாங் கம் பொறுப்பு என்பதை கோட்டாபய நூலில் ஒத்துக் கொள்ளவேயில்லை. செய்ததற்கு இரங்கி பச்சாதாபம் கொள்கிற பக்குவத்தை அவர் வெளிக் காட்டவில்லை. பாதிக்கப்பட்ட ஒரு ஆளாகத் தன்னைக் காட்சிப்படுத்தும் அவரின் முயற்சியாகவே நூல் அமைந்திருக்கி றது எனலாம்.

அறகலய பற்றி அவர் எழுதிய பகுதிகள் வருமாறு:

“2022 ஏப்ரில் 9 கொழும்பு காலிமுகத்திடலில் அறகலய தொடங்கி போராட்டக்காரர்கள் கூடாரங்களை அமைத்து “கோட்டா கோ கம” என்று பிரகடனம் செய்ததை அடுத்து ஊடகங்களில் சில விமர்சகர்கள் பொதுவான குறிக்கோள் ஒன்றுக்காக சகல இனக்குழுக்களையும் மதங்களையும் அறகலய ஒன்றிணைத்திருக்கிறது என்று கூறினார்கள். எனது அரசாங்கத்துக்கு எதிராக ஒன்றிணைந்த இளைஞர்கள், யுவதிகள் இனவாதத்தைத் தோற்கடித்துவிட்டதாகவும் அவர்கள் குறிப்பிட்டார்கள்.


“ஆனால், காலிமுகத்திடல் அறகலயவில் கூடிநின்றவர்கள் யார் என்பதை எவரும் உண்மையில் ஆராய்ந்து பார்த்தால் அவர்கள் எந்த வகையிலும் எனக்கு எதிரான பிரிவுகளைச் சேர்ந்தவர்களே என்பதை தெளிவாகப் புரிந்துகொள்ள முடியும்.

“அறகலயவில் சிறுபான்மைச் சமூகங்களின் பிரதிநிதித்துவத்தை பெருமளவில் காணக்கூடியதாக இருந்தது. ஏனென்றால் அங்கு வருவதற்கு சிறுபான்மைச் சமூகங்களைத் தூண்டிய காரணிகள் இருந்தன. விடுதலை புலிகளுக்கு எதிரான போரில் நாம் வெற்றிபெற்ற நாளில் இருந்து நான் தமிழர்களுக்கு எதிரானவனாகவே கருதப்பட்டேன்.

“ஒற்றையாட்சி அரசுக்கு (Unitary state) பதிலாக ஐக்கிய இலங்கைக்கு (United SriLanka) கோரிக்கை விடுக்கும் புலம்பெயர் தமிழர்களின் நிகழ்ச்சி நிரலை அறகலயவில் தெளிவாகக் காண முடிந்தது. இது சமஷ்டி அரசொன்றை வேண்டிநிற்பவர்களின் நீண்டகாலக் கோரிக்கையாக இருந்துவருகிறது. அதனால் காலிமுகத்திடல் போராட்டங்களின்போது ஜனாதிபதி செயலகத்தின் சுவர்களில் அந்த சுலோகங்கள் காட்சிப்படுத்தப்பட்டன.

“2012 ஆம் ஆண்டில் பொதுபல சேனாவின் தோற்றம் மற்றும் அந்த அமைப்பில் எனக்கு ஈடுபாடு இருந்ததாக கிளம்பிய சந்தேம் காரணமாக நான் முஸ்லிம்களுக்கு எதிரானவனாகவும் நோக்கப்பட்டேன். கொவிட் - 19 பெருந்தொற்றின் விளைவாக சடலங்களை எரிப்பது தொடர்பில் பிரச்சினை கிளம்பியபோது நான் முஸ்லிம்களுக்கு எதிரானவன் என்று ஏற்கெனவே இருந்த எண்ணம் மேலும் வலுவடைந்தது.

“தமிழர்களினதும் முஸ்லிம்களினதும் வாக்குகள் என்னை எதிர்த்துப் போட்டியிட்ட வேட்பாளருக்கே பெருமளவில் கிடைத்த போதிலும், 2019 ஜனாதிபதி தேர்தலில் நான் அதிகாரத்துக்கு தெரிவு செய்யப்பட்டேன். பதவியேற்பதற்கு சிங்கள பௌத்தர்களுக்கு முக்கியமான புனித தலமான ருவான்வெலிசேய வளாகத்தையே தெரிவுசெய்தேன். பதவியேற்ற பிறகு நான் நிகழ்த்திய உரையில் சிங்கள பௌத்தர்களின் வாக்குகளினாலேயே தெரிவுசெய்யப்பட்டதாக கூறியது பல்வேறு வியாக்கியானங்களுக்கு வழிவகுத்தது.




“தமிழ், முஸ்லிம் சமூகங்கள் பல்வேறு காரணங்களுக்காக என்னை எதிர்ப்பதற்கு அறகலயவுக்கு வந்தன. இதை சகல இடங்களிலும் குறிப்பாக கொழும்பில் இடம்பெற்ற போராட்டங்களில் தெளிவாகக் காணக்கூடியதாக இருந்தது. நான் தொடர்ந்தும் அதிகாரத்தில் இருந்தால் சிறுபான்மைச் சமூகங்களுக்கு பாதகமான முறையில் சிங்கள பௌத்தர்கள் பலமடைந்துவிடுவார்கள் என்ற பயமும் அவர்களைத் தூண்டியிருக்கக்கூடும்.

“வெளிநாட்டு நிதியுதவியைப் பெறுகின்ற அரசாங்க சார்பற்ற தன்னார்வ நிறுவனங்களின் தாராள போக்குடைய அரசியல் செயற்பாட்டாளர்கள், சமூக ஊடகச் செயற்பாட்டாளர்கள் மற்றும் ஐக்கிய மக்கள் சக்தி, ஜனதா விமுக்தி பெரமுன, ஐக்கிய தேசிய கட்சி மற்றும் முன்னரங்க சோசலிஸ்ட் கட்சி என்று பல்வேறு எதிர்க்கட்சிகளும் அறகலயவில் பங்கேற்றன. காலிமுகத்திடலில் ஐக்கிய தேசிய கட்சிக்கு 17 கூடாரங்கள் இருந்ததாக அந்த கட்சியின் முக்கிய உறுப்பினர் ஒருவரின் தகவல் மூலம் அறியமுடிந்தது. கிரிக்கெட் வீரர்கள், அவர்களின் மனைவிமார், நடிகர் நடிகைகள் என்று பல்வேறு தரப்பினரும் அங்கு நின்றார்கள்.

“நூலின் முன்னுரையில் நான் சுட்டிக் காட்டியதைப் போன்று ஒரு புறத்தில் சிங்கள பௌத்தர்களின் நலன்களுக்கும் மறுபுறத்தில் சிங்களவர்களும் பௌத்தர்களும் அல்லாத சகல பிரிவினரின் நலன்களுக்கும் இடையிலான ஒரு போட்டியின் விளைவாகவே நான் அதிகாரத்துக்கு தெரிவு செய்யப்பட்டேன். கத்தோலிக்கத் திருச்சபையுடன் நான் அதுவரையில் உன்னதமான உறவைப் பேணிவந்தபோதிலும், 2021 ஆம் ஆண்டின் இறுதிப்பகுதியில் இருந்து அவர்களும் எனக்கு எதிராகத் திரும்பினர்.

“எரிபொருள், சமையல் எரிவாயு வரிசைகளையும் மருந்து வகைகள் மற்றும் அத்தியாவசிய பாவனைப் பொருட்களுக்கு நிலவிய தட்டுப்பாடுகளையும் இல்லாமற்செய்து மக்களின் இடர்பாடுகளை தணிப்பதுதான் அறகலயவின் குறிக்கோள் என்று ஒரு எண்ணம் எவருக்காவது இருந்திருந்தால் அது வெறும் மருட்சியே.

“அறகலயவில் பங்கேற்றவர்களுக்கு பல்வேறு வித்தியாசமான குறிக்கோள்களும் முன்னுரிமைகளும் இருந்தன. அறகலய என்பது அதன் முதல் நாளில் இருந்தே சிங்களவர்களின் குறிப்பாக சிங்கள பௌத்தர்களின் நலன்களுக்கு பாதகமானதாகவே அமைந்திருந்தது. பெருமளவுக்கு அதே குறிக்கோள்களைக் கொண்ட வெளிநாட்டுச் சக்திகள் அறகலயவுக்கு ஆதரவளித்தன.”

**பெரும்பான்மை இனவாத அணிதிரட்டல்**

கோட்டாபயவின இந்த விளக்கம் மீண்டும் பெரும்பான்மையினவாத அணிதிரட்டலின் மூலம் மாத்திரமே தங்களால் அரசியலில் செல்வாக்கான நிலைக்கு வரமுடியும் என்ற ராஜபக்சாக்களின் உறுதியான தீர்மானத்தின் ஒரு தெளிவான வெளிப்பாடாகும்

தங்களுக்கு எதிரான அரசியல் செயற்பாடுகளை அவர்கள் மிகவும் சுலபமாகவே வெளிநாட்டுச் சதி என்று கூறிவிடுவார்கள்.

அறகலய போராட்டம் தொடங்கிய நோக்கம் தெளிவானது. ஆனால், அமைதிவழியில் முன்னெடுக்கப்பட்டு முழு உலகத்தினதும் கவனத்தை இலங்கை நோக்கி திருப்பிய அந்த போராட்டத்தில் அரசியல் புரட்சியொன்றுக்கான பல பரிமாணங்கள் காணப்பட்டன

பரந்தளவிலான வெகுஜனப் போராட்டமாக அறகலய மாறியதும் பல்வேறு அரசியல் சக்திகள் அதற்குள் ஊடுருவி வன்முறை வழியில் திசைதிருப்பியதே அதற்கு எதிரான அடக்குமுறை நடவடிக்கைகளை அரசியல் அதிகார வர்க்கம் நியாயப்படுத்துவதற்கு வசதியான சூழ்நிலையை உருவாக்கிக்கொடுத்தது.

அத்துடன் முறையான அரசியல் கோட்பாட்டின் வழிகாட்டலும் தலைமைத்துவமும் இல்லாத மக்கள் போராட்டங்களுக்கு நேரக்கூடிய கதிக்கு ஒரு அண்மைக்காலப் படிப்பினையாகவும் அறகலய அமைந்தது.

ஆனால், சிங்கள மக்கள் தங்களுக்கு எதிராக இவ்வளவு விரைவாக கிளர்ந்தெழுவார்கள் என்று கனவிலும் நினைத்துப் பார்த்திருக்காத ராஜபக்சாக்களி

**ஊழல் முறைகேடுகளையும் அதிகார துஷ்பிரயோகத்தையும் தவறான ஆட்சியையும் மூடிமறைப்பதற்கு இனிமேலும் பெரும்பான்மை இனவாத அணிதிரட்டலுக்கு இடமளித்தால் இலங்கைக்கு எதிர்காலமே இல்லை.**

னால் அதை தாங்கிக் கொள்ளமுடியவில்லை. விடுதலை புலிகளுக்கு எதிரான போரை முடிவுக்கு கொண்டு வந்ததற்காக சிங்கள சமுதாயம் என்றென்றைக்கும் தங்களுக்கு விசுவாசமாக இருக்க வேண்டும் என்றும் இலங்கையின் ஆட்சியதிகாரம் தங்களது ஏகபோக உரித்து என்றும் ஒரு எண்ணத்தை அவர்கள் வளர்த்துக்கொண்டிருக்கிறார்கள். தங்களது செயற்பாடுகளை விமர்சன மின்றி சிங்களவர்கள் ஆதரிக்க வேண்டும் என்று ராஜபக்சாக்கள் எதிர்பார்த் தார்கள்.

அதில் தங்களுக்கு கிடைத்த தோல்வியை நிவர்த்திசெய்து மீண்டும் அதிகாரத்துக்கு வருவதற்கு ராஜபக்சாக்களுக்கு வெளிநாட்டுச்சதி என்ற பிரசாரத்தையும் சிறுபான்மைச் சமூகங்களுக்கு எதிரான அரசியலையும் தவிர வேறு மார்க்கம் இல்லை. மக்கள் கிளர்ச்சியை சிங்கள பௌத்தர்களின் நலன்களுக்கு எதிரானது என்ற கோட்டாபயவின் கருத்து அந்த சமூகத்தின் விவேகத்தை அவமதிப்பதாகும்.

ஊழல் முறைகேடுகளையும் அதிகார துஷ்பிரயோகம் மற்றும் தவறான ஆட்சியையும் மூடிமறைப்பதற்கு இனிமேலும் பெரும்பான்மை இனவாத அணிதிரட்டலுக்கு இடமளித்தால் இலங்கைக்கு எதிர்காலமேயில்லை.

ராஜபக்சாக்கள் அந்த அணிதிரட்டலை ஏற்கெனவே ஆரம்பித்து விட்டார்கள். சிறிங்கா பொதுஜன பெரமுனவின் செல்வாக்கை மீளக்கட்டியழுப்பும் முயற்சிகளை முன்னெடுக்கும் ராஜபக்ச குடும்பத்தின் அரசியல்வாரிசு நாமல் ராஜபக்ச கிராமங் கிராமமாக விகாரைகளுக்கு சென்று பிக்குமாரைச் சந்தித்து வருகிறார். சிங்கள பௌத்தர்களிடம் ராஜபக்சாக்களின் இந்த இனவாத அணிதிரட்டல் முயற்சி மீண்டும் எடுபடுமா என்பதை அடுத்த தேர்தல் ஒன்றின் மூலமாக மாத்திரமே தெரிந்துகொள்ளக்கூடியதாக இருக்கும்.

தனது வீழ்ச்சிக்கு வெளிநாட்டுச் சதியே காரணம் என்று கூறும் கோட்டாபய அவர் அதிகாரத்துக்கு வருவதற்காக சிறுபான்மைச் சமூகங்களுக்கு எதிரான சுலோகங்களை முன்வைத்து மக்கள் மத்தியில் குரோதங்களை வளர்த்து சிங்கள மக்களின் வாக்குகளை அமோகமாகப் பெறுவதற்கு கடந்த ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னதாக தீவிரமாக முன்னெடுக்கப்பட்ட நச்சுத்தனமான பிரசாரங்களும் கூட ஒரு அரசியல் சதிதான் என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும் என்று அரசியல் அவதானியொருவர் தெரிவித்த கருத்து மிகவும் கவனிக்கத்தக்கது.

இன்றைய புவிசார் அரசியல் நிலைவரங்களை நோக்கும்போது நாடுகளின் உள்விவகாரங்களில் வல்லாதிக்க நாடுகள் அவற்றின் மூலோபாய நலன்களுக்காக தலையிடும் போக்கு அதிகரித்து வருகிறது. ஆனால், அவ்வாறான தலையீடுகளுக்கு வசதியான சூழ்நிலைகளை ஆட்சியாளர்களே தவிர மக்கள் ஏற்படுத்துவதில்லை.

இன்றைய இலங்கை நிலைவரத்தை நோக்கும்போது வரவிருக்கும் தேசிய தேர்தல்களில் வெற்றிபெறுபவர்கள் யார் என்பதை நாட்டுமக்கள் மாத்திரம் தீர்மானிக்கக்கூடியதாக இருக்கும் என்று சொல்லமுடியாமல் இருக்கிறது. வல்லாதிக்க நாடுகள் அவற்றின் நலன்களை பாதுகாத்துக் கொள்வதற்காக வெவ்வேறு அரசியல் கட்சிகளை தங்கள் செல்லாக்கிற்கு உட்படுத்தும் வியூகங்களை வகுக்கின்றன என்பது ஒன்றும் இரகசியமானது அல்ல.

கோட்டாபயவின் நூல் குறித்து பல்வேறு விமர்சனங்கள் தொடர்சசியாக வரும் என்று எதிர்பார்க்கலாம்.

இது இவ்வாறிருக்க, ரணில் விக்கிரமசிங்க ஐக்கிய தேசிய கட்சியின் தன்னந்தனி உறுப்பினராக பாராளுமன் றத்தில் இருந்துகொண்டு எவ்வாறு ஜனாதிபதியாக வந்தார் என்ற கதையை நூலாக விரைவில் வெளியிடவிருப்பதாக கட்சியின் தவிசாளர் பாராளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்தன அறிவித்திருக்கிறார். அவர் ஏற்கெனவே ஜனாதிபதியைப் பற்றி பத்திரிகைகளில் வெளியான கேலிச்சித்திரங்களை தொகுத்து ஒரு நூலாக கடந்தவாரம் வெளியிட்டிருந்தார்.

அதிகாரத்தை விட்டு ஓடிப்போனவர் தனது கதையை வெளியிட்ட கையோடு அவரின் இடத்துக்கு அதிகாரத்துக்கு வந்தவரின் கதையும் வரவிருக்கிறது. வாசிப்போம்.



# உலகின் மிகப்பழமையான மரங்கள் ஆளுயரமே வளர்ந்தனவா?

தென்மேற்கு இங்கிலாந்தின் கடற்கரையில் உள்ள செங்குத்தான பாறைகளில் உலகின் மிகப் பழமையான காட்டின் புதைபடிவத்தை விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்.

சோமர்செட் பகுதியின் மைன்ஹெட் அருகே, புட்லின் விடுமுறை முகாமுக்கு அருகில் செங்குத்தான பாறைகளில் இந்தப் புதைபடிமம் கண்டெடுக்கப்பட்டது.

கேம்பிரிட்ஜ் மற்றும் கார்டிஃப் பல்கலைக்கழகங்களின் ஆராய்ச்சியாளர்கள், இவை பிரிட்டனில் இதுவரை கண்டுபிடிக்கப்பட்ட பழமையான மரங்களின் புதைபடிவங்களைவிட பழமையானவை என்றும் பூமியில் அறியப்பட்ட மிகப் பழமையான காட்டின் புதைபடிவம் என்றும் கூறுகின்றனர்.

காலமோபைட்டன் எனப்படும் இந்த மரங்கள் பனை மரங்களை ஒத்திருக்கின்றன.

தற்கால மரங்களின் "முன்மாதிரி" என இம்மரங்களை விவரிக்கலாம். இவற்றில் மிகப்பெரிய மரங்கள், இரண்டு முதல் நான்கு மீட்டர் (6 அடி – 12 அடி) வரை உயரம் கொண்டவை.

ஆராய்ச்சியாளர்கள் தாவரங்களின் புதைபடிவங்களையும் அவற்றின் சிதைவுகளையும் மரக்கட்டைகளின் புதைபடிவங்கள் மற்றும் வேர்களின் தடயங்களையும் அடையாளம் கண்டுள்ளனர்.

10 கோடி ஆண்டுகளுக்கு முன்பு நிலப்பரப்புகளை வடிவமைக்கவும் ஆற்றங்கரைகள் மற்றும் கடற்கரைகளை உறுதிப்படுத்தவும் ஆரம்பகால மரங்கள் எவ்வாறு உதவியது என்பதை அவை காட்டுகின்றன.

"நான் முதன்முதலில் இம்மரங்களின் தண்டுகளின் படங்களைப் பார்த்தபோது, ஏற்கனவே 30 ஆண்டுகளாக உலகளவில் இந்த வகை மரங்களைப் பற்றி ஆய்வு செய்திருந்ததால், அவை என்னவென்று எனக்கு உடனடியாகத் தெரிந்தது," என்று கார்டிஃப் புவி மற்றும் சுற்றுச்சூழல் அறிவியல் பள்ளியை சேர்ந்தவரும் இந்த ஆய்வின் இணை ஆசிரியருமான டாக்டர் கிறிஸ்டோஃபர் பெர்ரி கூறினார்.

"வீட்டுக்கு மிக அருகில் அவற்றைப் பார்ப்பது ஆச்சரியமாக இருந்தது. முதன்முறையாக, வளர்ந்த நிலைகளில் இந்த மரங்களைப் பார்ப்பது, அவை குறித்த ஆழமான நுண்ணறிவை வெளிப்படுத்துவதாக உள்ளது," என்றார் கிறிஸ்டோஃபர் பெர்ரி.

இந்த ஆய்வில் ஈடுபடாத, நேச்சுரல் ஹிஸ்ட்ரி அருங்காட்சியகத்தின் தாவர புதைபடிவங்கள் நிபுணர் டாக்டர் பால் கென்ரிக், தாவரங்கள் எவ்வாறு ஒன்றாக வளர்ந்தன என்பதற்கான இந்த தடயங்கள் ஆழமான முக்கியத்துவம் வாய்ந்தவை என்று கூறினார்.

நியூயார்க்கில் முன்பு கண்டுபிடிக்கப்பட்ட பழமையான காட்டின் புதைபடிவத்தை விட இது 40 லட்சம் ஆண்டுகள் பழமையானது என்று ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர்.

இது டெவோன் மற்றும் சோமர்செட் கடற்கரைகளில் இது கண்டுபிடிக்கப்பட்டது. இது, 41.9 முதல் 35.8 கோடி ஆண்டுகளுக்கு முந்தைய டெவோனியன் காலகட்டத்திற்கு முந்தையது. இந்தக் காலகட்டம், நிலத்தில் உயிர்களின் பெரும் விரிவாக் கத்திற்கான காலமாக கருதப்படுகிறது. புவியியலாளர்கள் அக்கடற்கரையில் கண்டறிந்த கடல் பாறைகள் காரணமாக இக்காலகட்டத்திற்கு டெவோனின் என பெயரிடப்பட்டது. ஏனெ னில், அக்காலகட்டத்தின் அடையாளமாக கடல் பாறைகள் இருந்தன.

இந்தப் புதைபடிமங்கள் கண்டுபிடிக்கப்பட்ட இடம், அக்காலகட்டத்தில் இங்கிலாந்தோடு இணைந்தது அல்ல. மாறாக, ஜெர்மனி மற்றும் பெல்ஜியத்தின் சில பகுதிகளுடன் இணைக்கப்பட்ட ஒரு பாதி வறண்ட சமவெளி என்று ஆராய்ச்சியாளர்கள் கூறுகிறார்கள், அங்கும் இத்தகைய மரங்களின் புபுதைபடிவங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.



"இது மிகவும் வித்தியாசமான காடு – இன்று நீங்கள் பார்க்கும் எந்த காடுகளையும் போல இது இல்லை," என்று கேம்பிரிட்ஜின் புவி அறிவியல் துறையைச் சேர்ந்த பேராசிரியர் நீல் டேவிஸ் கூறினார்.

"அவற்றுக்கு எந்த அடிமரங்களும் இல்லை. அப்போது புற்கள் கூட தோன்றியிருக்கவில்லை. ஆனால், இந்த அடர்த்தியான மரங்களின் கீழே ஏராளமான கிளைகள் கிடந்தன, இவை நிலப்பரப்பில் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தின," என்றார் அவர்.

நேச்சுரல் ஹிஸ்டரி அருங்காட்சியகத்தைச் சேர்ந்த டாக்டர் கென்ரிக் கூறுகையில், இன்று நாம் அறிந்திருக்கும் மரங்களில் இருந்து இம்மரங்கள் மிகவும் வேறுபட்டவை என்றார். இன்று, இம்மரங்களின் மிக நெருங்கிய உயிரியல் உறவினர்கள் டிக்சோனியா அண்டார்டிகா எனப்படும், ஆஸ்திரேலியாவை பூர்வீகமாகக் கொண்ட ஒரு வகை மர ஃபெர்ன் (புன்னம்), இது பிரிட்டனில் பிரபலமான அலங்காரச் செடியாக உள்ளது. இந்த மர வகை, பழமையான மரங்களுடன் மிகவும் ஒத்த நவீன இணையாக கருதப்படுகிறது.

---



# வியுக்தியார் பதில்கள்

**உங்கள் கேள்விகளை அனுப்பவேண்டிய முகவரி**

**வியுக்தியார் பதில்கள்**
**ஈழநாடு, 707 ஆஸ்பத்திரி வீதி,**
**யாழ்ப்பாணம்.**
viyukthiyar@gmail.com

**எம். அகிலேஸ்வரன்**
**சித்தன்கேணி.**

**கேள்வி:** *ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பொது ஜன பெரமுனவின் தலைவர்களான மஹிந்த ராஜபக்ச மற்றும் பசில் ராஜபக்ச ஆகியோருக்கு இடையிலான சந்திப்பு தோல்வியில் முடிவடைந்துள்ளதாக ஆளுங் கட்சியின் வட்டாரங்களில் அறிய முடிகிறது. இந்தச் சந்திப்பில் அடுத்த தேர்தலுக்கான கூட்டணித் தொடர்பில் கலந்துரையாடல்கள் நடைபெற்றபோதிலும், ராஜபக்சக்களின் கோரிக்கையை ரணில் நிராகரித்து விட்டதாக செய்திகள் வருகின்றனவே. அவர்களின் தயவில் இருக்கும் இவரால் எப்படி அவர்களின் கோரிக்கையை நிராகரிக்க முடியும்?*

**வியுக்தியார்:** *நீங்கள் கேட்பதும் நியாயமான கேள்விதான். ஆனால், ராஜபக்சக்களின் கோரிக்கையை ரணில் ஏற்றுக்கொள்ளவில்லை என்பதற்காக அவர்கள் ஆளும் தரப்பிலிருந்து வெளியேறப்போவதில்லை என்பது நன்றாகவே ரணிலுக்கும் தெரியும். தன்னை விட்டால் வேறு எவராலும் ராஜபக்சக்களை காப்பாற்ற முடியாது என்பது அவருக்கு தெரியாதா என்ன? தான் என்ன செய்தாலும் அவர்கள் தனக்கு எதிராக அடுத்த தேர்தல்வரை எதுவும் செய்யமாட்டார்கள் என்பதை தெரிந்து வைத்திருப்பதால்தான் அவர், அவர்களின் கோரிக்கையை உதாசீனம் செய்கிறார் என்று நினைக்கின்றேன்.*

---

**சபா. சிவநாதன்,**
**குரும்பசிட்டி, தெல்லிப்பளை.**

**கேள்வி:** *வெடுக்குநாறி மலையில் கோயிலுக்குள் துப்பாக்கி, பொல்லுகள் தாங்கியவாறு சப்பாத்து அணிந்து உள்நுழைந்த பொலிசார், வழிபாட்டில் ஈடுபட்டுக் கொண்டிருந்தவர்களை பலாத்காரமாக- குண்டுக் கட்டாக தூக்கி வெளியே கொண்டு சென்றனர் என்றும், இதன்போது பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் தாக்கப்பட்டதாகவும் கைதுசெய்யப்பட்டு சில நிமிடங்களில் விடுதலை செய்யப்பட்டதாகவும் செய்திகள் வெளிவந்தனவே. ஒரு எம்.பி.யை இப்படி நடத்துவது குறித்த என்ன நினைக்கிறீர்கள்?*

**வியுக்தியார்:** *இதற்கு முன்னரும் ஒருதடவை கஜேந்திரன் இவ்வாறு குண்டுக்கட்டாக தூக்கிச் செல்லப்பட்ட செய்தியை படித்ததாக ஞாபகம். ஒருவரை கைதுசெய்வதற்காக தூக்கிச் செல்வது என்றால், அவர் தன்னை கைதுசெய்வதை ஏற்றுக்கொள்ளாமல்விட்டால் மட்டுமே தூக்கிச் செல்லவேண்டிய நிலை வரும். ஒரு மக்கள் பிரதிநிதியை பொலிசார் கைது செய்யவேண்டும் என்றால் அதற்கு சில ஒழுங்குகள் இருக்கின்றன. அந்த ஒழுங்குகளை பொலிசார் செய்யாவிட்டாலும், அவர்கள் இவரை கைதுசெய்ய முன்வந்தால், அவர் தன்னைக் கைதுசெய்வதற்கு எதிர்பு தெரிவிக்காமல் அவர்கள் கைதுசெய்வதை அனுமதிப்பதுதான், மக்கள் பிரதிநிதியான அவரின் கௌரவத்திற்கு சிறந்தது. அதைவிடுத்து தூக்கிச் செல்கின்ற அளவிற்கு நிலமையை வளரவிடுவது, அவரது கௌரவத்திற்கு நல்லதல்ல. அவர் கைது செய்யப்படுவதன்மூலம் பொலிசாரின் தவறான நடவடிக்கையை சர்வதேசத்திற்கும் எடுத்துச் செல்வது பயன் தரும் அல்லவா?*

**எம். கௌதம், அமிர்தகழி, மட்டக்களப்பு**

**கேள்வி:** *மத்திய வங்கியின் ஊழியர்களுக்கு அண்மையில் வழங்கப்பட்ட ஊதிய உயர்வு பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியிருந்தது. இந்த நிலையில், இந்த சர்ச்சையைப் பயன்படுத்தி மத்திய வங்கியின் சுதந்திரத்தை பறிக்க சதிமுயற்சி இடம்பெறுவதாக அதன் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க குற்றஞ்சாட்டியுள்ளாரே?.*

**வியுக்தியார்:** *மத்திய வங்கிக்கு சுதந்திரம் இருக்கிறது என்பதற்காக அந்தச் சுதந்திரத்தை அவர்கள் தவறாக பயன்படுத்துவதையும் ஏற்றுக்கொள்ள முடியாது தானே? மத்தியவங்கி என்பதும் நமது நாட்டுக்குள்தான் இருக்கின்றது. அதைவிட நாட்டின் பொருளாதார நெருக்கடி பற்றி மற்றைய எவரையும்விட அதிகம் அறிந்துவைத்திருப்பதும் மத்திய வங்கிதான். அப்படி இருக்கும்போது தாங்கள் ஏதோ நியூயோர்க்கில் இருப்பதுபோல தமது சம்பளத்தை அவர்களே முடிவெடுத்து அதிகரித்திருப்பதையும் தமது சுதந்திரத்தை காட்டி நியாயப்படுத்துவதையும் ஏற்றுக்கொள்ள முடியாது என்றே கருதுகின்றேன். தமது அலுவலக உதவியாளருக்கு (நாம் பேச்சுவழக்கில் 'பியோன்' என்போமே) ஒரு லட்சத்து எண்பத்தி எட்டு ஆயிரம் ரூபாவை சம்பளமாக கொடுக்கிறார்களே. இதை சரி என்று அவர் வாதிடுவது ஏற்புடையதல்லவே.*

---

**கந்தையா முகுந்தன்**
**சுவாமியார் வீதி, கொழும்புத்துறை.**

**கேள்வி:** *சாந்தனை இலங்கையிலுள்ள அவரது குடும்பத்துடன் இணைக்க பல்வேறு வழிகளில் முயன்றும் அம் முயற்சி பலனளிக்கவில்லை என தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் செ. கஜேந்திரன் தெரிவித்திருக்கிறாரே. அவர் எந்த வழியில் முயன்றார் என்று உங்களுக்கு தெரியுமா?.*

*வியுக்தியார்: பத்திரிகைகளில் தலைப்புச் செய்திகளை மட்டும்தான் படிக்கிறீர்கள் போலும். அவரே பாராளுமன்றத்தில் பேசும்போது, தாங்கள் எந்த எந்த வழிகளில் முயற்சி செய்தனர் என்றும் சொல்லியிருந்தாரே. கடந்த ஜனவரி மாதம் 03ஆம் திகதி கொழும்பிலுள்ள இந்திய துணைத்தூதரோடு இடம்பெற்ற சந்திப்பில் கஜேந்திரகுமார் அவரது விடயத்தை வலியுறுத்தியிருந்தாராம். கடந்த ஜனவரி 29 ஆம் திகதி கடிதமொன்றை எழுதியிருந்தாராம். அதேவேளை 30 ஆம் திகதி இலங்கை வெளிவிவகார அமைச்சருக்கும் குறித்த விடயம் தொடர்பில் வட்சப் மூலம் கடிதமொன்றை அனுப்பியிருந்தார்களாம். ஆக, தாங்கள் கடிதம் எழுதினால் அதனை எல்லோரும் உடனே நடைமுறைப்படுத்துவார்கள் என்று அவர்கள் நினைக்கின்றார்கள் போலும். தனது தம்பியை இலங்கை ராணுவம் கைதுசெய்து வைத்திருந்தபோது, அப்போதைய பாதுகாப்பு செயலாளர் கோட்டாபயவுடன் பேசி விடுதலை செய்வித்ததுபோல, சாந்தனின் விடயத்திலும் சம்பந்தப்பட்டவர்களை சந்தித்து பேசியிருந்தால், சாந்தன் முன்னதாக தாயகம் திரும்பியிருப்பாரே.*

---

**இரா. ஜெயருபன், பூந்தோட்டம், வவுனியா.**

**கேள்வி:** *"தமிழ் மக்களின் பிரச்னைக்கான தீர்வினை வழங்கும் அரசாங்கத்தின் செயற்பாட்டுக்கு ஆலோசனைகள் மற்றும் ஒத்துழைப்புக்களை வழங்க தமிழ்மக்கள் பிரதிநிதிகளும் முன்வரவேண்டும்" என வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளாரே.*

**வியுக்தியார்:** *ஓமோம், பொலிஸ் அதிகாரம், காணி அதிகாரம் இல்லாமல் பதின்மூன்றாவது அரசியலமைப்பு திருத்தத்தை அமுல்படுத்தும் அரசின் முயற்சிகளுக்கு தமிழ் மக்களின் பிரதிநிதிகள் ஒத்துழைப்பு வழங்கவேண்டும் என்கிறார் அவர். கோவிட் காலத்தில் மரணித்த முஸ்லிம்களின் ஜனாசாக்களை தகனம் செய்த போது அதனைப் பார்த்துக்கொண்டு பேசாமல் இருந்தது போல தமிழ் மக்கள் பிரதிநிதிகளையும் இருக்கச் சொல்கிறார் போலும்.*

---

**எஸ். செந்துஜன், ராசவீதி, கோப்பாய்.**

**கேள்வி:** *பஸில் ராஜபக்ஷ அல்ல எந்த கொம்பன் வந்தாலும் இலங்கை அரசியலில் ராஜபக்ஷக்களால் இனி எதையும் செய்ய முடியாது - என்று தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளாரே. அதனை நீங்களும் நம்புகின்றீர்களா?*

*வியுக்தியார்: ராஜபக்சக்களால் மீண்டும் அதிகாரத்திற்கு வரமுடியாது என்றால் அவர்களைக் கண்டு ஏன் இவர் பயப்படுகின்றார் என்பது புரியவில்லை. தமது அரசியல் மூலதனமான இனவாதத்தையே அரசியலில் முலதனமாகக் கொண்டவர்கள்தான் ராஜபக்சக்களும். எங்கே அவர்கள் இனவாத்ததை முன்வைத்து மீண்டு எழுந்துவிடுவார்களோ என்று சற்று பதட்டப்படுவதுதான் தெரிகின்றது.*

ஐங்கரன் விக்கினேஸ்வரா

# மன்னராட்சியை ஒழித்து மக்களாட்சி உருவாகிய நேபாளத்தில் ஆளும் கூட்டணி பிளவினால் புதிய அரசு ?

காத்மாண்டுவில் ஆளும் நேபாள கம்யூனிஸ்ட் கட்சி, நேபாளி காங்கிரஸ் கூட்டணி முறிந்ததை அடுத்து, புதிய அரசு பதவியேற்கும் என தகவல்கள் வெளியாகி உள்ளது.

இமாலயத்தின் உச்சத்தில், இந்தியாவின் அண்டை நாடான நேபாளத்தில் 1996 இல் ஆரம்பிக்கப்பட்ட மக்கள் போராட்டமானது நேபாள மன்னராட்சியை ஒழித்து மக்களாட்சியை உருவாக்கும் நோக்குடன் இடதுசாரி மாவோ யிசவாத போராளிகளால் நடத்தப்பட்ட போராட்ட எழுச்சி முடிவுற்று கட்சி அரசியல் மூலம் தேர்தல் நடாத்தப்படுகிறது.

நேபாளத்தில் கடந்த 2022இல் நடைபெற்ற பொதுத் தேர்தலை அடுத்து, புஷ்ப குமார் தமல் தலைமை யிலான நேபாள கம்யூனிஸ்ட் கட்சி, ஷே பகதூர் துபே தலைமையிலான நேபாளி காங்கிரஸ் இணைந்து கூட்டணி ஆட் சியை அமைத்தன. இந்த கூட்டணி தற்போது முடிவுக்கு வந்துள்ளது.

பிரதமர் புஷ்ப குமார் தமல் தலைமையிலான புதிய அமைச்சரவை யில் சிபிஎன் - யுஎம்எல், ராஷ்ட்ரிய ஸ்வதந்திரா கட்சி, ஜனதா சமாஜ்வாதி கட்சி ஆகியவை இணைய உள்ளன.

நேபாள நாடாளுமன்றத்தின் மேலவைத் தலைவர் பதவிக்கு, நேபாளத்தின் இரு பெரும் கட்சிகளான நேபாள கம்யூனிஸ்ட் கட்சி (மாவோயிஸ்ட் மையம்) மற்றும் நேபாளி காங்கிரஸ் ஆகியவை இடையே போட்டி ஏற்பட்டி ருப்பதே ஆட்சி மாற்றத்துக்குக் காரணம் என கூறப்படுகிறது.





கடந்த பிப்ரவரி 28ஆம் தேதி கூடிய, மாவோயிஸ்ட் மையத்தின் மத்தியக் குழுக் கூட்டத்தில், மேலவைத் தலைவர் பதவிக்கு கட்சியின் சார்பில் வேட்பாளரை நிறுத்துவது என முடிவெடுக்கப்பட்டது. இதற்கு நேபாள காங்கிரஸ் கட்சி கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

மேலவைத் தலைவர் பதவிக்கான தேர்தல் நடைபெறும்போது, தங்கள் கட்சி நேபாள காங்கிரஸ் கட்சிக்கு ஆதரவு அளிக்கும் என்று புஷ்ப குமார் தமல் ஏற்கனவே வாக்குறுதி அளித்ததா கவும், தற்போது அந்த வாக்குறுதி மீறப்படுவதாகவும் நேபாள காங்கிரஸ் குற்றம் சாட்டி உள்ளது.

**கூட்டணி பிளவினால் புதிய அரசு?**

இதற்கு பதில் அளித்துள்ள மாவோயிஸ்ட் மையத்தின் செய்தித் தொடர்பாளர் அக்னி பிரசாத் சப்கோடா, நாடாளுமன்ற மேலவைத் தலைவர் பதவிக்கு கட்சி போட்டியிட வேண்டும் என மத்தியக் குழு கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டது. அதன் அடிப்படையிலேயே வேட்பாளர் நிறுத்தப்பட இருக்கிறார் என தெரிவித்துள்ளார்.

59 உறுப்பினர்களைக் கொண்ட நேபாள மேலவையில் மாவோயிஸ்ட் மையம் 17, நேபாளி காங்கிரஸ் 16, சிபிஎன்-யுஎம்எல் - 19, சிபிஎன்(யுஎஸ்) - 8, ஜனதா சமாஜ்வாதி கட்சி - 3, ராஷ்ட் ரிய ஜனமோர்ச்சா சமாஜ்வாதி கட்சி - 1 உறுப்பினர்களைக் கொண்டுள்ளனர். மத்திய அமைச்சரவையின் பரிந்துரையின் பேரில் ஒரு உறுப்பினரை நேபாள அதிபர் ராம் சந்திர பாதெல் நியமிப்பார்.

நேபாள நாடாளுமன்ற அவைத் தலைவர் பதவிக்கான தேர்தல் வரும் 12ம் தேதி நடைபெற இருக்கிறது. அதற்கான வேட்புமனு தாக்கல் வரும் 7ஆம் தேதி நடைபெறும்.

**மாவோயிஸ்டுகளின் மக்கள் யுத்தம்**

நேபாளத்தின் கிராமப்புறங்களில் 1996களில் ஆரம்பிக்கப்பட்ட மாவோயிஸ்டுகளின் மக்கள் யுத்தம் குறிப்பிட்ட கட்டத்துக்கு முன்னேறி யிருந்த நிலையில், மன்னராட்சிக்கு எதிராக நகர்புறங்களில் இலட் சக்கணக்கில் மக்கள் திரண்டு போராடினர்.



நேபாள மக்கள் இயக்கம், நேபாளத் தின் ஷா வம்ச மன்னர்களின் முடியாட்சி மற்றும் அரசியல் கட்சிகள் சார்பற்ற தேசியப் பஞ்சாயத்து ஆட்சி அமைப்பை அகற்றி, அரசியல் அமைப்புச் சட்டத்திற் குட்பட்ட பல அரசியல் கட்சிகள் கொண்ட ஜனநாயக ஆட்சியை நிறுவிட வலியுறுத்தி நேபாளி காங்கிரஸ் உள்ளிட்ட அனைத்து இடதுசாரி முன்னனி அரசியல் கட்சிகள் இணைந்து நடத்திய மக்கள் போராட்டமாகும்.

இப்போராட்டங்களை நசுக்குவதற்காக, மன்னரின் கைப்பாவையான, தேசியப் பஞ்சாயத்து ஆட்சியினர், அனைத்து அரசியல் கட்சிகளின் தேசிய மற்றும் மாவட்டத் தலைவர்களை கைது செய்து சிறையில் அடைத்ததுடன், நாட்டில் அனைத்து அரசியல் கட்சிகளையும் தடை செய்தது. மேலும் அனைத்து ஊடகங்களின் செய்திகளும் தணிக்கை செய்த பிறகே வெளியிடப்பட்டது. செய்தித் தொடர்புகள் முழுமையாக துண்டிக்கபப்ட்டது.

ஜனநாயக அமைப்புக்கான போராட்டங்கள் நாடு முழுவதும் கலவரமாக மாறியதால், அனைத்து வணிக, கல்வி, தொழிற்சாலைகள், அலுவலகங்கள் மூடப்பட்டன. இறுதியாக நேபாள மன்னர் பிரேந்திரா போராட்டக்கார்களின் கோரிக்கைகளை ஏற்றார்.

இதன்பின்னர் நேபாளி காங்கிரஸ் கட்சியின் நேபாள பிரதம அமைச்சர் கிருஷ்ண பிரசாத் பட்டாராய் தலைமையில் புதிய அரசியல் அமைப்பு நிர்ணய மன்றம் அமைக்கப்பட்டது. நேபாளத்தில் மன்னரின் இறுதி முடிவுக்குட்பட்ட நேபாள அரசியல் அமைப்புச் சட்டம் இயற்றப்பட்டு, பல அரசியல் கட்சிகள் கொண்ட நாடாளுமன்றம் அமைக்கப்பட்டது.

**மன்னராட்சியை வீழ்த்த போராட்டம்:**

மன்னராட்சியை வீழ்த்த "மக்கள் நேபாள குடியரசு" என்ற இலக்கை கொண்டு இடதுசாரி மாவோயிஸ்டுகள் போராடினார்கள். நேபாளத்தின் சில பகுதிகளை தமது கட்டுப்பாட்டிற்குள் வைத்த அவர்களை 1998 ஜூன் தொடக்கம் ஆகஸ்டு வரை அப்போதைய பிரதமர் செர் பகதூர் தேவ்பாவினால், போராளிகளை கைப்பற்றி அழிக்கும் நோக்குடன் நடைமுறைப் படுத்தப்பட்ட "கிலோ சேரா 2" என்ற மூர்க்கமான நடவடிக்கை காரணமாக போராளிகள் தலைமறைவாகினர். அதன்பின் போராட்டம் மேலும் வலுக்கவும் வழிவகுத்தது.

அதன்பின் 2001 இல் நேபாள மன்னர் மாவோயிச போராளிகளுக்கு எதிராக இராணுவத்தை பயன்படுத்த ஆரம்பித்தார். அது முதல் 12,700க்கும் மேற்பட்டவர்கள் இறந்தும் 100,000 - 150,000 பேர்வரை இடம்பெயர்ந்தும் உள்ளனர்.

நீண்ட கால மன்னராட்சி முடிவுற்று, இடதுசாரி மாவோயிஸ்டுகளின் போராட்டம் நிறுத்தப்பட்டு மக்களாட்சியாக ஜனநாயக தேர்தல் நடாத்தப்படுகிறது. ஆயினும் தற்போது காத்மாண்டுவில் ஆளும் நேபாள கம்யூனிஸ்ட் கட்சி, நேபாளி காங்கிரஸ் கூட்டணி முறிந்ததை அடுத்து, புதிய அரசு பதவியேற்க உள்ளது.





# சுமந்திரன் எம்.பி மீது தாக்குதல் முயற்சி வழக்கு: தலைமறைவான இளைஞனை பிடிக்க உத்தரவு!

கொழும்பு, மார்ச் 10

பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரனைக் கொல்ல முயற்சித்தமை மற்றும் தடை செய்யப்பட்ட விடுதலைப் புலிகளை மீள கட்டியெழுப்ப முயன்றமை உள்ளிட்ட 8 குற்றச்சாட்டுகளின் கீழ் விடுதலைப் புலிகளின் முன்னாள் செயற்பாட்டாளர்கள் நால்வருக்கு எதிரான வழக்கின் பிரதான பிரதிவாதியான எம்.அனோஜனுக்கு கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்று முன் தினம் பிடியாணை பிறப்பித்துள்ளது.

இந்த வழக்கு கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி மஞ்சுள திலகரத்ன முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது, நீதிமன்றத்தை தவிர்த்து வரும் நான்காவது பிரதிவாதியை உடனடியாக கைது செய்து நீதிமன்றில் முன்னிலைப்படுத்துமாறு நீதிபதி உத்தரவிட்டார்.

பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் பயங்கரவாத விசாரணைப் பிரிவில் செய்த முறைப்பாட்டின் பிரகாரம் சட்டமா அதிபர் தாக்கல் செய்துள்ள இந்த வழக்கில், காராளசிங்கம் குலேந்திரன் என்றழைக்கப்படும் சோலை குமரன் என்ற மாஸ்டர், லெவிஸ் மரியநாயகம் அஜந்தன் அல்லது கடலன் அல்லது ஜனா, முருகையா தவேந்திரன் அல்லது வேந்தன், ஞானசேகரலிங்கம் ராஸ்மதன் அல்லது மதன் அல்லது வரதன், மகாத்மாஜி அனோஜன் அல்லது கண்ணன் அல்லது வெற்றி மீது குற்றம் சாட்டப் பட்டுள்ளது.

வழக்கு விசாரணையின் போது, பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தரப்பு சாட்சியமளிக்க தயாராக இருந்த போதிலும் நான்காம் பிரதிவாதி இல்லாத காரணத்தினால் விசாரணை நடைபெறவில்லை.

ஒக்ரோபர் 2016 மற்றும் ஜனவரி 2017 இற்கு இடையில், குற்றம் சாட்டப்பட்டவர்கள் பெயர் குறிப்பிடப்படாத பிறநபர்களுடன், கிளிநொச்சி - திருவையாறு, கனகபுரம் மற்றும் வடமராட்சி கிழக்கு மண்முனை ஆகிய பிரதேசங்களில் கிளேமோர் குண்டுகள், 200 இற்கும் மேற்பட்ட வெடிகுண்டுகள் மற்றும் டெட்டனேட்டர்களை பயன்படுத்தி எம்.ஏ.சுமந்திரன் மீது கொலை முயற்சிக்கு திட்டமிட்டமை மற்றும் தடைசெய்யப்பட்ட பயங்கரவாத அமைப்பை உருவாக்கியமை ஆகிய குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன.

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் தடைசெய்யப்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பை மீள கட்டியெழுப்ப முயன்றமை, அதற்காக ஆதரவளித்தமை, இந்த குற்றத்தில் ஈடுபட மற்றவர்களை தூண்டியமை, இலங்கையில் தெரிவு செய்யப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரை கொல்ல முயன்றமை உள்ளிட்ட 8 குற்றச்சாட்டுக்களின் கீழ் அவர்களுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

பிரதிவாதிகள் 1 மற்றும் 2 சார்பில் சட்டத்தரணி கே.எஸ். ரத்னவேல், 3 மற்றும் 4 ஆம் பிரதிவாதிகள் சார்பாக சட்டத்தரணி ரதீந்திர கருணாரத்ன மற்றும் சுரங்க பண்டாரயன ஆகியோர் ஆஜராகியிருந்தனர். (அ)

## 40 மில்லியன் முட்டை இறக்குமதி

கொழும்பு, மார்ச் 10

பண்டிகைக் காலத்தை முன்னிட்டு 40 மில்லியன் முட்டைகளை இறக்குமதி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அரச வர்த்தக கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது

அரச வர்த்தக்ககூட்டுத்தாபனத்தின் தலைவர் ஆசிரி வலிசுந்தர இதனை தெரிவித்துள்ளார்.

இதனூடாக பண்டிகைக் காலத்தில் தட்டுப்பாடின்றி நுகர்வோருக்கு முட்டை விற்பனை செய்யமுடியும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை இறக்குமதி செய்யப்படும் முட்டைகளை நுகர்வோருக்கு 43 ரூபாவுக்கு விற்பனை செய்வதற்கு எதிர்ப்பார்த்துள்ளதாகவும் அவர் மேலும் கூறினார். (அ)

## கொழும்பு ஹைலெவல் வீதியில் விபத்து தந்தை, மகன் பலி! தாயார் படுகாயம்!!

கொழும்பு, மார்ச் 10

கொழும்பு ஹைலெவல் வீதியில் சீமெந்து ஏற்றிச்சென்ற லொறி ஒன்று மோட்டார் சைக்கிளுடன் மோதியதில் மோட்டார் சைக்கிளில் பயணித்த தந்தையும் மகனும் உயிரிழந்துள்ளதுடன் படுகாயமடைந்த தாய் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

குறித்த விபத்து கொழும்பு ஹைலெவல் வீதியில் கொஸ்கம, மிரிஸ்வத்த பிரதேசத்தில் நேற்று முன் தினம் இரவு இடம்பெற்றுள்ளது.

விபத்தில் உயிரிழந்தவர்கள் கொஸ்கம பிரதேசத்தை சேர்ந்த 44 வயதுடைய தந்தையும் 8 வயதுடைய மகனும் ஆவர்.

கொழும்பிலிருந்து அவிசாவளை நோக்கி பயணித்த சிமெந்து ஏற்றிச்சென்ற லொறி ஒன்றின் சக்கர ரயர் திடீரென வெடித்ததில், லொறி வீதியை விட்டு விலகி எதிர்த்திசையில் பயணித்த மோட்டார் சைக்கிளுடன் மோதியுள்ளது.

விபத்தின்போது மோட்டார் சைக்கிளில் பயணித்த தந்தை மற்றும் மகன் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ள நிலையில் படுகாயமடைந்த தாய் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதனையடுத்து லொறியின் சாரதி கைது செய்யப்பட்டுள்ள நிலையில் கொஸ்கம பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## இலங்கை மத்திய வங்கியின் மொத்த கையிருப்பு அதிகரிப்பு

கொழும்பு, மார்ச் 10

இலங்கை மத்திய வங்கியின் அறிக்கையின்படி கடந்த ஜனவரி மாத இறுதிக்குள் நாட்டின் மொத்த உத்தியோகபூர்வ கையிருப்பு 4,500 மில்லியன் அமெரிக்க டொலர்களாக அதிகரித்துள்ளது.

இந்த உத்தியோகபூர்வ கையிருப்பு சொத்துக்களில் சீனாவின் மக்கள் வங்கியின்1.4 பில்லியன் டொலர் அந்நியச் செலாவணி வசதியும் அடங்கும்.

இதேவேளை, அண்மையில் பாராளுமன்றத்தில் உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, தற்போது பயன்படுத்தக்கூடிய அந்நிய செலாவணி கையிருப்பின் அளவு 3 பில்லியன் டொலர்களை தாண்டியுள்ளதாக தெரிவித்தார்.

“2022 ஏப்ரல் நடுப்பகுதியில் 20 மில்லியன் அமெரிக்க டொலருக்கும் குறைவாக இருந்த பயன்படுத்தக்கூடிய அந்நிய செலாவணி கையிருப்பு அளவு 3 பில்லியன் அமெரிக்க டொலர்களுக்கும் அதிகமாக அதிகரித்துள்ளது” என்று ஜனாதிபதி கூறினார்.

மொத்த உத்தியோகபூர்வ கையிருப்பு அதிகரிப்பதற்கான முக்கிய காரணம் உள்நாட்டு மற்றும் அந்நிய செலாவணி சந்தைகளில் இருந்து அந்நிய செலாவணியை நிகர அடிப்படையில் கணிசமான அளவில் வாங்குவதே என்று மத்திய வங்கி சுட்டிக்காட்டுகிறது.

ஒட்டுமொத்தமாக, இலங்கை மத்திய வங்கி இந்த ஆண்டு ஜனவரியில் நிகர அடிப்படையில் சுமார் 245 மில்லியன் அமெரிக்க டொலர்களை வாங்கியது குறிப்பிடத்தக்கது.

## மாமனாரை கொலை செய்த மருமகன் உயிரை மாய்க்க முயன்று வைத்தியசாலையில் அனுமதி!

கொழும்பு, மார்ச் 10

தனது மாமனாரை கூரிய ஆயுதத்தால் தாக்கிக் கொலை செய்ததாக கூறப்படும் சந்தேக நபர் ஒருவர் உயிரை மாய்த்துக் கொள்ள முயன்றுள்ள நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக சிலாபம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு கொலை செய்யப்பட்டவர் சிலாபம் பிரதேசத்தை சேர்ந்த 81 வயதுடையவராவார்.

குடும்பத் தகராறு எல்லை மீறியதில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபர், தனது மாமனாரை கூரிய ஆயுதத்தால் தாக்கி கொலை செய்துள்ள நிலையில் , பின்னர் தவறான முடிவெடுத்து உயிரை மாய்த்துக் கொள்ள முயன்றுள்ளார்.

இதனையடுத்து இவர் சிலாபம் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# இந்தியாவிற்கு அடுத்தபடியாக இலங்கையில் எடை குறைந்த பெண்கள் வீதம் அதிகரிப்பு

கொழும்பு, மார்ச் 10

உலகளவில் உடல் எடை குறைவினால் பாதிக்கப்பட்டவர்களில் பெண்களின் வீதம் இந்தியாவுக்கு அடுத்தபடியாக இலங்கையில் உள்ளது.

இலங்கையில் ஐந்து முதல் 19 வயது வரையிலான 410,000 பாடசாலையில் கல்வி கற்கும் பெண் பிள்ளைகள் போசனைக் குறைபாடு காரணமாக எடை குறைவாக இருப்பதாக வைத்தியர்களின் மருத்துவ மற்றும் குடியுரிமைகள் நிபுணத்துவ சங்கம் தெரிவித்துள்ளது.

குறித்த விடயம் தொடர்பாக வைத்தியர்களின் மருத்துவ மற்றும் குடியுரிமைகள் நிபுணத்துவ சங்கத்தின் தலைவர் வைத்தியர் சமல் சஞ்சீவ தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்-

பிரித்தானிய லான்செட் மெடிக்கல் ஜேனல் இதழின் ஆய்வின் படி உலகில் போசணை குறைபாடு காரணமாக உடல் எடை குறைந்தவர்கள் அதிகம் இருக்கும் நாடுகளின் பட்டியலில் இலங்கையும் உள்ளது.மேலும் 199 நாடுகளில் 22 கோடி பேரிடம் சுமார் 1,900 ஆராய்ச்சியாளர்களின் பங்கேற்புடன் நடத்தப்பட்ட ஆராய்ச்சியில் உடற் திணிவுச் சுட்டி (உயரத்திற்கான எடை) முக்கிய அளவுகோலாக எடுக்கப்பட்டுள்ளது.

அதாவது ஒருவரது உடலினது உயரத்திற்கு பொருத்தமான நிறை எவ்வளவு என்பதை கணித்தல் உடற் திணிவுச் சுட்டி ஆகும்.

இவ்வாறு 1990 முதல் 2022 வரை சேகரிக்கப்பட்ட தரவுகளைப் பயன்படுத்தி முப்பது ஆண்டுகளுக்கும் மேலாக இந்த ஆராய்ச்சி நடத்தப்பட்டுள்ள நிலையில், போசணைக் குறைபாட்டால் பாடசாலை பிள்ளைகளின் உடல் ஆரோக்கியம் பாதிக்கப்படுவது மட்டுமன்றி மனவளர்ச்சி குன்றும் ஆபத்தில் உள்ளனர்.

எனவே இதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்காவிட்டால் நாட்டில் மனவளர்ச்சி குன்றிய பிள்ளைகளின் தலைமுறை உருவாகுவதுடன் போசணை குறைபாடு காரணமாக பிள்ளைகளிடையே என்சைம்கள் மற்றும் ஹோர்மோன்களின் உற்பத்தி பலவீனமடைந்து நாளாந்த உடல் செயல்பாடுகளில் தொய்வு நிலை ஏற்பட வழிவகுக்கிறது.

அத்தோடு சிறுவர்கள் நோயெதிர்ப்பு சக்தி குறைபாடு காரணமாக பல்வேறு நோய்களால் பாதிக்கப்படுவதுடன் போசணைக் குறைப்பாடு நெருக்கடியானது மனவளர்ச்சி குன்றுவதற்கு முக்கிய காரணமாக உள்ளது

இது நாட்டில் தேசிய அபிவிருத்திக்கு பங்களிக்கக்கூடிய கல்வி கற்ற மற்றும் புத்திசாலி இளைஞர்களின் எண்ணிக்கை குறைவதற்கு வழிவகுப்பதோடு மேலும் நாட்டில் 17.8 சதவீத ஆண் பிள்ளைகள் தங்கள் வயதுக்குக் குறைவான எடையுடன் உள்ளனர்.

அதாவது 450,000 ஆண் பிள்ளைகள் உள்ள நிலையில் நாட்டில் மொத்தமான 860,000 பாடசாலை மாணவர்கள் எடை குறைவாக இருப்பதாக புள்ளிவிபரங்கள் காட்டுகின்றன-என்றார். (அ)

## ரணிலை....

ஜனாதிபதிக்கு ஆதரவு வழங்க முடி யாத கொள்கை ரீதியிலான பிரச்சினை உள்ளது." - என இதன்போது ராஜபக்சக்கள் இருவரும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

பொலிஸ் அதிகாரத்தைதவிர ஏனைய அதிகாரங்களை பகிர்வது பிரச்சினை அல்ல எனவும், சர்வதேச நாணய நிதியத்தின் கோரிக்கைகளை நிறைவேற்றவேண்டியது கட்டாயம் எனவும் இதற்கு ஜனாதிபதி பதிலளித்துள்ளார்.

அத்துடன், பொதுஜன பெரமுன கட்சி உறுப்பினர்களுக்கு அமைச்சு பதவி வழங்கப்படாமை தொடர்பிலும் ராஜபக்ச தரப்பில் இருந்து அதிருப்தி வெளியிடப்பட்டுள்ளது.

அதேவேளை, ரணிலை ஆதரிக்கும் முடிவை கட்சி உறுப்பினர்கள் எடுக்கும் பட்சத்தில் மஹிந்த ராஜபக்ச, கோட்டாபய ராஜபக்ச ஆகியோரின் வெற்றிக்காக உழைத்ததுபோல ரணிலின் வெற்றிக்காக உழைப்பதற்கு தான் தயார் என இதன்போது பசில் கூறியுள்ளார் எனவும் அறியமுடிகின்றது.

இந்த நடைபெற்ற சந்திப்பில் இறுதி இணக்கப்பாடு எதுவும் எட்டப்பட வில்லை, எனினும், மீண்டும் இரு தரப்பினரும் சந்தித்து பேச்சு நடத்துவதற்கு இணக்கம் காணப்பட்டுள்ளது.

அடுத்து நடைபெறவுள்ள 2ஆவது சந்திப்பின்போது ஜனாதிபதி தேர்தல் மற்றும் மொட்டு கட்சியின் எதிர்கால திட்டங்கள் பற்றி ஜனாதிபதிக்கு தெரியப்படுத்தப்படவுள்ளது. ஜனாதிபதி தேர்தலில் மொட்டு கட்சி ரணிலை ஆதரிக்குமா அல்லது வேட்பாளர் ஒருவரை நிறுத்துமா என்பதும் இக்கூட்டத்திலேயே தீர்மானிக்கப்படவுள்ளது. (அ)

## யாழ்.மத்திய....

தமது இரண்டாம் இன்னிங்ஸில் துடுப்பாடி வந்த யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரி அணியானது 140 ஓட்டங்களுக்கு 9 விக்கெட்டுக்களை இழந்து காணப்பட்டிருந்தது.

தொடர்ந்து நேற்று போட்டியின் மூன்றாம் நாள் ஆட்டத்தில் சென். ஜோன்ஸ் கல்லூரி அணியை விட 69 ஓட்டங்கள் முன்னிலை அடைந்தவாறு தமது இரண்டாம் இன்னிங்ஸ் ஆட்டத்தை தொடர்ந்த யாழ். மத்திய கல்லூரி சற்று சவால்மிக்க முன்னிலை ஒன்றை எதிரணிக்கு வழங்குவதற்கு எதிர்பார்த்த போதிலும் அவ்வணி 57.1 ஓவர்களுக்கு அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 149 ஓட்டங்கள் மாத்திரமே எடுத்தது.

யாழ். மத்திய கல்லூரி அணியின் பின்வரிசை துடுப்பாட்டத்தில் அதிக பட்சமாக விக்னேஸ்வரன் பருதி 20 ஓட்டங்களை குவித்திருந்தார்.

அதேவேளை சென். ஜோன்ஸ் கல்லூரி அணியின் பந்துவீச்சில் கிருபானந்தன் கஜகர்ணன், ஜெயச்சந்திரன் அஷ்னாத் மற்றும் ஸ்டான்லி சேம்சன் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்கள் வீதம் சுருட்டியிருந்தனர்.

யாழ். மத்திய கல்லூரியின் இரண்டாம் இன்னிங்ஸை அடுத்து போட்டியின் வெற்றி இலக்காக 79 ஓட்டங்கள் நிர்ணயம் செய்யப்பட்டது.

இந்த வெற்றி இலக்கினை அடைய பதிலுக்கு இரண்டாம் இன்னிங்ஸில் துடுப்பாடிய யாழ். சென். ஜோன்ஸ் கல்லூரி அணியானது போட்டியின் வெற்றி இலக்கை 15 ஓவர்களில் விக்கெட் இழப்பின்றி 81 ஓட்டங்களுடன் அடைந்தது.

சென். ஜோன்ஸ் கல்லூரியின் வெற்றி இலக்கை உறுதி செய்த அதன் துடுப்பாட்டத்தில் அரைச்சதம் விளாசிய உதயனன் அபிஜோய்சாந்த் 10 பௌண்டரிகள் அடங்கலாக 49 பந்துகளில் 50 ஓட்டங்கள் பெற்றார். அதேநேரம் அன்டர்சன் சச்சின் 30 ஓட்டங்கள் எடுத்திருந்தார்.

போட்டியின் ஆட்டநாயகன் விருதினையும் சென். ஜோன்ஸ் கல்லூரியின் உதயனன் அபிஜோய்சாந்த் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## பிரதம....

நீண்ட காலம் தொடர்ச்சியாக வடக்கில் பணியாற்றிய அவர், பின்னர் கொழும்புக்கு விடுவிக்கப்பட்டிருந்தார்.

இந்தநிலையில், கடந்த இரண்டு வருடங்களாக ஜனாதிபதி செயலகத்தின் மேலதிக செயலாளராகப் பணியாற்றும் எல்.இளங்கோவன், இம்மாதம் 15 ஆம் திகதி முதல் வடக்கு மாகாண பிரதம செயலாளராக நியமிக்கப்படுகின்றார்.

அதேநேரம் வடக்கு மாகாணத்தின் தற்போதைய பிரதம செயலாளர் சமன் பந்துலசேன ஜனாதிபதி செயலகத்துக்கு மாற்றலாகிச் செல்கின்றார்.

இதற்கான அறிவித்தல் நேற்று முன்தினம் தொலைபேசி ஊடாக வழங்கப்பட்டுள்ள நிலையில், நாளை எழுத்தில் வழங்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (அ)

## கொழும்பில்....

விண்ணப்பப் படிவங்கள் வழங்கப்பட்டுள்ளன.

ஏற்கனவே இவ்வாறான விண்ணப்பங்கள் வழங்கப்பட்டுப் பின்னர் அவ்வாறான பதிவுகள் அவசியம் இல்லையெனக் கூறப்பட்டிருந்தது.

பாராளுமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட பலர் பொலிஸ் தலைமையகத்திடம் குறித்த பதிவுகள் தொடர்பாக வினவி அவசியம் இல்லையென விளக்கமளித்திருந்தனர்.

குறிப்பாக கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் பதிவு முறையை ரத்துச் செய்யும் விவகாரத்தில் தீவிரமாக ஈடுபட்டிருந்தார்.

இதனால் பொலிஸ் பதிவு முறைகள் ரத்து செய்யப்பட்டிருந்தன. இந்த நிலையில் மீண்டும் பொலிஸ் பதிவுக்கான விண்ணப்பப் படிவங்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

2009 மே மாதத்திற்கு முன்னரான காலத்தில் கொழும்பில் வாழ்ந்த தமிழர்கள் இலங்கைப் பாதுகாப்பு அமைச்சின் உத்தரவின் பிரகாரம் பொலிஸ் நிலையங்களில் பதிவு செய்யப்பட்டிருந்தனர்.

ஆனால் போருக்குப் பின்னரான காலத்தில் அவ்வாறான பதிவு முறைகள் நீக்கம் செய்யப்பட்டிருந்தன. இருந்தாலும் அவ்வப்போது பொலிஸார் பதிவுக்கான விண்ணப்பப் படிவங்களை வழங்கி வந்தனர்.

ஆனால் பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் சில பொது அமைப்புகளின் எதிர்ப்புகளினால் பின்னர் அவ்வாறான பதிவுகள் கைவிடப்பட்டிருந்தன.

இப் பின்னணியில் மீண்டும் பொலிஸ் பதிவுகளுக்கான விண்ணப்பப் படிவங்கள் வழங்கப்பட்டு வருகின்றமையினால் கொழும்பில் வாழும் தமிழர்கள் மத்தியில் அச்சம் ஏற்பட்டுள்ளது.

போதைப்பொருள் கடத்தல்கள் மற்றும் தேவையற்ற பிரச்சினைகளைத் தடுக்கும் நோக்கில் இவ்வாறான பதிவுகளை பொலிஸார் மேற்கொள்வதானால் அதிகாரபூர்வமாக அறிவித்திருக்க வேண்டும்.

ஆனால் அவ்வாறான அறிவிப்புகள் எதுவுமின்றி ஈழத்தமிழர்கள் நெருக்கமாக வாழும் பிரதேசங்களில் மாத்திரம் பொலிஸ் பதிவுக்கான விண்ணப்பப் படிவங்கள் வழங்கப்பட்டு வருகின்றமை தொடர் பாகச் சந்தேகங்கள் எழுந்துள்ளன. கிராம சேவையாளர்கள் ஊடக விண்ணப்பப் படிவங்களை வழங்காமல், ஏன் பொலிஸார் மூலமாக வழங்க வேண்டும் என்றும் மக்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

வெள்ளவத்தை பிரதேசத்தில் உள்ள தொடர் மாடிகளில் இந்த விண்ணப்பப் படிவங்கள் நேற்று வெள்ளிக்கிழமை விநியோகிக்கப்பட்டதாகவும், வேறு பிரதேசங்களில் நேற்று முன்தினம் விநியோகிக்கப்பட்டதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

"குடியிருப்பாளர் விபர அட்டவணை - பொலிஸ் சட்டத்தின் 76 ஆம் பிரிவின் கீழ் செய்யப்படும் கூற்று" என்று விண்ணப்பப் படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# சர்வதேசத்தின் சூழ்ச்சிகளால் வீழ்த்தப்பட்டார் கோட்டபாய!

## நாமல் எம்.பி ஆதங்கம்



கொழும்பு, மார்ச் 10

முன்னாள் ஜனாதிபதி கோட்டபாய தலைமையிலான அரசாங்கம் வீழ்த்தப்பட்டதற்கு தேசிய மற்றும் சர்வதேசத்தின் சூழ்ச்சிகளிலே காரணமென பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டதன் பின்னர் ஊடகங்களிடம் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பாரிய எதிர்பார்ப்புகளுக்கு மத்தியில் நாட்டு மக்களின் அமோக ஆதரவுடன் 2019 ஆம் ஆண்டு கோட்டாபய தலைமையிலான அரசாங்கம் தோற்றுவிக்கப்பட்டது.

இந்நிலையில் 2019 ஆம் ஆண்டு இறுதியில் ஏற்பட்ட கொரோனா பெருந்தொற்று பூகோள மட்டத்தில் தாக்கம் செலுத்திய நிலையில் கொரோனா பெருந்தொற்றிலிருந்து நாட்டு மக்களை பாதுகாப்பதற்கு அப்போதைய ஜனாதிபதி கோட்டாபய முன்னுரிமை வழங்கினார்.

பூகோள பொருளாதார நெருக்கடி இலங்கைக்கு மாத்திரம் வரையறுக்கப்பட்டதல்ல, வெளிநாட்டு கையிருப்பு வரையறுக்கப்பட்டதை தொடர்ந்து எரிபொருள், எரிவாயு உள்ளிட்ட அத்தியாவசிய பொருட் கொள்வனவில் பாதிப்பு ஏற்பட்டது.

பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டிருந்த மக்களின் விரக்தி நிலையை ஒரு தரப்பினர் தங்களின் குறுகிய அரசியல் நோக்கங்களுக்காக பயன்படுத்திக் கொண்டார்கள்.

தேசிய மற்றும் சர்வதேசத்தின் சூழ்ச்சிகளினால் தான் கோட்டபய ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கம் வீழ்த்தப்பட்டதுடன் அரகலயவின் பின்னணி என்ன என்பதை மக்கள் நன்கு விளங்கிக் கொண்டுள்ளார்கள்.

அதேவேளை, எதிர்வரும் தேசிய தேர்தல்களில் பொதுஜன பெரமுனவை தலைமைத்துவமாக கொண்டு பலமான அரசாங்கத்தை ஸ்தாபிப்போம்-என்றார்.

## கோட்டாபய....

எ.ழுதியுள்ள "சதி" என்ற நூல் தொடர்பில் தனது எக்ஸ் தளத்திலேயே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

சிங்கள-பௌத்தர் பலமடைவது இந்நாட்டு தமிழ், முஸ்லிம் மக்களுக்கு ஒரு பிரச்சினை அல்ல. சிங்கள மொழி பேசுவதன் மூலமும், பௌத்த தரிசனத்தை கடை பிடிப்பதன் மூலமும் நானுங்கூட சிங்கள பௌத்த சிந்தனையை பலப்படுத்தி வருகிறேனே! எமக்கு அதில் என்ன பிரச்னை?

இந்நாட்டில் சிங்கள- பௌத்தம், பேரினவாதமாக மாறி, பல இனங்கள், பல மதங்கள், பல மொழிகள் என்ற இலங்கை பன்மைத்துவத்தை இல்லாது ஒழிப்பதே எமது பிரச்சினை. அதுதான் எமது நீண்டகால போராட்டம். உங்கள் "அரகலய" வுக்கும் இதற்கும் தொடர்பு கிடையாது.

நாடு முழுவதும் நடைபெற்ற அரகலவில் பங்கு பெற்ற மக்களில் நூற்றுக்கு 99 வீதமானவர்கள் 2019, 2020 தேர்தல்களில் மொட்டு சின்னத்துக்கு வாக்கு அளித்தவர்கள். அவர்களே, கோட்டாபயவின் முட்டாள்தனமான, பொருளாதார கொள்கைகள் காரணமாக வயிற்றில் பாரிய அடி விழுந்தவுடன் தெருவுக்கு வந்து போராடியவர்கள்.

தமிழர்களுக்கும், முஸ்லிம்களுக்கும் கூட இவை பிரச்சினைகள்தான். ஆனால், அவற்றையும் மீறிய இன, மத ஒடுக்குமுறைகளால் அவர்கள் துன்பம் அடைந்தார்கள்.

ஆங்காங்கே ஒரு சில தமிழ், முஸ்லிம் மக்கள் இறுதி கால கட்டங்களில் அறகலவில் கலந்து கொண்டார்கள். சில அதிக பிரசங்கி தமிழ், முஸ்லிம் இளைஞர்கள் அதீத கற்பனையில் "இத்தோடு இந்நாட்டில் இனவாதத்தையும் ஒழித்து விடுவோம்" என முழங்கியதும் உண்மை தான். "நல்லது நடந்தால் சரி" என நாம் அவர்களை வாழ்த்தியதும் உண்மை தான்.

இன்று அரசியல் அரங்கில் அந்த அதிக பிரசங்கி தமிழ், முஸ்லிம் இளைஞர்களை காணவில்லை.

எது எப்படி இருந்தாலும், அரகலய முழுக்க முழுக்க, "வயிற்றில் பாரிய அடி விழுந்ததுடன், தெருவுக்கு வந்த சிங்கள பெருந்திரள் மக்களால்" நடத்தப்பட்ட ஒன்றாகும். அதுவும் 2019, 2020 தேர்தல்களில் மொட்டு சின்னத்துக்கு வாக்களித்த மக்களால் நடத்தப்பட்டது. இதுதான் உண்மை.

சிங்கள-பௌத்தர் பலமடைவது சிறுபான்மையினருக்கு பிடிக்காததாலேயே, அவர்கள் அரகலவை நடத்தினார்கள் எனக் கூறி, உண்மையை திரிபுபடுத்த வேண்டாம் என முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு கடுமையாக கூறி வைக்க விரும்பு கிறேன் - என்றார். (அ)

## சஜித்....

வருமாறு-

சஜித் ஜனாதிபதி, ரணில் பிரதமர் என்ற கோரிக்கையுடன் இதற்கான ஏற்பாடு இடம்பெறக்கூடும். அதேபோல ரணில் ஜனாதிபதி, சஜித் பிரதமர் என்ற யோசனையும் முன்வைக்கப்பட்டுள்ளது. இவை இரண்டில் ஒன்று நடக்கலாம். அது நடக்காமலும் போகலாம். ஆனால் அதற்கான முயற்சி இடம்பெறுகின்றது.

பூகோள அரசியலில் அமெரிக்காவும், இந்தியாவும் இன்று இணைந்து செயற்பட்டுவருகின்றன." - என்றார். (அ)

## வெடுக்குநாறி....

பொலிசார் நடந்துகொண்ட விதம் அவர்களது அடாவடித்தனமாகவே இருக்கின்றது.

ஆலய தரிசனம் செய்வது அவரவர் உரிமையாகும். இதை தடுப்பதற்கு எவருக்கும் அதிகாரம் கிடையாது. இவ்வாறான நிலையில் குறித்த ஆலயப் பகுதியில் பொலிஸார் இவ்வாறான தடைகளையும் அடாவடித்தனங்களையும் செய்வதற்கு யார் அனுமதி கொடுத்தது? அதேநேரம் இதை ஏற்றுக்கொள்ளவும் முடியாது.

அத்துடன் நடைபெறவுள்ள அமைச்சரவையிலும் இவ்விடயம் தொடர்பில் கொண்டு செல்லவுள்ளேன் என்பதுடன் இனிவருங்காலங்களில் பொலிஸார் இவ்வாறான செயற்பாடுகளை மெற்கொள்ளாதிருப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்-என்றார். (அ)

## படைகள்....

235 கிராம சேவகர் பிரிவில் 20.3 ஏக்கர் காணிகளும்.வறுத் தலைவிளானில் 241 கிராம சேவகர் பிரிவில் 23 ஏக்கர் காணிகளும் விடுவிக்கப்படவுள்ளன.

மேலும் மயிலிட்டி தெற்கில் 240 கிராமசேவகர் பிரிவில் 24 ஏக்கர் காணிகளும் விடுவிக்கப்படவுள்ளதாக தெரியவந்துள்ளது.

இதேவேளை விடுவிக்கப்படவுள்ள காணிகளின் உரிமையாளர்கள் இன்று யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்திற்கு வருகை தருமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (அ)

ஈழநாடு
Eelanadu

# ஈழத்தமிழர் மீதான வன்மம் இன்னும் அடங்கவில்லை!

## இலங்கை அரசை சாடுகின்றார் சீமான்

சென்னை, மார்ச் 10

**சிவராத்திரி வழிபாட்டில் ஈடுபட்ட தமிழர்கள் மீது, இலங்கை அரசு தாக்குதல் நடத்தி கைதுசெய்துள்ளமை இனவெறியின் உச்சம் என நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் கண்டனம் வெளியிட்டுள்ளார்.**

ஈழத்தாயகத்தில் வவுனியா மாவட்டத்தில் அமைந்துள்ள வெடுக்குநாறிமலையில் சிவன் இரவை முன்னிட்டு நீதிமன்றத்தில் அனுமதி பெற்று வழிபடச் சென்ற பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் உள்ளிட்ட தமிழர்களைத் தடுத்து, அவர்கள் மீது இலங்கை இனவாத அரசின் பொலிஸார் கொடுந்தாக்குதல் நடத்தியுள்ளமை வன்மையான கண்டனத்துக்குரியது எனவும் சீமான் தெரிவித்துள்ளார்.

சிவராத்திரி தினத்தை முன்னிட்டு வெடுக்குநாறி மலையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த வழிபாடு நிகழ்வுகளை நிறுத்துமாறு பொலிஸார் தெரிவித்திருந்த நிலையில் அதனை மீறி தரித்து நின்றவர்களை தாக்கி கைது செய்திருந்தனர். இதனை பலரும் கண்டித்திருந்த நிலையில் நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமானும் இதனை கண்டித்து தமது எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ளார்.

மேலும் குறித்த பதிவில் "ஈழ நிலத்தில் 2 இலட்சம் அப்பாவி தமிழர்களைத் துள்ளத்துடிக்கப் படுகொலை செய்து முடித்த பிறகும், தமிழர்கள் மீதான வன்மமும், இனத்துவேசமும் துளியும் அடங்காது இன அழிப்பு நடவடிக்கையைத் தொடர்ச்சியாக அரங்கேற்றி வருகின்றது. அதன் நீட்சியாக, தமிழர் அடையாளச் சிதைப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு தமிழர் பண்பாட்டு விழுமியங்களையும், தொன்மச் சான்றுகளையும் மெல்ல மெல்ல அழிக்கும் முயற்சியில் இறங்கியிருக்கிறது சிங்கள இனவாத அரசு.

அருகாமையிலிருக்கும் ஒரு நாட்டில் இத்தகைய இனவெறிக் கொடுமைகளும், பண்பாட்டு அழிப்பு நடவடிக்கைகளும் தொடர்ச்சியாக நடைபெற்று வரும்போதும் இந்தியாவை ஆளக்கூடிய பாஜக அரசு அதுகுறித்து எவ்வித எதிர்வினையும் ஆற்றாது அமைதிகாப்பது ஒட்டுமொத்த தமிழர்களுக்கும் இழைக்கும் பச்சைத்துரோகமாகும்.

ஆகவே, வழிபாட்டு உரிமையையும், வாழ்வதற்கான உரிமையையும் மறுத்து தமிழ் மக்களை அழித்தொழிக்கும் இலங்கையின் இனவாதக் கொடுமைகளை ஐ.நா. மன்றம் உள்ளிட்ட அமைதியை விரும்பும் பன்னாட்டு அமைப்புகள் உடனடியாகக் கண்டிப்பதோடு, தமிழர்களுக்கான நிரந்தரத் தீர்வான ஈழத்தாயக விடுதலைக்கான பொது வாக்கெடுப்பினை நடத்த முன்வர வேண்டுமென நாம் தமிழர் கட்சி சார்பாக வலியுறுத்துகிறேன்." என குறிப்பிட்டுள்ளார். (அ)

# 600 பேருக்கு எதிராக சர்வதேச பொலிஸார் ஊடாக பிடியாணை

## குற்றவாளிகள் வெளிநாடுகளுக்கு தப்பிச் செல்வதை தடுக்க நடவடிக்கை

கொழும்பு, மார்ச் 10

வெளிநாடுகளுக்கு தப்பிச் சென்றுள்ள பாதாள உலக செயற்பாடுகள் மற்றும் போதைப் பொருள் கடத்தலில் சம்பந்தப்பட்ட குழுக்களை சேர்ந்த 600 பேருக்கு எதிராக சர்வசேத பொலிஸார் ஊடாக சிகப்பு அறிக்கை பிடியாணை பிறப்பிக்கப்பட்டு, அவர்களை இலங்கைக்கு கொண்டு வரும் வேலைத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பாதுகாப்பு தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இவர்களை இலங்கைக்கு கொண்டு வருவது தொடர்பில் ராஜதந்திர மற்றும் தூதரக மட்டத்தில் ஏற்கனவே பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டுள்ளதுடன் அவை வெற்றிகரமான மட்டத்தில் இருப்பதாக கூறப்படுகிறது.

போதைப் பொருள் கடத்தல் மற்றும் பாதாள உலக செயற்பாடுகளுடன் தொடர்புள்ள குற்றவாளிகள் எவரும் துபாய் உட்பட வேறு நாடுகளுக்கு தப்பிச் செல்ல முடியாதபடி நாட்டுக்குள் பாதுகாப்பை பலப்படுத்துவது குறித்து அதிகாரிகள் கவனம் செலுத்தியுள்ளனர்.

குற்றச் செயல்களுடன் தொடர்புடையவர்கள் இலகுவாக டுபாய் மற்றும் இந்தியாவுக்கு தப்பிச் செல்வதால்,அவர்களை அந்நாடுகளுக்கு செல்வதை தடுப்பது குறித்தும் அதிகாரிகள் கவனம் செலுத்தியுள்ளனர்.

ராஜதந்திர மட்டத்தில் நடத்தப்படும் பேச்சுவார்த்தைகள் வெற்றியளித்தால், அதன் பின்னர் இலங்கையில் குற்றச் செயல்களில் ஈடுபட்டு விமான நிலையங்கள் ஊடாக எவரும் தப்பிச் செல்ல முடியாத நிலைமை ஏற்படும்.

இதனிடையே தென் மாகாணத்தில் இயங்கி வரும் பாதாள உலக குற்றவாளிகள் மற்றும் போதைப் பொருள் விற்பனையில் ஈடுபட்டு வரும் 15 குழுக்களின் உறுப்பினர்களை கைது செய்ய விசேட அதிரடிப்படை யினர் விரிவான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# வெள்ளை மாளிகையில் இம்முறை வெசாக் விழா?

கொழும்பு, மார்ச் 10

வெசாக் தின நிகழ்வுகளை இம்முறை வெள்ளை மாளிகையில் நடத்தும் முயற்சிகளில் இலங்கை அரசாங்கம் ஈடுபட்டு வருகிறது.

அமெரிக்காவில் வாழும் பல்வேறு சமூகங்கள் மற்றும் உலகளாவிய ரீதியில் வாழும் பல இனங்களின் பண்டிகைகள் வெள்ளை மாளிகையில் கொண்டாடப்பட்டு வருகிறது.

தமிழர்களின் முக்கிய பண்டிகைகளில் ஒன்றாக உள்ள தீபாவளி பண்டிகையும் வெள்ளை மாளிகையில் கொண்டாடப்படுவது வழக்கம்.

இந்த நிலையில், இம்முறை வெசாக் பண்டிகையை அங்கு சிறப்பாக நடத்த அமெரிக்காவுக்கான இலங்கை தூதுவர் மஹிந்த சமரசிங்க முயற்சிகளை மேற்கொண்டு வருகிறார்.

இது தொடர்பான முக்கிய சந்திப்பொன்றையும் அவர் வெள்ளை மாளிகையின் அதிகாரிகளுடன் நடத்தியுள்ளார்.

இதன்போது உரையாற்றிய தூதுவர் மஹிந்த சமரசிங்க, இலங்கை மக்கள் மட்டுமல்லாது உலகெங்கிலும் உள்ள சுமார் 500 மில்லியன் பௌத்தர்கள் வெசாக் தினத்தை கொண்டாடுகின்றனர்.

இந்த ஆண்டு வெசாக் விழாவை அமெரிக்க ஜனாதிபதியின் அனுசரணையில் வெள்ளை மாளிகையில் நடத்த முடிந்தால் அது உலகெங்கிலும் உள்ள பௌத்தர்களுக்கு ஒரு கௌரவமாக இருக்கும் என்று தெரிவித்தார்.

நேபாளம், இந்தோனேசியா, தாய்லாந்து, இந்தியா, மொங்கோலியா மற்றும் கம்போடியா ஆகிய நாடுகளின் தூதரகங்களின் மூத்த பிரதிநிதிகள் மற்றும் அமெரிக்காவின் சர்வதேச பௌத்த சங்கத்தின் தலைவர் வாங்மோ டிக்சே ஆகியோரும் இந்த சந்திப்பில் கலந்து கொண்டனர். (அ)

People's Petition
**Northern and Eastern Provinces Civil Society Group**
**வடக்கு, கிழக்கு மாகாண சிவில் சமூக குழு**

# கருத்தாய்வு

## ஜனாதிபதி தேர்தலை எதிர்கொள்வது எப்படி?

**காலம்: இன்று (10.03.2024) மாலை 4.00 மணி**
**இடம் : தந்தை செல்வா கலையரங்கம், யாழ்ப்பாணம்**

கருத்துரை:
**பேராசிரியர் கே.ரி. கணேசலிங்கம்**
**யதீந்திரா**
**மரியாம்பிள்ளை செல்வின் இரேனியஸ்**

**"தேர்தலை எதிர்கொள்வது எப்படி? ஏன்?"**
**என்ற தலைப்பில்**
**அரசியல் கட்சிகளின் தலைவர்களும் கருத்துரைப்பார்கள்**

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**- வடக்கு கிழக்கு மாகாண சிவில் சமூக குழு.**
40 Racca Lane, Jaffna, Sri Lanka.
E-mail: nepppcg@gmail.com

# மொட்டுவை ஒன்றிணைக்க பசில் ராஜபக்ஷ தீவிர முயற்சி



கொழும்பு, மார்ச் 10

பொதுஜன பெரமுன கட்சியின் முன்னாள் தேசிய அமைப்பாளர் பசில் ராஜபக்ச, மீண்டும் தமது கட்சியை ஒன்றிணைக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளார்.

கட்சிக்குள் கடந்த காலத்தில் ஏற்பட்ட பிளவுகளுக்கான உண்மை நிலவரங்களை அடையாளம் கண்டு அதனை சரியும் நடவடிக்கையை பசில் முன்னெடுத்து வருகிறார்.

மொட்டுக் கட்சியுடன் மீண்டும் ஒன்றிணையக்கூடிய அரசியல்வாதிகளைத் தொடர்பு கொண்டு அவர்களை கட்சிக்குள் மீண்டும் அழைத்து வரும் பொறுப்பு பாராளுமன்ற உறுப்பினர்களான ரஞ்சித் பண்டார மற்றும் ஜயந்த கெடகொட ஆகியோரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

கடந்த பொதுத் தேர்தலில் பொது ஜன பெரமுன கட்சியில் போட்டியிட்டு நாடாளுமன்றத்திற்கு தெரிவான டலஸ் அழகப்பெரும குழு, விமல் வீரவங்ச உள்ளிட்டோர், மைத்திரிபால சிறிசேன, பிரசன்ன ரணதுங்க, நிமல் லான்சா, நாலக கொடஹேவா போன்று பல்வேறு தரப்புகளாக பிளவுபட்டுள்ளனர்.

இது பொதுஜன பெரமுன கட்சிக்கு பெரும் பின்னடைவை ஏற்படுத்தியுள்ளது. இந்நிலையில், அதனை சரி செய்து, பிரிந்து சென்றவர்களை மீண்டும் ஒன்றி ணைத்து எதிர்வரும் தேர்தலை எதிர்கொள்ள ராஜபக்ச தரப்பு திட்டமிட்டுள்ள தாக தகவல்கள் வெளியாகியுள்ளன. (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 10.03.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# உலகச் சமூக மாமன்றம் 2024: உயர்ந்து நிற்கும் நம்பிக்கை!




**அ.இருதயராஜ்**

நேபாளத்தின் தலைநகர் காட்மாண்டுவில், உலகச் சமூக மாமன்றத்தின் (**World Social Forum** 2024) மாநாடு பிப்ரவரி (15-19) நடந்து முடிந்துள்ளது. 'இன்னொரு உலகம் சாத்தியம்', 'மாற்று உலகம் சாத்தியமே!' என்கின்ற முழக்கங்களோடு ஆரம்பித்த இந்த மாநாடு, ஏறக்குறைய 60 தீர்மானங்களை முன்னிறுத்தியுள்ளது. தொடக்க நாளில் நடந்த பேரணியில் கூலித் தொழிலாளர்கள், விவசாயிகள், பழங்குடியினர் எனப் பல்வேறு பிரிவினர் கலந்துகொண்டது இன்னொரு சிறப்பம்சம்.

**மாநாட்டின் பின்னணி:**

உலகச் சமூக மாமன்றம், உலகமயமாக்கலுக்கு எதிராகவும் எதேச்சதிகாரங்களுக்கு எதிராகவும் 2001இல் பிரேசிலில் ஆரம்பிக்கப்பட்டது. 15 முறை இதன் மாநாடு பல்வேறு நாடுகளில் நடந்திருக்கின்றது. ஆசியாவில் மும்பையிலும் (2004), தற்போது நேபாளத்திலும் நடத்தப்பட்டிருக்கிறது. ஏறக்குறைய 98 நாடுகளிலிருந்து ஐம்பதாயிரம் பேர் பங்கேற்றனர்.

1,400 அமைப்புகள் இதில் பிரதிநிதித்துவம் பெற்றன. 30-க்கும் மேற்பட்ட நாடுகளிலிருந்து வந்த சர்வதேச இளைஞரணிக் குழுக்கள் கலந்துகொண்டன. பதிமூன்று வகையான மையத் தலைப்புகளில் கருத்தரங்கங்கள், கலந்துரையாடல்கள், விவாதங்கள் நடைபெற்றன.

குறிப்பாகப் பொருளாதாரம், புலம்பெயர் தொழிலாளர்கள் பிரச்சினை, சாதி வேற்றுமை, பாலின ஏற்றத்தாழ்வு, பண்பாட்டுத் தளத்தில் நடக்கின்ற போராட்டம்,சுற்றுச்சூழல் பாதுகாப்பு எனப் பல்வேறு தலைப்புகளில் உரையாடல்கள் நடந்தன. வேற்றுமையில் ஒற்றுமையையும் பன்மைத்துவத்தையும் கொண்டாடுகின்ற பண்பையும் இம்மாநாட்டில் பார்க்க முடிந்தது. நாட்டை ஆளும் அரசுக்கும் மதத்துக்கும் தொடர்பு இருக்கக் கூடாது என்ற முழக்கம் விண்ணை முட்டியது.

**போர்களும் புலம்பெயர்ந்தோரும்:**

சமகாலப் போர்களைப் பற்றி இம்மாநாட்டில் அதிகம் விவாதிக்கப்பட்டது. உக்ரைன் மீது ரஷ்யாவும், காசா மீது இஸ்ரேலும் நிகழ்த்திவரும் போர்கள், மணிப்பூரில் வெடித்த வன்முறை போன்றவற்றால் பலர் உயிரிழந்ததையும், லட்சக்கணக்கானோர் அகதிகளாக்கப்பட்டிருப்பதையும் பற்றிக் கவலை தெரிவிக்கப்பட்டது.

போர்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிரந்தரமான குடியிருப்புகள் வேண் டும் மனித உரிமை அடிப்படையில் அவர்களுக்கு அனைத்து உதவிகளும் கிடைக்கப்பெற வேண்டும் என்னும் குரல் ஓங்கி ஒலித்தது.

**சுற்றுச்சூழல் பாதுகாப்பு:**

சுற்றுச்சூழலுக்கு ஏற்படுகின்ற அநீதி யானது பெண்களுக்கு இழைக்கப்படும் அநீதி என்றே பெண் பேச்சாளர்கள் சுட்டிக்காட்டினர். இயற்கைப் பேரிடர், போர்கள், இனக் கலவரம், வறுமை, பட் டினி, கொரோனா பொதுமுடக்கம் என்று எந்தச் சூழலை எடுத்துக்கொண்டாலும் அதிகமாகப் பாதிக்கப்படுவது பெண்க ளும் குழந்தைகளும் திருநர்களும்தான்.

இவர்கள் ஒன்றுகூடித் தங்களுக்கான அடையாளத்தை நிலைநாட்டவும், உரிமைகளைப் பெறவும் தங்களுடைய பிரச்னைகளுக் குத் தீர்வு காணுகின்ற உலகளாவிய மனிதர்களின்






தோழமையைப் பெறு வதற்கும் உலகச் சமூக மாமன்றம் ஒரு பெரிய இடத்தை உருவாக்கியிருந்தது.

**சர்வதேச இளைஞர்களின் சங்கமம்:**

சர்வதேச அளவில் உள்ள இளைஞர்களை ஒருங்கிணைக்கும் தளமாக உலகச் சமூக மன்றம் இருக்கிறது. நவீன டிஜிட்டல் ஊடக உலகத்தில் இளைஞர்கள் எப்படி எல்லாம் பாதிக்கப்படுகிறார்கள், சமூக மாற்றத்தின் கருவிகளாக டிஜிட்டல் கருவிகளை எப்படி மாற்றவேண்டும் என்றெல்லாம் அறிவுபூர்வமாக விவாதிப்பதற்கும் கலந்துரையாடுவதற்குமான அரங்கத்தை உருவாக்கியிருந்தார்கள். இளைஞர்கள் தங்கள் தாய்மொழியிலும் ஆங்கிலத்திலும் உரையாற்றினர்.

பிரச்சினைகளுக்குத் தீர்வு காண டிஜிட்டல் யுகத்தில் நாம் புதிய கருத்துக்களையும் ஆலோசனைகளையும் எப்படிப் பரிமாறிக்கொள்ள முடியும், அவற்றை மக்களின் ஒருங்கிணைந்த வளர்ச்சிக்கும் முன்னேற்றத்துக்கும் பயன்படுத்த முடியும் என்பதைப் பகிர்ந்துகொண்டனர்.

**ஜனநாயக பூமி:**

உலகச் சமூக மாமன்றம் சமத்துவம், சமூக நீதி, சம வாய்ப்பு ஆகிய உயரிய மதிப்பீடுகளின் அடிப்படையில் பணி செய்கின்ற மக்களையெல்லாம் ஒருங்கிணைக்கின்ற தளமாக அமைந்தது. மனித நேயத்துக்காகவும் மனித மாண்புகளுக்காகவும் உலகம் எங்கும் போராடிக் கொண்டிருக்கின்ற குரல்களின் சங்கமம் இது.

தொடக்க விழாவில் கலந்துகொண்டு பேசிய ஐ.நா.வின் பொதுச் செயலாளர் அண்டோனியோ குட்டர்ஸ், "பல்வேறு விதங்களில் பாதிக்கப்பட்டு, கடைநிலையில் துன்பப்படும் மக்களுக்கு நம்பிக்கை தருகின்ற வகையிலும் தீர்க்க முடியாத பிரச்சினைகளுக்குப் பொதுவான தீர்வுகள் தேடுகின்ற தளமாகவும் இந்த மாமன்றம் அமைந்திருக்கிறது.

எனவே, நாம் இந்தப் பூமியை அமைதியான சமத்துவமிக்க, ஜனநாயகப் பூமியாக மாற்ற வேண்டும்" என வலியுறுத்தினார். அவநம்பிக்கை மேகங்களை அகற்றுகின்ற வகையில், உலகச் சமூக மாமன்றம் நம்பிக்கையை விதைக்கும் நிகழ்வுகளைச் சிறப்பாக நடத்தியுள்ளது. அந்த நம்பிக்கை எவரெஸ்ட் சிகரம்போல உயர்ந்து நிற்கிறது! ●



# உதைபந்தாட்ட வெற்றியாளர்கள் 2024 முல்லைத்தீவு - வட மாகாணம்

மைலோ உதைப்பந்தாட்ட வெற்றியாளர்கள் 2024 (MILO Football Champs) - வட மாகாணம் (10 மற்றும் 12 வயதிற்கு கீழ்ப்பட்ட அணிகள்) போட்டியின் இரண்டாவது ஆட்டம் 2024 மார்ச் 2 அன்று முல்லைத்தீவு மாவட்டத்தில் இடம்பெற்றது. மொத்தமாக 32 அணிகள் இப்போட்டியில் பங்குபற்றியதுடன், அதில் 14 பெண்கள் அணிகளும், 18 ஆண்கள் அணிகளும் அடங்கியிருந்தன.

இந்த வார இறுதியில் இடம்பெற்ற போட்டிகள் மூலமாக முல்லைத்தீவு மாவட்டத்திலிருந்து பின்வரும் அணிகள் வெற்றியாளர்களாக வலம்வந்தன:

- முல்லைத்தீவு - உடையார்கட்டு அரசினர் தமிழ் கலவன் பாடசாலை (10 வயதிற்குட்பட்ட பெண்கள் பிரிவு)
- முல்லைத்தீவு - இரணைப்பாலை ரோமன் கத்தோலிக்க மகா வித்தியாலயம் (10 வயதிற்குட்ட ஆண்கள் பிரிவு)
- முல்லைத்தீவு - முல்லைத்தீவு ரோமன் கத்தோலிக்க பெண்கள் பாடசாலை (12 வயதிற்குபட்ட பெண்கள்)
- முல்லைத்தீவு - முல்லைத்தீவு மகா வித்தியாலயம் (12 வயதிற்குபட்ட ஆண்கள் பிரிவு)

இந்த வார இறுதிப் போட்டிகளிலிருந்து 2024 மார்ச் 23 அன்று யாழ்ப்பாணம் துரையப்பா அரங்கில் இடம்பெறவுள்ள, மிகவும் ஆவலுடன் எதிர்பார்க்கப்படுகின்ற இறுதிச் சுற்றில் போட்டியிடுவதற்கு பின்வரும் பாடசாலைகள் தகைமை பெற்றுள்ளன.

**10 வயதிற்குட்பட்ட பெண்கள் பிரிவு**

- முல்லைத்தீவு - உடையார்கட்டு அரசினர் தமிழ் கலவன் பாடசாலை
- முல்லைத்தீவு - அலம்பில் ரோமன் கத்தோலிக்க மகா வித்தியாலயம்
- முல்லைத்தீவு - முத்தையன்கட்டு (இடதுகரை) அரசினர் தமிழ் கலவன் பாடசாலை
- முல்லைத்தீவு- குரவில் தமிழ் வித்தியாலயம்

**10 வயதிற்குட்பட்ட ஆண்கள் பிரிவு**

- முல்லைத்தீவு - இரணைப்பாலை ரோமன் கத்தோலிக்க மகா வித்தியாலயம்
- முல்லைத்தீவு - அலம்பில் ரோமன் கத்தோலிக்க மகா வித்தியாலயம்
- முல்லைத்தீவு - குரவில் தமிழ் வித்தியாலயம்
- முல்லைத்தீவு - சிலாவத்தை தமிழ் வித்தியாலயம்

**12 வயதிற்குட்பட்ட பெண்கள் பிரிவு**

- முல்லைத்தீவு - முல்லைத்தீவு ரோமன் கத்தோலிக்க பெண்கள் பாடசாலை
- முல்லைத்தீவு - அலம்பில் ரோமன் கத்தோலிக்க மகா வித்தியாலயம்
- முல்லைத்தீவு - குமிழமுனை மகா வித்தியாலயம்
- முல்லைத்தீவு - உடையார்கட்டு மகா வித்தியாலயம்

**12 வயதிற்குட்பட்ட ஆண்கள் பிரிவு**

- முல்லைத்தீவு- முல்லைத்தீவு மகா வித்தியாலயம்
- முல்லைத்தீவு- சிலாவத்தை தமிழ் வித்தியாலயம்
- முல்லைத்தீவு- கோம்பாவில் விக்கினேஸ்வரா வித்தியாலயம்
- முல்லைத்தீவு- குரவில் தமிழ் வித்தியாலயம்

எதிர்கால உதைப்பந்தாட்ட நட்சத்திரங்களாக மாறும் திறமைகளைக் கொண்டவர்களுக்கு களம் அமைத்து, வட மாகாணத்தில் அபிலாஷைமிக்க விளையாட்டு வீரர்களின் விளையாட்டுத் திறன்களை தூண்டுவதே மைலோ உதைப்பந்தாட்ட வெற்றியாளர்கள் நிகழ்வின் நோக்கமாகும். இச்சுற்றுப் போட்டியுடன் இணைந்ததாக, திறமைமிக்க வீரர்கள் மத்தியிலிருந்து தெரிவு செய்யப்பட்ட ஒரு குழு, இலங்கை பாடசாலைகள் உதைப்பந்தாட்ட சங்கத்தின் அனுபவம்மிக்க பயிற்றுவிப்பாளர்களின் வழிகாட்டலில் எதிர்வரும் மாதங் களில் வாரஇறுதியில் விசேட பயிற்சிகளையும் பெற்றுக்கொள்ளவுள்ளனர். கல்வி அமைச்சு, வட மாகாண கல்வித் திணைக்களம் ஆகியவற்றின் ஆதரவுடனும், நெஸ்லே மைலோவின் அனுசரணையுடனும் இந்நிகழ்விற்கான ஏற்பாட்டை இலங்கை பாடசாலைகள் உதைப்பந்தாட்ட சங்கம் நிர்வகிக்கும்.

இலங்கையில் அடிமட்ட விளையாட்டுக்களை வளர்ப்பதிலும், விளையாட்டில் பாலின பன்மைத்துவத்தை முன்னின்று வழிநடத்திச் செல்லவும் நெஸ்லே மைலோவின் பயணத்தில், இலங்கையில் எதிர்காலத் தலைமுறைகளை வளப்படுத்தும் நோக்குடன் இந்நிகழ்வுக்கு அனுசரணையளிக்கின்றது.







